
DESTINY AND DIVINITY

வராங்கன் கதை



Asian Studies
600 119
dia.

DESTINY AND DIVINITY

வராங்கன் கதை

General Editors

Dr. SHU HIKOSAKA, Dr. G. JOHN SAMUEL

Editor

M. PARIMANAN

English Rendering

Dr. R. RAJARATHINAM

Institute of Asian Studies
Chemmancherry
Madras - 600 119
India.

DESTINY AND DIVINITY
வராங்கன் கதை

Editorial Assistance (English) - V. Ganesan

First Edition - March 1996

Publication No. 41

PRICE Rs. 200/- US $ 30

Copies can be had from

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Madras- 600 119. (India)
Phone (Office) 4928628, 4928662
Residence 4925085
FAX 91-44-4928959

Printed by PAVAI PRINTERS Pvt. Ltd., 142, J.J.K. Road,
Madras-600 014. Phone : 832441

A SYSTEM OF TRANSLITERATION OF TAMIL

Vowels

Short			Long		
அ	-	a	ஆ	-	ā
இ	-	i	ஈ	-	ī
உ	-	u	ஊ	-	ū
எ	-	e	ஏ	-	ē
ஒ	-	o	ஓ	-	ō

ஐ	ai
ஔ	au

CONSONANTS

Hard			Soft			Medial		
க்	-	k	ங்	-	ṅ	ய்	-	y
ச்	-	c	ஞ்	-	ñ	ர்	-	r
ட்	-	ṭ	ண்	-	ṇ	ல்	-	l
த்	-	t	ந்	-	n	வ்	-	v
ப்	-	p	ம்	-	m	ழ்	-	ḻ
ற்	-	ṟ	ன்	-	ṉ	ள்	-	ḷ
ஸ்	-	s	ஷ்	-	ṣ	ஹ்	-	h
			ஜ்	-	j			
			க்ஷ்	-	kṣ			

CONTENTS

பதிப்புரை

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி மிகவும் பழைமையானது; தூய்மை யானது; இனிமையானது; உயர்தனிச் செம்மொழியாக விளங்குவது. காலப் பழமை தெரியாத காலத்திலேயே செறிவும் செம்மையும் மிக்க இலக்கியம், இலக் கணம், இசை, நாடகம், மருத்துவம், மாந்திரீகம், சோதிடம் முதலான பலதுறை களிலும் மிகுதியான நூல்களைக் காலந்தோறும் பெற்று வந்துள்ளது. இத்தகைய நூல்கள் யாவும் மக்களின் வாய்மொழியாக விளங்கிப் பின் பனை ஓலைகளில் எழுதப்பட்டு ஏட்டுச் சுவடிகளாக உள்ளன.

இச்சுவடிகள் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளே நிலைபேறுடையன. மேலும் தட்ப் வெப்ப நிலைகளின் மாறுபாடுகளாலும், இயற்கையின் சீற்றத்தாலும், கரையான், இராமபாணம் முதலான பூச்சிகளாலும் இவை விரைந்து அழியும் இயல்பை உடையன. அவ்வாறு அழிந்து கொண்டிருக்கும் சுவடிகளை வெளிக் கொணரும் பணியில் பல நூலகங்கள், பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஈடுபட்டிருக்கின்றன. அவற்றுள் சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குவது ஆசிய வியல் ஆய்வு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வராங்கன் கதை என்ற இந்நூல் சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பட்டதாகும். இச்சுவடி 12.7.93 அன்று பிருதூர் யசோபத்திரநயினார் அவர்களிடமிருந்து பெறப்பட்டது. தற்போது ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் சுவடி நூலகத்தில் (எண் : 584) பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

புறஅமைப்பு

சுவடியின் மொத்த இதழ்கள் 51. இருபுறமும் இரண்டு வெற்று இதழ்களால் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது. இதழ்கள் சாதாரணப் பனை வகையைச் சார்ந்தவை. சுவடியின் நீளம் 43.6 செ.மீட்டர்; அகலம் 3 செ.மீட்டர். சுவடியைச் செம்மை யாகக் கட்டிவைத்தற்கேற்ப இதழ்களின் நடுவே துளை ஒன்று இடப்பட்டுள்ளது. மிகுதியான பயன்பாட்டின் காரணமாகவும், முறையான பராமரிப்பு இன்மை யாலும் 8 இதழ்களின் பகுதிகள் மிகவும் சிதைந்துள்ளன. இதழ்களின் உட்பகுதிகள் இராமபாணப் பூச்சிகளால் அரிக்கப்பட்டு ஆங்காங்கே சிதைந்துள்ளன. இத்தகு குறைபாடுகளினால் சுவடியின்கண் சிற்சில பாடலடிகளும், தொடர்களும், சொற் களும், எழுத்துக்களும் சிதைந்துள்ளன.

அக அமைப்பு

சுவடியில் நூல் தொடங்கும் இதழிற்கு முன்இதழ் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதல் பத்தியில் ''ஸ்ரீ ரஸ்து'' ''சுபமஸ்து'' ''ஆரோக்கிய மஸ்து'' என்றும், இரண்டாம் பத்தியிலும் மூன்றாம் பத்தியிலும் 'வந்தவாசி தாலுக்கா யெறமலூர் கிராமத்திலிருக்கும் ஆதிநாதநயினார் குமாரன் விருசபதாசன் வாசிக்

கின்ற வராங்கமகாராஜன் கதை யாராகிலும் யெடுத்துப் பார்த்து வாசித்துப் பார்த்து விட்டுப் புத்தகத்தை கொடுத்துவிட வேண்டியது' என்ற செய்தியும் கிரந்த எழுத்து கலந்து எழுதப்பட்டுள்ளது.

இச்சுவடியின் கூடுதல் அடிகள் 1011. சுவடியின் நீளம் இரண்டாகப் பிரிக் கப்பட்டு ஒருபக்கத்திற்கு இரண்டு பத்திகள் அமைந்துள்ளன. பாடல்களின் அடிகள் முறையாக எழுதப்பட்டுள்ளன. முதல் பத்தியில் 5 அடிகளும் இரண்டாம் பத்தியில் 5 அடிகளும் ஆக ஒரு இதழில் ஒரு பக்கத்திற்கு 10 அடிகள் இடம் பெறுகின்றன. இதழின் இடது ஓரத்தில் இதழின் எண்ணிக்கையைக் குறிக்கத் தமிழ் எண் கொடுக்கப்பட்டுள்ளது.

பதிப்பு முறை

இச்சுவடியின் முதல் 8 இதழ்கள் மிகவும் சிதிலமாக உள்ளன. எனவே சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள R. 330 எண்ணுள்ள, 9.3.1943இல் ப. துரைசாமி ஐயரால் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியைக் கொண்டு விடுபட்ட வரிகள் எடுத்தாளப்பட்டு நிறைவுசெய்யப்பட்டது.

''திங்கள் மும்மாரிபெய்ய'' என்ற தொடக்க வரியிலிருந்து ''விபரீத சிட்சையு மாய் வீறுபெறத் தான்பண்ணி'' என்று முடியும் 160 ஆவது அடிவரை உள்ள சிதைவான பகுதிகளை நீக்கி, தேவையான பகுதிகளை எடுத்து எழுதப்பட்டது. இதனால் நூல் முழுமை பெற்றதாகிறது.

பாவமைப்பு

வராங்கன் கதை, கதைப்பாடல் வடிவினது. அடிக்கு நான்கு சீர்கள் பெற்று இயல்பான நடையில் படிப்போர்க்கு இன்பம் பயக்குமாறு அமைந்துள்ளது. கதையின் தொடக்கம் முதல் இறுதிவரை பாடல் எண், தலைப்பு, உட்தலைப்பு இல்லாமல் தொடர்ந்து கதை சொல்லப்பட்டு வருகிறது.

''ஒத்த வடித்தாய் உலையா மரபொடு
நிற்பது தானே நிலைமண் டிலமே'' (யாப்பருங்கலக்காரிகை-ப-89)

என்று நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு இலக்கணம் வகுத்துள்ளார் காக்கைப் பாடினியார். இவ்விலக்கண முறைப்படி எல்லா வடிவும் நாற்சீர் அடியாய் வருவது இக்கதைப் பாடலின் சிறப்பம்சமாகும்.

முறை

சுவடியின் மூலவடிவத்தைத் தம் விருப்பப்படி மாற்றுவதற்குப் பதிப்பாசிரி யருக்கு எந்தவித உரிமையும் இல்லை.

முன்னோர் மொழி பொருளேயன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவர்பொற்புலவர் — அன்னோர்
நடையிடைத் தம்வழியே நாட்டி மொழிமாற்றல்
கடையிடையர் மாட்டுவினை காண்.

என்ற வெண்பாவும் மேற்கூறிய கருத்தை வலியுறுத்துகின்றன. இருப்பினும் படியெடுப்பவரால் செய்யப்பட்ட பிழைகளை நீக்கவேண்டியது பதிப்பாசிரியரின் கடமை என்பதால் சில இடங்களில் நேரும் எழுத்துப்பிழை, சந்திப்பிழை, ர, ற, ல, ள, ழ, ண, ந, ன, என்னும் எழுத்து வேறுபாடுகள் இவற்றை நீக்குதலும், வடசொற்களை நீக்கித் தமிழ் படுத்துவதும், முன்னுக்குப் பின் முரணான அடிகளை மாற்றி அமைப்பதும், மிகையானவற்றை நீக்குவதும், விடுபட்ட அடிகளை பிற சுவடியின் உதவியால் சேர்த்து நிறைவு செய்வது போன்ற பல திருத்தங்களைச் செய்வது பதிப்பாசிரியரின் கடமை என்பதால் அவை முறையே மேற்கொள்ளப் பட்டன.

எழுத்துப்பிழை

எழுத்துக்கள் ஓரளவு படிக்கக் கூடியனவாக உள்ளன். சுவடியைப் படியெடுத்த வருக்குப் போதிய மொழியறிவு இல்லாமையால். எழுத்துப்பிழை மிகுதியாக உள்ளது. அவை கீழே கொடுக்கப்படுகின்றன.

தெருவெல்லாம் — தெருவில்லாம் 51
நலம் பெறவே — நலம் பிறவே 57

என்று பிழையாக எழுதப்பட்டுள்ளது. இதுபோன்று அதிகமான பிழைகள் காணப் படுகின்றன. அவை திருத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

ர—ற, ல—ழ—ள, ண—ன ஆகிய இன எழுத்துக்களுக்கு இடையே வேறு பாடுகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை. ஓரெழுத்து வரவேண்டிய இடத்தில் பிறிதோர் எழுத்து மயங்கி நிற்கின்றது.

நெறிகாட்டி	— நெரிகாட்டி	576
பொறுக்காமல்	— பொருக்காமல்	743
கொல்லாவிரதம்	— கொல்லா விறதம்	3
தருமம்	— தற்மம்	4
லலிதபுரம்	— லளித்தபுறம்	593
குளவி	— குழவி	957
செண்டு	— சென்று	297
தானுரைப்பார்	— தாணுரைப்பார்	844
கனமான	— கனமாந	615
மனமகிழ்ந்து	— மநமகிழ்ந்து	176
விலைப்பெண்ணே	— விலைப்பென்னே	462
எண்ணி யெண்ணி	— என்னியென்னி	515

பேச்சு வழக்கு

சுற்றுமதில்	— சுத்துமதில்	30
பதித்தாற்போல்	— பதிச்சாப்போல்	76

கிரந்த எழுத்துக்கள்

கா்ட்சிபெரிதுடைய	— காக்ஷிபெருதுடைய	82
மகிழ்ச்சியுடன்	— மகிக்ஷியுடன்	94
சாத்திரம்	— ஶாஷி	560
ப்ராணன்	— ஹுணன் (த)	928

முடிவு

ஆசிரியர் வாழ்த்துப் பாடலைப் பாடிக் கதையை முடித்திருக்கிறார். அதற்கு அடுத்து ஓம் ஸ்ரீ ஜினாய நமஹ

ஸ்ரீமத் பஞ்ச குருதேவேப்யோம் நமஹ
அஷ்ட்டாவதோஷர ஹிதாய நமஹ
ஸ்ரீ ரஸ்த்து சுபமஸ்த்து
ஆரோக்கிய மஸ்த்து
தீர்க்காய ரஸ்த்து

என்ற அடிகள் காணப்படுகின்றன. இறுதியில் 'பிரோமோதூத வருடம் தைமாதம் 21 ஆம் தேதி எழுதி முடிந்தது' என்று முடித்துள்ளார்.

பதிப்பாய்வின் போது செய்யப்பட்ட ஒழுங்குகள்

1. செய்யுள் அடிகளும் சீர்களும் பிரிக்கப்பட்டு உரிய வடிவில் தரப்பட்டுள்ளன.
2. சுவடியின் கண் விடுபட்டனவும் சிதைவுற்றனவுமாகிய எழுத்துக்களும் சொற்களும் ஆய்வாளரின் உய்த்துணர்வால் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட நிலையில் அவை அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.
3. உட்தலைப்பு: கதையோட்டத்திற்கு ஏற்ப, படிப்பவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் பதிப்பில் கதைத்திருப்பங்களும் வருணனைகளும் வருமிடங்களில் இடையிடையே பதிப்பாசிரியரால் தலைப்புகள் தரப்பட்டுள்ளன.
4. அடி எண்கள்: அடிகளின் வரிசை எண்கள், தெளிவின் பொருட்டு, ஐந்தைந்தாகத் தொடர்ந்து தரப்பட்டுள்ளன.
5. எழுத்து, அடிகளின் முதல் எழுத்தாக அகர, இகர, உகரங்கள் இடம்பெறும் நிலையில் அவை முறையே ய, யி, யு என்றவாறு யகர ஒற்றோடு கூடிய உயிர் மெய்களாக பயின்று வந்துள்ளன. அவை திருத்தப்பட்டு உரிய உயிர்எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
6. எகர, ஒகர குறில், நெடில்கள் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.
7. மெய்யெழுத்துக்கள் புள்ளியிடப்பட்டுள்ளன.
8. மிகக்கூடாத இடங்களில் மிகுந்திருந்த தேவையற்ற ஒற்றுகள் நீக்கப்பட்டுள்ளன.
9. ஒற்றுகள் இடம் பெறாதிருந்த, தேவையான இடங்களில் ஒற்றுகள் இடப்பட்டுள்ளன.

10. ந—ன, ன—ண, ர—ற; ழ—ள—ல முதலிய எழுத்துக்கள் தம்முள் மயங்கி வந்துள்ள இடங்கள் உரிய முறையில் திருத்தப்பட்டுள்ளன.

11. த்த—ற்றவாகவும் ற்ற—த்தவாகவும் பொருளறிந்து மாற்றப்பட்டுள்ளன.

12. சீர்திருத்த எழுத்து முறை பின்பற்றப்பட்டுள்ளது.

13. சுவடியில் பயின்று வந்துள்ள பேச்சு வழக்குச் சொற்கள் இலக்கிய வழக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன. சுவடிச் சொற்கள் நூலின் இறுதிப் பகுதியில் கொடுக்கப் பட்டுள்ளன.

14. சுவடியில் இடம்பெறும் கிரந்த எழுத்துக்கள் தமிழ்ப் படுத்தப்பட்டுள்ளன. சுவடியில் இடம்பெறும் கிரந்த எழுத்துக்கள் நூலின் இறுதிப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

15. சுவடியில் சிதைந்துபோன பகுதியில் உள்ள சொற்கள் வேறு சுவடியின் உதவியால் நிரப்பப்பட்டுள்ளன.

16. பாடவேறுபாடுகள் நூலின் இறுதிப் பகுதியில் தரப்பட்டுள்ளன.

17. சுவடியின் முதல் இதழில் விராங்க மகாராஜன் கதை என்று குறிப்பிட்டு இருக்கின்றது. அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலக ஏட்டில் வராங்கன் கதை என்று எழுதப்பட்டுள்ளது. மேலும் இதன் மூல நூலில் வராங்கன் சரிதம் என்று இருக்கின்றது. எனவே, இந்நூலுக்கு வராங்கன் கதை என்று தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

18. சமண இலக்கியமான வராங்கன் கதை என்ற சுவடி நூலை அறிந்து கொள் ளும் முன் சமண சமயத்தின் தோற்றம், தீர்த்தங்கரர்கள், சமயத் தத்துவம், இல்லற, துறவற நெறிமுறைகள், தமிழ்நாட்டிற்குச் சமண சமயம் வந்த வரலாறு, சிறப்படைந்த நிலை, சமயப் போரில் சமண சமயத்தின் நிலை, குன்றிய வரலாறு, தற்கால நிலை முதலான பல செய்திகளை அறிந்து கொள்வது அவசியமாகிறது. எனவே அவை சமணம் அன்றும் இன்றும் என்ற பகுதியில் சொல்லப் படுகின்றன.

நன்றி

வராங்கன் கதை என்னும் தமிழ்ச் சுவடியைப் பதிப்பிக்கும் பணியை அளித்து என்னை ஊக்கப்படுத்திய நிறுவன இயக்குநர்கள் டாக்டர் ஜி. ஜான்சாமுவேல், டாக்டர் ஷு. ஹிகோசக ஆகிய அறிஞர் பெருமக்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் தொடர்பான பல்வேறு கருத்துக்களை வழங்கிய சுவடியியல் துறைத் தலைவர் டாக்டர் பூ. சுப்பிரமணியம் அவர்களுக்கு நான் என்றும் நன்றியுடையேன்.

சமண சமயம், வராங்கன் சரித்திரம் தொடர்பான செய்திகளையும், நூல் களையும் வழங்கிய திரு. மல்லிநாத் ஜெயின் சாஸ்திரி அவர்களுக்கும், வராங்கன் சரித்திர புராணக்கதை தொடர்பான செய்திகளை வழங்கிய அருகன் தத்துவ இதழாசிரியர் புலவர் அ. பானுராசனார் அவர்களுக்கும், இந்நூல் சிறப்புற அமைய துணை நின்ற நண்பர் டாக்டர் இரா. ஜெயராமன் அவர்களுக்கும், கன்னட நூல்களிலிருந்து செய்திகள் திரட்டித்தந்த திரு. பி. அச்சுதபட் அவர் களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சுப்படி திருத்தப் பணிகளில் உதவிய செல்வி ச. சுமதி, செல்வன் கி. பன்னீர் செல்வம், திரு. க. சிதம்பரம், திரு. சு. வெங்கடேஸ்வரன், அவர்களுக் கும், சுவடிகளையும் நூல்களையும் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கிய நிறுவன நூலகக் காப்பாளர் திருமதி ச. சாந்தகுமாரி அவர்களுக்கும், அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகக் காப்பாளர் டாக்டர் இரா. சவுந்தர பாண்டியன் அவர் களுக்கும், தட்டச்சு செய்து கொடுத்த திருமதி நே. உமாராணி அவர்களுக்கும், அட்டைப்படம் உருவாக்கிய திரு. அ. செ. நடராசன் அவர்களுக்கும். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தார்க்கும், மற்றும் இந்நூல் சிறப்புற அமைய உதவிய பலருக்கும் என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

மு. பரிமணன்

Editor's Note

Our Tamil language, sweeter than ambrosia, is very ancient, pure and sweet. It is unique as a language of perfection. Even in the unknown past, it had the distinction of possessing or acquiring plenty of profound and perfect works in literature, grammar, music, drama, medicine, magic and astrology etc. All those works, disseminated orally in the beginning were later transcribed in palm-leaf manuscripts and remained so for use by posterity.

These palm-leaf manuscripts can last only for three hundred years. Moreover they are quickly perishable on account of fluctuations in temperature, natural calamities, and the onslaught of insects such as termites and moths. Many libraries, universities and institutions are however engaged in the retrieval of such perishing palm-leaf manuscripts and publishing them. Among such institutions the Institute of Asian Studies Madras, occupies a pride of place.

This work entitled Varānkan Katai (Destiny and Divinity) has been published from palm-leaf manuscripts. This manuscript was acquired on 12th July 1993 from Yacōpattira Nainār of Pirutūr. It is now kept and preserved at the Institute of Asian Studies Library (Registered Number 584).

The external features of the manuscript

The total number of leaves in the manuscript is 51. It is tied with two blank leaves on both (the top and bottom) sides. The palmyra leaves belong to the ordinary variety. The length of the leaf is 43.6 cm and the width is 3 cm. The centre of each leaf contains a punched hole to enable the proper tying of the leaves in a compact manner. On account of frequent handling and lack of proper maintenance 8 leaves are found in a highly damaged condition. The inner sides of the leaves have been eaten up by *Irāmapāṇam* insects. This has resulted in the distortion of certain lines, words and letters in the poem.

The internal contents

In the manuscript the leaf before the one containing the beginning of the work, is divided into three parts. The first row contains the words *Sri Rastu, Cupamastu* and *Arōkkiamastu*. They respectively convey the best wishes for wealth, joy and health. In the second and third rows is written the following message in Tamil mixed with Granta lipi.

'The story of Varāṅkamahārācaṉ being read by Virucapatācaṉ soṉ of Ātinātanaiṉār, should be returned after reading by whosoever takes it for perusal.'

The total number of lines in this manuscript is 1011. The manuscript is divided into two parts lengthwise. Each page contains two rows and each leaf contains 10 lines at the rate of five lines per row. In the left corner of each leaf the Tamil numeral is given to indicate the page number or leaf number.

The mode of publication

As the first 8 leaves were in a badly damaged condition, the hand-written copy (paper manuscript) of the palm-leaf manuscript taken on 9th March 1943 by P. Turaicāmi Iyer and available in the Government Oriental Manuscripts Library, (No. R. 330) was referred to for supplying the missing lines in the palm-leaf manuscript. The transcription was completed accordingly. The lines thus supplied begin from the first line starting with 'Tiṅkaḷ Mummāri peyya' to the 160th line which reads 'Viparīta Ciṭcaiyumāy Viṟu peṟaṭṭāṉ paṇṇi.' The damaged portions in the said passage (11 1-160) were removed and the needed portions were supplied from the paper copy. This was the process adopted for the completion of the work.

The structure of the poem

Varāṅkaṉ Katai is in the form of a ballad. Each line contains 4 *cīrs* (metrical feet) and the style is natural and hence a reader's delight. It is a continuous narration without any attempt at numbering the poems or providing headings and subheadings.

The uniform adoption of 4 *cīrs* (metrical feet) for all the lines in this ballad is a special feature. This poetic practice is quite commendable according to *Yāpparuṅkalakkārikai*

(Page 89)

'otta vaṭittāy ulaiyā marapoṭu
niṟpatu tāṉē nilai maṇṭilamē'

In these lines Kākkaippāṭiṉiyār has prescribed uniform number of *cīrs* for *nilaimaṇṭila āciriyappā* and this rule has been followed commendably in this ballad.

The mode

The editor or publisher of any work has no right to alter the original at his will. Such an alteration of the original is considered improper and foul. The following quatrain stresses this principle.

muṉṉōr moḻi poruḷēyaṉṟi yavar moḻiyum
poṉṉēpōṟ pōṟṟuvar poṟpulavar — aṉṉōr
naṭaiyiṭait tamvaḻiyē nāṭṭi moḻimāṟṟal
kaṭaiyiṭaiyar māṭṭuviṉai kāṇ

(Genuine poets or scholars consider not only the contents but also the language and style of the original authors quite precious like gold. Changing the style and language at one's will or way is the practice of the last grade or mediocre people).

However the errors committed by the copiers of the manuscript have to be rectified by the editor. Accordingly the errors or lapses in respect of letters, *Canti* (joining change between two letters), distinction to be observed in letters ra, ṟa, la, ḷa, ḻa, ṉa, na, ṇa had to be rectified. Sanskrit words had to be substituted by their Tamil equivalents. Contradictory or inconsistent lines had to be recast. Lines found to be in excess had to be deleted, and omitted lines had to be supplied by referring to other manuscripts. All these corrections were made by the editor.

Errors in letters

The letters are to a certain extent legible and readable. As the person who copied the manuscript did not possess sufficient knowledge of the language, there are plenty of errors in respect of letters.

Examples :

Teruvellām is found as Teruvillām	(51)
Nalam peṟavē as Nalam piṟavē	(57)

The distinction between the letters of *Valliṉam, Melliṉam* and *Iṭaiyiṉam* categories, is not observed. Hence the error known as *eḻuttu mayakkam* is found in profusion.

Examples :

Neṟikāṭṭi	—	Nerikāṭṭi	(576)
Poṟukkāmal	—	Porukkāmal	(743)
Kollāviratam	—	Kollāviṟatam	(3)
Tarumam	—	Taṟmam	(4)
Lalitapuram	—	Laḷittapuṟam	(593)
Kuḷavi	—	Kuḻavi	(957)
Ceṇṭu	—	Ceṉṟu	(297)
Tāṉuraippār	—	Taṉuraippār	(844)
Kaṉamāṉa	—	Kaṉamāna	(615)
Maṉamakiḻntu	—	Manamakiḻntu	(176)
Vilaipeṇṇē	—	Vilaipeṉṉē	(462)
Eṇṇi eṇṇi	—	Eṉṉi eṉṉi	(515)

Dialectal words used

Cuṟṟumatil	—	Cuttumatil	(30)
Patittāṟpōl	—	Paticcāppōl	(76)

Kiranta lipi (letters)

Kāṭciperituṭaiya	— Kashiperututaiya	(82)
Makilcciyutan	— Mahishiyutan	(94)
Cāttiram	— Sāstram	(560)
Pirāṇan	— Prāṇan	(928)

Conclusion

The author ends the story with a benedictory song. Then the following lines are found as —

ōmsri jināya namaha
srimat pañca kurutēvēpyōm namaha
ashṭavatōshara hitāya namaha
srirastu subamastu
arōkya mastu
tirkkāya rastu.

Finally it is stated that the work was written and completed on the 21st day of the Tamil month *Tai* in the Tamil year *Piramōtūta*.

The rectifications made while editing the manuscript

1. Poem — The lines and *Cirs* (metrical feet) were properly divided and arranged.
2. The omitted and distorted letters and words were supplied at the editor's discretion based on proper research instinct. Such resurrected or recast letters and words are given within brackets.
3. Headings: According to the narrative course of the story and to suit the twists, turns and descriptions therein, appropriate headings have been given by the editor to enable the readers follow the story-line easily.
4. Numbering the lines: The serial numbers of the lines are given, starting from 5 and proceeding in its serial multiples.
5. Letters: The first *Uyirmey* (vowel consonant combination) letters of several lines found in the manuscript such as ya, yi and yu have been corrected and substituted by vowels a, i, u, respectively.
6. The *Kuṟil* (short vowel) and *Neṭil* (long vowel) in respect of the vowels have been separately shown.
7. Consonants (*meyyeḻuttukaḷ*) have been dotted.
8. The unnecessary *oṟṟus* (joining consonants between letters) have been removed.
9. The needed *oṟṟus* (consonant) have been supplied in places where they are needed but not found.

10. The errors of *eḻuttu mayakkam* or non-observance of the clear distinction between the letters na — ṉa; ṉa — ṇa, ra — ṟa, ḻa — ḷa — la, have been meticulously rectified.
11. The letter combination tta has been changed as ṟṟa and vice-versa according to the correct meanings of the words concerned.
12. The reformed Tamil alphabetical system has been followed in editing the manuscript.
13. The dialectal words found in the manuscript have been replaced by suitable literary words and the dialectal words in the original manuscript have been appended.
14. Letters in *kiranta lipi* found in the manuscript have been converted into their Tamil equivalents and the *kiranta lipi* letters in the original have also been appended.
15. The distorted or missing words have been supplied by referring to the texts in other manuscripts.
16. Emendations in the text have been given in the appendices.
17. The title of the story is mentioned as *Virāṅkamahārājaṉ Katai* in the first leaf of the manuscript. In the manuscript available at the Government Oriental Manuscripts Library, Madras, it is mentioned as *Varāṅkaṉ Katai*. In the Sanskrit original the title is *Varāṅkaṉ Caritam*. Hence in the present edition the title *Varāṅkaṉ Katai* has been given.
18. A proper understanding of *Varāṅkaṉ Katai*, calls for the need to learn the origin of Jainism, Tīrttaṅkarars, the philosophy of Jainism, the cardinal values of material and spiritual life, the growth of Jainism and its zenith in Tamil Nadu, its plight during religious clashes, and its present status in Tamil Nadu, which have been discussed in detail under "Jainism Then and Now."

ACKNOWLEDGEMENT

At the outset I express my deep sense of gratitude to Dr. G. John Samuel and Dr. Shu Hikosaka the founder directors of the Institute of Asian Studies, who kindly assigned to me the work of editing of Varāṅkaṉ Katai, a Tamil ballad in Palm-leaf Manuscript. These profound scholars greatly enthused me in the project and enabled me to complete it successfully.

I am grateful to Dr. P. Subramaniam, the Head of the Department of Manuscriptology for his valuable suggestions and guidance in publishing this work.

I sincerely thank Thiru Mallinath Jain Sastri who provided me the necessary information and literature on Jaina religion and Varāṅkaṉ Carittiram. I also thank Pulavar A. Banurasanar (Editor, Arukan) who enlightened me on the historical and legendary aspects of Varāṅkaṉ Katai. I warmly appreciate the very useful service rendered by my friends Dr. R. Jayaraman and Mr. P. Achutha Bhat in bringing out this publication quite impressively.

Miss. C. Sumathi, Mr. K. Panneerselvan, Mr. K. Chidambaram and Mr. S. Venkateswaran helped me in the proof correction of the printed text. I thank them all whole heartedly. The Librarian of the Institute of Asian Studies, Mrs. S. Santhakumari, the Librarian of the Government Oriental Manuscripts Library Dr. R. Sowndarapandian and the Librarian of I.I.T.S. kindly permitted me to avail myself of the manuscripts and books in their respective libraries. I am indebted to them for their timely help.

I thank Mrs. N. Uma Rani, the typist who executed her work neatly and efficiently and Mr. A. S. Natarajan who designed the beautiful pictorial representation on the front wrapper of the book. My thanks are due to Pavai Printers who have done an excellent job. I gratefully remember all those who have in one way or other helped me in this challenging literary project.

M. Parimanan

சமணம் அன்றும் இன்றும்

சமண சமயத் தோற்றம்

உலகில் தோன்றிய சமயங்களில் சமண சமயம் மிகப்பழமையானது. இது இந்தியாவில் தோன்றிய சமயங்களுள் தனித்தியங்குவதும் மிகவும் தொன்மை யானதும் ஆகும். சமண் சமயம் மகாவீரரால் தோற்றுவிக்கப்பட்டது என்று சொல்வது தவறு. சமண சமயம் என்பது வேதகாலச் சமயங்களுக்கு எதிராக எழுந்த ஒன்றே என்று கொள்வதும் சரியன்று. சமண சமயம் முற்றிலும் தனித் தியங்கும் சமயம் என்பதே உண்மை என்று மோகன்லால் மேத்தா சமணமும் பண்பாடும் (Jaina Culture PP. 5-6) என்னும் ஆங்கில நூலில் கூறுகிறார்.

சமணர் என்றால் துறவிகள் என்று பொருள். துறவை வற்புறுத்திக் கூறி, துறவு பூண்டோரே வீடுபெறுவர் என்று இந்த மதம் கூறுகிறது. எனவே, துறவு எனப்பொருள்படும் சமணம் என்னும் பெயர் இந்த மதத்திற்குச் சிறப்புப் பெயராக வழங்கப்படுகிறது. சமண சமயத்திற்குப் பல பெயர்கள் உள்ளன. அவை சைன சமயம், ஆருகத சமயம், நிகண்ட சமயம், அநேகாந்த சமயம் அல்லது ஸியாத்வாத சமயம் என்பன.

தீர்த்தங்கரர்கள்

சமணசமயக் கொள்கைகளை உலகத்தில் பரவச் செய்வதற்காகத் தீர்த்தங்கரர் கள் தோன்றுகின்றார்கள் என்பது சமண சமயத்தினர் நம்பிக்கையாகும்.

தீர்த்தங்கரர் என்ற வடசொல்லுக்குப் பிறவிப் பெருங்கடலில் உழன்று தவிக்கும் ஆன்மாக்களைக் கரையேற்றுபவர் என்பது பொருள்; தீர்த்தம் என்பது நீர் நிலைகளையும், கரர் என்பது கரையேற்றுவதையும் குறிக்கும்.

தீர்த்தங்கரர்களின் உயரமும், ஆயுளும், சின்னமும் சமண நூல்களில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளன. (ஒருவில் என்பது 160 செ.மீட்டர் அல்லது 8 சாண்) (ஒரு முழம் என்பது 45 செ.மீட்டர்)

தீர்த்தங்கரர் பெயர்	உயரம்	ஆயுள்			சின்னம்
1. விருசபதேவர் (ஆதிநாதர், ஆதி பகவன்)	500 வில்	84	லட்சபூர்வ	ஆண்டு	எருது
2. அஜித நாதர்	450 வில்	72	,,	,,	யானை
3. சம்பவநாதர்	400 வில்	60	,,	,,	குதிரை
4. அபிநந்தனர்	350 வில்	50	,,	,,	குரங்கு
5. சுமதிநாதர்	300 வில்	40	,,	,,	சக்கரவாளபட்சி
6. பத்மபிரபர்	250 வில்	30	,,	,,	வெண்தாமரை

7. சுபார்ஸ்வநாதர்	200 வில்	20	,,	,,	ஸ்வஸ்திகம்
8. சந்திரபிரபர்	150 வில்	10	,,	,,	பிறைச்சந்திரன்
9. புஷ்பதந்தர்	100 வில்	2	,,	,,	முதலை
10. சீதளநாதர்	90 வில்	1	,,	,,	கல்பவிருட்சம்
11. ஸ்ரேயாம்ச நாதர்	80 வில்	80	லட்சம்	ஆண்டு	காண்டாமிருகம்
12. வாசு பூஜ்யர்	70 வில்	72	,,	,,	எருமை
13. விமலநாதர்	60 வில்	60	,,	,,	பன்றி
14. அளந்தநாதர்	50 வில்	30	,,	,,	முள்ளம்பன்றி
15. தர்மநாதர்	45 வில்	10	,,	,,	வஜ்ஜிரதண்டம்
16. சாந்தி நாதர்	40 வில்	1	,,	,,	மான்
17. குந்துநாதர்	35 வில்	95	ஆயிரம்	ஆண்டு	ஆடு
18. அரநாதர்	30 வில்	84	,,	,,	மீன்
19. மல்லிநாதர்	25 வில்	55	,,	,,	கலசம்
20. முனிசுவிரதநாதர்	20 வில்	20	,,	,,	ஆமை
21. நமிநாதர்	15 வில்	10	,,	,,	நீலத்தாமரை
22. நேமிநாதர்	10 வில்	1	,,	,,	சங்கு
23. பார்சுவநாதர்	9 முழம்	100	ஆண்டு		பாம்பு
24. மகாவீரர் (வர்த்தமானர்)	7 முழம்	72	ஆண்டு		சிங்கம்

பிறந்த இடங்கள்

1, 2, 4, 5, 14 ஆவது தீர்த்தங்கரர்கள் அயோத்தியிலும், 3 ஆவது தீர்த்தங்கரர் ஸ்ராவஸ்தியிலும், 6 ஆவது தீர்த்தங்கரர் கௌசாம்பியிலும் 7, 23 ஆவது தீர்த்தங்கரர்கள் வாரணாசியிலும் 8 ஆவது தீர்த்தங்கரர் சந்திரபுரியிலும் 9 ஆவது தீர்த்தங்கரர் காகந்தியிலும் 10,13 ஆவது தீர்த்தங்கரர்கள் பத்தளபுரத்திலும் 11 ஆவது தீர்த்தங்கரர் சிம்மபுரியிலும் 12 ஆவது தீர்த்தங்கரர் சம்பாபுரியிலும் 15 ஆவது தீர்த்தங்கரர் இரத்தினபுரியிலும் 16, 17, 18 ஆவது தீர்த்தங்கரர்கள் அஸ்தினாபுரத்திலும், 19, 21 ஆவது தீர்த்தங்கரர்கள் மிதிலாபுரத்திலும் 20 ஆவது தீர்த்தங்கரர் இராசகிருதத்திலும் 22 ஆவது தீர்த்தங்கரர் சௌரீபுரத்திலும், 24 ஆவது தீர்த்தங்கரர் குண்டலபுரத்திலும் தோன்றினார்கள் என்ற செய்தி சமண நூல்களில் காணப்படுகிறது. மேலும், இத்தீர்த்தங்கரர்கள் அனைவரும் வட இந்தியாவில் தோன்றி மண்ணுலக மக்களுக்குப் பல்வேறு அறங்களைப் போதித்துப் பேரின்ப வாழ்வுக்கு வழி காட்டியவர்கள். இவர்களில் ஒரு தீர்த்தங்கரர் கூடத் தமிழ்நாட்டில் பிறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சமணசமயக் கொள்கைகளை விருசபதேவர் முதன்முதலில் உலகத்தில் உருவாக்கினார் என்றும் அவருக்குப்பின் வந்த தீர்த்தங்கரர்களும் இந்த மதத்தைப் போதித்தார்கள் என்றும் சமண நூல்கள் கூறுகின்றன.

''அகர முதல எழுத்தெல்லாம் **ஆதி**
பகவன் முதற்றே உலகு.'' (திருக்குறள்-1)

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

''போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னுவாரே'' (யாப்பருங்கலக்காரிகை. ப-21)

என்று குணசாகரர் கூறுகிறார்.

ஆனால், வரலாற்று ஆசிரியர்கள் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரராகிய பார்சுவ நாதர் சமண மதத்தை உருவாக்கினார் என்றும், அவருக்குப் பின்வந்த வர்த்தமான மகாவீரர் இந்த மதத்தைச் சீர்திருத்தியமைத்தார் என்றும் கூறுகிறார்கள்.

ஆய்வு நோக்கில் பார்த்தால் தீர்த்தங்கரர்கள் அனைவரும் உண்மையில் உயிர்வாழ்ந்த பெரியோர்கள் என்பது புலப்படும். பண்டைக் காலத்திலிருந்து சமயப் பெரியோர்கள் மீது பிற்காலத்தவர் இயற்கைக்கு மீறிய இயல்புகளைக் கற்பித்துக் கூறுவது வழக்கம். இது எல்லா சமயங்களுக்கும் இயல்பு. தம்முடைய சமயப் பெரியோர்களின் பெருமை, ஆற்றல், சிறப்பு, தெய்வீகத்தன்மை முதலிய வற்றை அதிகப்படுத்த வேண்டும் என்னும் சமய ஆர்வத்தினால் ஒவ்வொரு சமயத்தாரும் நத்தம் சமயப் பெரியோரைப் பற்றிப் பலவிதச் செய்திகளைக் கற் பித்து வருகின்றார்கள். இயற்கைக்கு மாறுபட்ட இக்கற்பனைகளை சமயப்பற்று என ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் அவர்கள் உண்மையில் உலகத்தில் வாழ்ந்திருந்த வர்கள் என்பது புலனாகும்.

தீர்த்தங்கரர்கள் அனைவரும் சரித்திரகாலத்துக்கு உட்பட்டவர் அல்லர்: முதல் பத்தொன்பது தீர்த்தங்கரர்கள் சரித்திர காலத்துக்கு முற்பட்டவராகக் காணப படுகின்றார்கள். கடைசி ஐந்து தீர்த்தங்கரராகிய முனிசுவிரதநாதர், நமிநாதர், நேமிநாதர், பார்சுவநாதர், மகாவீரர் என்பவர்கள் சரித்திர காலத்துக்குட்பட்ட வராவர்.

இராமாயணக்கதையையும், பாரதக் கதையையும் சரித்திரக் கதைகளாக ஒப்புக் கொண்டு வரலாற்று ஆசிரியர்கள் இந்திய சரித்திரத்தை எழுதிவருகின்றார்கள். இந்திய சரித்திரத்தின் தொடக்கத்தில் இராமாயண, பாரதக் கதைகள் கூறப்படு கின்றன. இக்கதைகள் இந்துக்களுகக (சைவ, வைணவர்) உள்ளன போலவே சமணர்களுக்கும் உள்ளன. இந்து, சமண இராமாயண, பாரதக் கதைகளில் சிறுசிறு மாறுதல்கள் காணப்படுகிறபோதிலும் இரண்டும் ஒரே கதைகளாகும். இராமாயண மும் பாரதமும் இந்திய சரித்திரத்தில் இடம்பெற்று இருப்பதால் இராமாயண காலத்தில் இருந்த தீர்த்தங்கரர்களாகிய முனிசுவிரதநாதரும், நமிநாதரும, நேமி நாதரும், பார்சுவநாதரும், மகாவீரரும் சரித்திர காலத்தில் இருந்தவர்கள் ஆவாரகள்.

இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதர். கி.மு. 817 முதல் கி.மு. 717 வரை 100 ஆண்டுகள் வாழ்ந்தவர். இவருக்குப்பின் 250 ஆண்டு

களுக்குப் பிறகு வர்த்தமான மகாவீரர் கி.மு. 599 முதல் கி.மு. 527 வரை 72 ஆண்டுகள் வாழ்ந்தவர். மகாவீரர் காலத்திலே பௌத்த சமயத்தை உண்டாக்கிய கௌதம புத்தரும் ஆசிவக சமயத்தை உண்டாக்கிய மற்கலியும் இருந்தார்கள். இவர்களில் மகாவீரர் வயதில் மூத்தவர்; மற்கலி மகாவீரருடன் ஆறு ஆண்டுகள் ஒருங்கிருந்தார். பிறகு, மகாவீரருடன் மாறுபட்டு ஆசீவகம் என்னும் புதிய சமயத்தை உருவாக்கினார். இதனால், பௌத்த சமயம், ஆசீவக சமயம் மகாவீரர் காலத்தில் தோன்றிய மதங்கள் என்பதும் இவ்விரு சமயங்களுக்கு முற்பட்டது சமண சமயம் என்பதும் மயிலை சீனிவேங்கடசாமி அவர்களின் கருத்தாகும்.

சமண சமயத்தின் பிரிவுகள்

சமண சமயம் பிற்காலத்தில் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது. அவை, திகம்பர சமணம், சுவேதாம்பர சமணம் என்பன.

திகம்பர சமணத்துறவிகள் மட்டும் ஆடை அணிய மாட்டார்கள்; கௌபீனமும் உடுத்த மாட்டார்கள். திசைகளையே ஆடைகளாகக் கொண்டவர்கள்; திகம்பரர் கள். திக்கு + அம்பரம் — திகம்பரம் என்பது பொருள். இவர்கள் கோயில்களில் உள்ள தீர்த்தங்கரர் திருவுருவங்களும் ஆடையுடுத்தப் பெறாமல் இருக்கும்.

சுவேதாம்பர சமணர்களில் இரு பிரிவுகள் உள்ளன. 1. சுவேதாம்பரர் 2. சுவேதாம்பர ஸ்தானகவாசி என்பன.

சுவேதாம்பரச் சமணத் துறவிகள் வெண்மை நிற ஆடை அணிவர். இவர்கள் தமது ஆலயங்களில் உள்ள தீர்த்தங்கரர் திருவுருவங்களுக்கும் வெண்ணிற ஆடை அணிவிப்பார்கள். சுவேதாம்பரம் என்பதற்கு வெண்ணிற ஆடை என்பது பொருள்.

சுவேதாம்பர ஸ்தானகவாசி சமணர்கள், சுவேதாம்பரர்களைப் போலவே வெண்மை நிற ஆடை அணிவர். ஆனால், இவர்களுக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லை. எனவே, அவர்கள் தமது கோயில்களில் சமண ஆகம நூல் களை வைத்து, அவற்றையே தீர்த்தங்கரராகவும், அருகக்கடவுளாகவும் நினைத்து, வணங்குவார்கள். இவர்களில் தேராபந்தி என்ற ஒரு பிரிவும் உண்டு அவர்களும் ஸ்தானகவாசி சமணர்களைப் போலவே உள்ளவர்கள்.

சுவேதாம்பர சமணர்கள், சுவேதாம்பர ஸ்தானகவாசி சமணர்கள் என்ற இரு பிரிவினரும் தமிழகத்தின் பல நகரங்களிலும் இருக்கின்றார்கள். திகம்பர சமணர் கள் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

2. சமண சமயத் தத்துவம்

சமண சமயத் தத்துவத்தில் ஒன்பது பொருள்கள் கூறப்படுகின்றன. இவற்றை நவ பதார்த்தம் என்பர். அவை; உயிர், உயிரல்லது, புண்ணியம், பாவம், ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு, கட்டு, வீடு என்பனவாம். இவற்றை முறையே ஜீவன், அஜீவன், புண்ணியம், பாவம், ஆஸ்ரவம், ஸம்வரை, நிர்ஜரை, பந்தம், மோட்சம் என்றும் கூறுவர்.

''உயிரும் உயிரல்லதும் புண்ணியம் பாவம் ஊற்றும்
செயிர்தீர் செறிப்பும் உதிர்ப்பும் கட்டும் வீடும் உற்ற
துயர்தீர்க்கும் தூயநெறியும் சுருக்காய் யுரைப்பேன்
மயல் திர்ந்த காட்சியுடையோய் இது கேண்மதித்தே''

என்று மேருமந்தர புராண 68 ஆவது பாடல் சமணசமயதத்துவத்தின் ஒன்பது பொருள்களைக் கூறுகிறது.

அ. உயிர் (ஜீவன்): உயிர்கள் எண்ணிறந்தன; அழிவில்லாதன, அநாதியாக உள்ளன. இவற்றை கடவுள் படைக்கவில்லை. நல்வினை, தீவினை என்னும் புண்ணிய பாவங்களைச் செய்து, அவற்றின் பயனாக இன்ப, துன்பங்களைத் துய்ப்பதும், நரககதி, விலங்குகதி, மக்கள்கதி, தேவகதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து, இறந்து, உழன்றுதிரிவதும் இரு வினைகளை அறுத்துப் பிறவா நிலையாகிய பேரின்ப வீட்டினை அடைவதும் உயிர்களின் இயல்பாகும்.

உயிர்கள் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என்று ஐந்து வகைப்படும். ஐயறிவுயிர் பகுத்தறிவு இல்லாதவை, பகுத்தறிவு உள்ளவை என இரு வகைப்படும்.

உயிர்களின் பருமை, சிறுமைக்கு ஏற்ப உயிரானது பெரியதாகவும் சிறியதாகவும் உடல் முழுவதும் பரந்து நிற்கும். குடத்துக்குள் வைத்த விளக்கு குடத்துக்குள் மட்டும் ஒளிகாட்டும். அறையில் வைத்த விளக்கு அறை முழுவதும் ஒளிகாட்டும். அதுபோல் உடம்புகளின் அளவுக்குத் தக்கபடி உயிரானது பெரிதாகப் பரவியும் சிறியதாகச் சுருங்கியும் இருக்கும். ''பெரியதன் ஆவி பெரிது'' என்பது ஆருகத்ர் பழமொழி.

உயிர்கள் **வீட்டது, மாற்றது** என இருவகைப்படும். வீட்டது எனப்படும் 'மோட்ச சீவன்' அறிவு விளக்கப்பெற்று இருவினைகளையும் நீக்கி வீடுபேறடையும் தன்மையுள்ளது. மாற்றது எனப்படும் 'சம்சார சீவன்' நல்வினை, தீவினைகளில் கட்டுண்டு அவ்வினைப்பயன்களைத் துய்ப்பதற்காக நரகத்திலும் சுவர்க்கத்திலும், பிறப்பதும் இறப்பதுமாகி உழன்று திரியும் தன்மையுள்ளது. விலங்கு, நரகர், தேவர் என்னும் பிறப்புக்களில் பிறந்த உயிர்கள் அப்பிறவிகளிலேயே வீடுபேறடையாது. மக்களாகப் பிறந்த உயிர்கள் மட்டும்தான் வீடுபேறு அடைய முடியும். அதிலும் துறவு பூண்டவர்கள் வீடுபேறு அடையலாம். இல்லறத்தார்க்கு வீடுபேறு கிடையாது.

ஆ. உயிரல்லது (அஜீவன்): புத்கலம், தர்மம், அதர்மம், காலம், ஆகாயம் என்னும் இவை ஐந்தும் உயிரல்லனவாகிய அஜீவப்பொருள்களாம். இவைகளும் உயிரைப் போன்றே அநாதியாக உள்ளன. இவற்றைக் கடவுள் படைக்கவில்லை. உயிர்களின் இயல்பாகிய நல்வினை, தீவினை என்னும் இருவினைகளைச் செய்து, அவ்வினைகளுக்கேற்ப இன்ப, துன்பங்களைத் துய்ப்பதும் பல பிறவிகளிலும் பிறந்து, இறந்து உழல்வதும், பின்னர் நல்லறிவும் நன்ஞானமும் பெற்று இரு வினைக் கட்டறுத்து வீடுபேறடைவதும் ஆகிய இத்தன்மைகள் உயிரல்லனவாகிய இந்த அஜீவப் பொருள்களுக்குக் கிடையா.

புத்கலம்: என்பது உயிர்களில் படிந்து, அவற்றைப் புண்ணிய, பாவங்களைச் செய்ய வைக்கும் தன்மையுள்ளது. புத்கலத்தில் ஐந்து புலன்களும், ஐம்புலன்களால் அறியப்படுகின்ற பொருள்களும், இருட்டு, வெளிச்சம், வெய்யில், நிழல், ஒளி, நிலம், நீர், நெருப்பு, காற்று முதலியனவும் அடங்கியுள்ளன. புத்கலம் நுண்ணிய பருப்பொருளாகவும் பெரிய பருப்பொருளாகவும் மாறும் தன்மையுள்ளது. புத்கலத்திற்கு உருவம், நிறம், சுவை, நாற்றம், ஊறு இவைகள் உள்ளன; இது உயிர்களுக்கு உடம்பையும், மனம், வாக்கு, சுகம், துக்கம், பிறத்தல், வாழ்தல், இறத்தல் முதலியனவற்றையும் கொடுக்கிறது.

தர்மம், அதர்மம்: இவை வடமொழியில் தர்மாஸ்திகாயம், அதர்மாஸ்திகாயம் என்றும் கூறப்படும். (இவை புண்ணியம், பாவம் என்பன அல்ல) தர்மம், அதர்மம் என்பன நுண்ணிய அணுப்பொருள்களாக உள்ளன. இவை உயிர்கள் இயங்கு வதற்கும் தங்கி நிற்பதற்கும் இடங்களாக உள்ளன. மீன்கள் நீந்துவதற்கும் ஓய்வு கொள்வதற்கும் நீர்நிலை உதவுவது போல, உயிர்கள் இயங்குவதற்கும் தங்கு வதற்கும் தர்மம், அதர்மம் என்னும் அணுப்பொருள்கள் இடமாக உள்ளன. நடத்தல், ஓடுதல் முதலிய இயக்கங்கள் தர்மம் என்னும் அணுக்களின் உதவியினா லாகும். இருத்தல், நிற்றல், கிடத்தல் முதலியவை அதர்மம் என்னும் அணுக்களின் உதவியினால் ஆகும். இவைகள் இல்லையானால் புத்கலங்களால் உண்டாகும் பலவகையான உடம்புகள் இயங்கவும் தங்கவும் முடியாது.

''தருமாத்திகாயம் தானெங்கும் உளதாய்ப்
பொருள்களை நடத்தும் பொருந்த நித்தியமாய்
அப்படித்தாகி அதன்மாத்தி காயமும்
எப்பொருள் களையும் நிறுத்தல் இயற்றும்''

(மணிமேகலை. 27: 187-190)

காலம் என்பது இமைத்தல், நொடித்தல் முதலிய சிறு காலம் முதல் கற்பகாலம் முதலியு பெரிய கால அளவு ஆகும்.

''காலம் கணிகம் எனுங்குறு நிகழ்ச்சியும்
மேலும் கற்பத்தின்நெடு நிகழ்ச்சியும் ஆகும்''

(மணிமேகலை. 27 : 191-192)

ஆகாயம் என்பது சமண சமயக் கொள்கைப்படி ஐந்து பூதங்களுள் ஒன்றன்று. தர்மம், அதர்மம், காலம், உயிர்கள், புத்கலங்கள் தங்குவதற்கு இடம் கொடுப்பது ஆகாயம்.

''... ஆகாயம் எல்லாப் பொருட்கும்
பூக்கும் இடங்கொடுக்கும் புரிவிற்றாகும்''

(மணிமேகலை. 27 : 193-194)

இதுவரை கூறியவை உயிரல்லனவாகிய அஜீவப்பொருள்களாகும்.

இ. ஈ. புண்ணியம், பாவம் (நல்வினை, தீவினை)

இந்த புண்ணிய பாவங்கள் மூன்று வகையான உயிர்களுடன் கலக்கின்றன. அவை, மனத்தினால் நினைப்பதும், வாக்கினால் சொல்வதும், காயத்தினால் செய்வதுமாம். நல்ல எண்ணங்களாலும், நல்ல செய்கைகளாலும் பெறப்பட்ட புண்ணியமானது, உயிர்களை மனிதனாகவும், தேவராகவும் பிறக்கச் செய்து, அறிவு, செல்வம், இன்பம், புகழ், மேன்மை, சிறப்பு முதலிய நன்மைகளை அடையச் செய்கிறது. தீய எண்ணங்களாலும், தீய செய்கைகளாலும் உண்டான பாவமானது உயிர்களை நரககதி, விலங்குகதி முதலிய இழிந்த பிறப்புக்களில் பிறக்கச் செய்து அறிவின்மை, துன்பம், இகழ்ச்சி, வறுமை, சிறுமை முதலிய துன்பங்களை அடையச் செய்கிறது.

உ. **ஊற்று** (ஆஸ்ரவம்) நீர் ஊற்றுக்களில் நீர் சுரப்பதுபோல, நல்வினை, தீவினை ஆகிய இரு வினைகளும் உயிரில் சேர்வது ஊற்று எனப்படும். மனம், வாக்கு, காயங்களின் வழியாக ஊற்றுக்கள் உயிரிடம் வந்து சேர்கின்றன.

ஊ. செறிப்பு (ஸம்வரை) மேலே சொல்லப்பட்ட இருவினைகளும் சுரக்கும் ஊற்றினது வழியை அடைத்து விடுவது செறிப்பு எனப்படும். முன்பு செய்த இருவினைகளை மறுபிறப்பில் துய்த்து, ஒழிக்கும் போதே புதிதாக வினைகளைச் செய்து, மீண்டும் கருமத்தை உயிர் தேடிக் கொள்கின்றது. தாம் முன்பு செய்த வினைப்பயன்களைத் துய்த்து ஒழிக்கும் போது, புதிய கருமங்கள் வந்து சேராதபடி உயிர்கள் தடுக்க வேண்டும். அவ்வாறு தடுப்பதுதான் செறிப்பு எனப்படும். ஒரு குளத்திற்கு நீர் வரும் கால்வாய்களை அடைத்து விட்டால், அக்குளத்தில் மேன் மேலும் நீர்பெருகாமல் தடைபடுவதுபோல மனம், வாக்கு, காயம், ஐம்புலன் முதலியவற்றை அடக்கி உயிரினிடத்தில் மேன்மேலும் இருவினைகள் சுரவாதபடி தடுத்தலே செறிப்பு ஆகும்.

எ. உதிர்ப்பு (நிர்ஜரை): இருவினை ஊற்று உயிரினிடத்து மேலும் மேலும் பெருகாதபடி தடுத்த பின்னர், அனுபவித்துக் கழிக்காமல் எஞ்சிநின்ற வினைகளைக் களைந்து விடுவதற்கு உதிர்ப்பு அல்லது நிர்ஜரை என்று பெயர். இதனைத் துவாதச தபம், குப்தி, சமிதி, தருமத்தியானம், சுக்கிலத்தியானம் முதலியவற்றால் செய்ய வேண்டும்.

> "வரும்பாவம் எதிர்காத்து மன்னுந்தம் பழவினையும்
> ஒருங்காக உதிர்த்தக்கால் உயிர்த்தூய்மை வீடென்றான்."
> (நீலகேசி மொக்கல வாதச்சருக்கம்-பாடல்-313)

ஏ. **கட்டு** (பந்தம்): மனம், வாக்கு, காயம், ஐம்புலன் இவற்றால் உண்டான வினைகள் உயிருடன் ஒன்றிக் கலப்பது கட்டு அல்லது பந்தம் எனப்படும். பழுக்கக் காய்ந்த இரும்பில் நீரைத் தெளித்தால், அவ்விரும்பு நீரை இழுத்துக்கொள்வது போல, பாலுடன் நீரைக் கலந்தால் இரண்டும் ஒன்றுபடுவதுபோல வினைகள் உயிருடன் கலக்கின்றன.

எண்ணெயில் நனைந்த துணியில் அழுக்கு எளிதில் பற்றிக் கொள்வது இதற்கு உதாரணமாகும். உயிரைத் துணியாகவும், ஐம்புலன், வாக்கு, காயம் முதலிய வற்றை எண்ணெயாகவும் வினைகளை அழுக்காகவும் ஒப்புமைப்படுத்திக் கூறுவர்.

ஐ. வீடு (மோட்சம்): ஐந்தவித்து வினைகளினின்றும் நீங்கிய உயிர் கேவல ஞானம், கேவல தரிசனம், கேவல வீரியம், கேவல சுகம் என்னும் கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம் என்பவை களை அடைந்து, எல்லா உலகங்களுக்கும் உயர்ந்த உலகமாகிய பெறற்கரிய வீட் டுலகம் பெற்று, எல்லோராலும் வணங்கப்படும் அருகந்த நிலையை அடைவது மோட்சம் அல்லது வீடு எனப்படும்.

''வருவழி இரண்டையும் மாற்றி முன்செய்
அருவினைப் பயன் அனுபவித் தறுத்திடுதல்
அது வீடாகும்...''

(மணிமேகலை. 27 : 199-201)

மேற்கூறிய ஒன்பது பொருள்களின் உண்மையை அறிந்து கொள்வது நன் ஞானம் என்றும், இவற்றின் தன்மையை ஐயப்பாடின்றி உணர்ந்து கொள்வது நற்காட்சி என்றும்; நன்ஞானம், நற்காட்சி இரண்டையும் ஒன்றாக மனதிற் கொண்டு ஒழுகுவது நல்லொழுக்கம் என்றும் கூறப்படும். இதனை ரெத்தினத் திரயம் என்றும் மும்மணி என்றும் கூறுவர். இரத்தினத்திரயம் வீடு பேற்றிற்கு இன்றியமையாதது.

3. சமணர் இல்லற, துறவற ஒழுக்கங்கள்

இல்லறம், துறவறம் என வாழ்க்கை இரு வகைப்படும். இவற்றை சாவக தருமம், யதிதருமம் என்றும் கூறுவர். இல்லறமாகிய சாவக தருமம் என்பது மனைவி, மக்கள், சுற்றத்தாருடன் இருந்து ஒருவரால் கடைப்பிடிக்கப்படும் ஒழுக்கம் ஆகும். துறவறமாகிய யதிதருமம் என்பது உலகத்தைத் துறந்து வீடுபேற்றினைக் கருத்தில் கொண்டு தவம் செய்யும் முனிவரது ஒழுக்கம் ஆகும்.

சமணர் இல்லற ஒழுக்கம்

இல்லறத்தில் ஒழுகும் சமணர் கீழ்க்கண்ட பத்து விரதங்களைக் கடைபிடிததுத் தவறாது ஒழுக வேண்டும் என்று சமணநூல்கள் கூறுகின்றன.

அ. கொல்லாமை (அகிம்சை)

''இயங்குயிர் கொல்லாமை யேவாமை யாகும்
பெருங்கொலையின் மீட்சி யெனல்''

(அருங்கலச் செப்பு. பாடல்-69)

இயங்குந்தன்மை வாய்ந்த எவ்வுயிரையும் கொல்லா தொழிதலும் பிறரை ஏவி அவ்வுயிர்களைக் கொல்லுமாறு செய்யாதிருத்தலும் கொல்லாமை ஆகும்.

ஆ. **பொய்யாமை** (பொய் பேசாதிருத்தல்)

''பாவம் பெரியன கொல்லாமை யேவாமை
யாகு மிரண்டா வதம்''

(அருங்கலச் செப்பு. பாடல்-69)

தீவினைப் பயன்களுக்குக் காரணமாக விளங்குவதும் தனக்கும் பிறர்க்கும் துன்பத்தை விளைவிப்பதுமான பொய்யினை எக்காரணத்தைக் கொண்டும் தான் சொல்லாமலிருப்பதும், பிறரை அப்பொய்யினைச் சொல்லச் செய்யாமலிருப்பதும் பொய்யாமை ஆகும்.

இ. **கள்ளாமை** (களவு செய்யாதிருத்தல்)

''கொடாதது கொல்லாமை யேவாமை யாகுங்
கொடாதது கொல்லா வதம்.''

(அருங்கலச்செப்பு. பாடல்-71)

ஒருவர் தாமாகக் கொடுக்காத பொருளைத் தமக்கு உரியதாகக் கவர்ந்து கொள்ளாமலிருப்பதும் பிறர் பொருளைத் திருடி வருமாறு தூண்டி ஒருவரையும் ஏவாமலிருப்பதும் கள்ளாமை ஆகும்.

ஈ. **பிறர்மனை விரும்பாமை**

''விதித்த வழியின்றிக் காம நுகர்தல்
மதிப்பின்மை நான்கா வதம்.''

(அருங்கலச்செப்பு. பாடல்-74)

தாயும் தந்தையும் குருவும் சுற்றமும் ஆகிய பலர் முன்னிலையில் நடைபெற்ற வாழ்க்கையை விட்டு, பிறவழிகளில் இன்பந்துய்ப்பதாகிய செயலை உள்ளத்தாலும் நினையாது ஒழுகுவது, பிறர்மனை விரும்பாமை ஆகும்.

உ. **பொருள் வரைதல்** (மிகு பொருள் விரும்பாமை)

''பொருள்வரைந் தாசைச் சுருக்க லேவாமை
யிருடீர்ந்தார்க் கைந்தா வதம்.''

(அருங்கலச் செப்பு. பாடல்-77)

நிலம், வீடு முதலிய பொருள்களில் பேராசை கொள்ளாமல், தன்னிடம் உள்ள பொருள்களிலேயும் மிகுதியான பற்றுக் கொள்ளாமல், அவாவினைக் குறைத்து வாழ்வதும், தங்களுக்குத் தேவையான பொருள்களைக் காட்டிலும் மிகுதியான பொருள்களை விரும்பி ஈட்டுமாறு பிறரை ஏவாமலிருப்பதும் பொருள் வரைதல் ஆகும். இவை ஐந்தையும் அணுவிரதம் என்பர்.

ஊ. மூலகுணங்கள் — (3)

"கள்ளொடு தேன் புலால் உண்ணாமை ஐவதமுந்
தெள்ளுங்காண் மூல குணம்."

(அருங்கலச்செப்பு. பாடல்-82)

கள் மனிதனை மயக்கி அறிவைக் கெடுப்பதாலும் பல ஈக்களைக் கொன்று தேன் எடுப்பதாலும் விலங்குகளைக் கொன்று புலால் பெறுவதாலும் இம்மூன்றை யும் இல்லறத்தார்கள் தவிர்க்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட ஐந்து அணு (சிறிய) விரதங்களோடு இவற்றையும் சேர்த்து எண் வகையும் மூல குணங்கள் என்பர்.

எ. பிற ஒழுக்கங்கள் — (2)

சூரியன் மறைந்த பிறகு உணவு உண்ணக்கூடாது என்பது சமணர்களின் கொள்கை. எனவே, சூரியன் மறையும் முன்பு உணவு உட்கொள்வர். இவ்விரதத் தோடு ஆச்சாரியர் முதலியவரை வணங்குவதும் ஒரு கொள்கையாகும். இவை பத்தும் இல்லறத்தார்கள் கடைபிடிக்க வேண்டிய முக்கிய ஒழுக்கங்களாகும்.

இவ்வாறு, சமண சமயத்து இல்லறத்தார்கள் தாமும் அறவழியில் ஒழுகி துறவறத்தையும் நன்கு போற்ற வேண்டும். சமணத் துறவிகளை சமண இல்லறத் தார்கள் மிக்க ஆர்வத்தோடு போற்றிவந்தார்கள். இவ்வாறு, போற்றுவதை அவர் கள் பெரும் புண்ணியமாகக் கருதுவார்கள்.

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்."

(திருக்குறள். 263)

என்ற திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது சமண சமயத்து இல்லற வாழ்க்கை.

4. சமண முனிவர் ஒழுக்கம்

பிறவியை நீக்கி வீடுபேறு பெறுவதை நோக்கமாகக் கொண்டு உலகத்தைத் துறக்கும் சமண முனிவர்கள் தமது துறவு வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் இருபத்தெட்டாகும். இவற்றை மூல குணங்கள் என்பர். அவை; மகாவிரதம் ஐந்து, சமிதி (சோதித்துச் செய்தல்) ஐந்து, ஐம்பொறி அடக்கம் ஐந்து, ஆவஸ்யகம் (கண்டிப்பாகச் செய்ய வேண்டியது) ஐந்து, லோசம் (மயிர் களைதல்), திகம்பரம், நீராடாமை, பல்விளக்காமை, தரையில் படுத்து உறங்குதல், நின்று உண்ணுதல், ஒரு நாளைக்கு ஒருவேளை உண்ணுதல் ஆக இருபத்தெட்டாம்.

மகாவிரதம் ஐந்து:

அகிம்சை, வாய்மை, கள்ளாமை, துறவு, அவாவறுத்தல் என்னும் மகாவிரதம் ஐந்தினைப்பற்றி,

"ஐவகைப் பொறியும் வாட்டி ஆமையின் அடங்கி ஐந்தின்
மெய்வகை தெரியுஞ் சிந்தை விளக்கும்நின் றெரிய விட்டுப்
பொய்கொலை களவு காமம் அவாஇருள் புகாது போற்றிச்
செய்தவம் நுனித்த சீலக் கனைகதிர் திங்கள் ஒப்பார்."

என்று சீவக சிந்தாமணி (2824) கூறுகிறது.

அ. அகிம்சை

'அகிம்சா பரமோதர்ம' என்பது சமணரின் அடிப்படையான தருமம். இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகிய நான்கும் ஒன்றுபட்டது அகிம்சை என்பதாகும். ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிர் ஈறாக உள்ளவற்றைக் கொல்லவோ; கொல்லச் சொல்லவோ; கொல்ல நினைக்கவோ கூடாது; மற்றவர் கொல்வதற்குத் தான் மனம், மெய், மொழிகளால் உடன்படா மல் இருக்கப் போவதாகவும் உறுதி கூறிச் சமண முனிவர் அகிம்சா விரதத்தை மேற்கொள்கிறார்.

ஆ. வாய்மை (பொய்யாமை)

பொய்யாமை என்னும் சொல்லுக்கு இளம்பூரணர் தீமை பயக்கும் சொற் களைக் கூறாமை என்கிறார். சமண சமயக் கொள்கைப்படி வாய்மை என்பது அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது. ஒருவன் ஒருவுயிரைக் கொல்லத் துணிவானாயின், அந்நிலையில் பொய் சொல்லியாவது அவ்வுயிரைக் கொலை யிலிருந்து காப்பாற்ற வேண்டியது சமண முனிவரின் கடமையாகும். இந்த ஒன்றைத்தவிர மற்ற வகையில் பொய் சொல்லக் கூடாது என்பதும் மனம், மொழி, மெய்களால் மெய் பேசுவதை மேற்கொள்ள வேண்டும் என்பதும் சமண சமயக் கொள்கையாகும்.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

(திருக்குறள். 262)

'நான் எப்போதும் மெய்யே பேசுவேன்; ஒரு போதும் பொய் பேசவோ, பிறர் பொய் பேசுவதற்கு உடன்படவோ, பிறரைப் பொய் பேசத் தூண்டவோ மாட் டேன்' என்றும், 'மன, மொழி, மெய்களால் முக்காலங்களிலும் மெய்யே பேசவேன்' என்றும் உறுதி கூறி அருகத முனிவர் வாய்மை என்னும் நோன்பை மேற்கொள் கிறார்.

இ. கள்ளாமை: (களவு செய்யாமை)

எவ்வளவு சிறிய பொருளாக இருந்தாலும் அதற்குரியவர் கொடுத்தாலன்றி எடுத்துக்கொள்ள, மனத்தாலும் நினையாதிருத்தல் கள்ளாமை எனப்படும். 'இந்தப் பரந்த பூமியில் உயிர் உள்ள, உயிரற்ற எந்தப் பொருளையும் அப்பொருளுக் குரியவர் கொடுத்தாலன்றி அதனை எடுத்துக்கொள்ள மாட்டேன்' என்றும் 'பிறர் எடுத்துக் கொள்ளவும் உடன்பட மாட்டேன்' என்றும் 'மனம், மொழி, மெய்களால்

கள்ளாமையை மேற்கொள்கிறேன்' என்றும் உறுதி கூறி சமண முனிவர் இவ் விரதத்தை மேற்கொள்கிறார்.

ஈ. **பிரமசரியம்:** (புணர்ச்சி விழையாமை)

சிற்றின்பத்தை மனம், வாக்கு, காயங்களால் செய்யாதிருத்தல் பிரமசரியம் எனப்படும். தெய்வங்கள், மனிதர்கள், விலங்குகள் இவற்றுடன் இணை விழைச் சாகிய சிற்றின்பத்தைத் துய்க்கமாட்டேன் என்றும் இதனை மனம், மொழி, மெய்களால் முக்காலத்திலும் செய்யாதிருக்க உறுதி கூறுகிறேன் என்றும் கூறிச் சமண முனிவர் இவ்விரதத்தை மேற்கொள்கிறார்.

உ. **அவாவறுத்தல்** (முற்றத்துறத்தல்)

துறத்தலாவது தன்னுடைய பொருளைப் பற்றறத் துறத்தல் என்கிறார் இளம் பூரணார்.

''அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.''

(திருக்குறள். 361)

அவாவினால் மேன்மேலும் வினைகள் ஏற்பட்டு, அவற்றால் பிறப்பு, இறப் பாகிய நிலைகள் உண்டாகும். எனவே, பிறப்பறுக்கத் துணிந்த துறவி முற்றும் துறந்துவிட வேண்டும்.

'உயிருள்ள, உயிரற்ற, பெரிய, சிறிய 'எல்லாப் பொருள்களையும் துறந்து, அவற்றின் தொடர்பை நீக்கிக் கொள்கிறேன்.' என்று கூறிச் சமண முனிவர் இவ்விரதத்தை மேற்கொள்கிறார்.

சமிதிகள் ஐந்து

சமிதி என்பது சோதித்துச் செய்தல் எனப்படும். இது வடமொழியில் இரியை, பாஷை, ஏஷனை, ஆதான நிக்ஷேபனை, உத்சர்க்கம் என ஐவகைப்படும்.

அ. **இரியாசமிதி**

சமணத்துறவி நடக்கும்போது, தரையை மூன்று முழதூரம் பார்த்துப் புழுப் பூச்சிகள் இருந்தால் அவற்றை மிதிக்காமல் நடக்க வேண்டும். வழியில் உள்ள சிற்றுயிர்கள் காலில் மிதிபடாதபடி ஒதுக்குவதற்காக மயிற்பீலிக் குஞ்சத்தை அவர் கையில் வைத்திருப்பர். இதற்காகவே, அவர் இரவு நேரங்களில் பயணம் செய்வ தில்லை.

ஆ. **பாஷா சமிதி**

நாவடக்கம், பழித்தல், புகழ்தல், கோபம், கடுஞ்சொற்கூறல் முதலியவற்றை அறவே நீக்கி, இனிமையாகப் பேசுவதையும், தரும ஒழுக்கம், சமயக் கொள்கை இவற்றைப் போதிப்பதையும் துறவி ஒழுக்கமாகக் கொள்வது பாஷா சமிதி எனப்படும்.

இ. ஏஷணா சமிதி

நாற்பத்தாறு வகையான குற்றங்கள் இல்லாத உணவைச் சமணத்துறவி யாசித்துப் பெற்று அதிகமாக உண்ணாமல் அளவாக உண்ணுதல், ஏஷணா சமிதி எனப்படும்.

ஈ. ஆதான நிக்ஷேபனா சமிதி

சமண முனிவர் தமக்குரிய நூல், மயிற்பீலி, கமண்டலம் முதலியவற்றை எடுக்கும் போதும், வைக்கும் போதும் சிற்றுயிர்கள் இறந்து போகாதபடி விழிப் போடு நடந்து கொள்ள வேண்டும்.

உ. உத்சர்க்கசமிதி

சமண முனிவர் மல, மூத்திரம் கழிக்கும் போது, மனிதர்கள் நடமாடாத; புழு, பூச்சிகள், வளைகள் இல்லாத இடங்களில் கழிக்க வேண்டும்.

ஐம்பொறி அடக்கம்

நல்வினை, தீவினைகள் ஐம்பொறிகளின் வாயிலாக உயிரைப் பற்றிப் பிணித்து, அதனைப் பிறப்பு, இறப்புகளில் செலுத்துகிறபடியால் அந்த ஐம்பொறி களை அடக்குவது துறவிகளின் கடமையாகும். அருகர், தீர்த்தங்கரர் முதலிய கடவுளர்களைப் பற்றிய தோத்திரப் பாடல்களைக் கேட்பதும், அவர்களின் சரித்திர நாடகங்களைக் காண்பதும் தவிர, மற்றவற்றைச் சமண முனிவர் ஐம்பொறி களால் துய்க்கக் கூடாது என்று சமண நூல் கூறுகிறது.

''மெய்வாய் கண்மூக்குச் செவிஎனப் பேர்பெற்று
ஐவாய் வேட்கை அவாவினை—கைவாய்க்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும்.''

என்பது நாலடியார் பாடல் (6 : 9) கூறும் விளக்கம்.

கண்டிப்பாகச் செய்ய வேண்டியது

இதை வடமொழியில் ஆவஸ்யகம் என்பர். இது ஆறு வகைப்படும். அவை வருமாறு

அ. சாமாயிகம்:

இன்பம், துன்பம், நன்மை, தீமை, உயர்வு, தாழ்வு இவற்றை ஒரு தன்மை யாகப் பார்த்தல்.

ஆ. துதி:

விருசபதேவர் முதலிய இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களையும் அருக பர மேஸ்டியையும் போற்றித் துதித்தல்.

இ. வணக்கம்:

அருகர், தீர்த்தங்கரர், சித்தர் முதலியவர்களின் திருவுருவங்களையும், சாத்திரங்களைக் கற்ற தபசிகளையும் தீட்சை கொடுத்த குருக்களையும் பெரியோர் களையும் மனம், வாக்கு, காயங்களால் வணங்குதல்.

ஈ. பிரதிகிர்மணம்:

பாவத்திற்குக் காரணமானவை தன்னிடத்தில் மனம், வாக்கு, காயங்களினால் நேராதபடி காத்துக் கொள்ளுதல்.

எ. கழுவாய்: (பிராயச்சித்தம்)

சமண முனிவர் தமது விரதத்தில் ஏதேனும் குற்றம் நேர்ந்து விட்டால் அதனையுணர்ந்து வருந்தி, மனம், மொழி, மெய்களால் தம்மையே நொந்து கொண்டு அக்குற்றத்தைப் போக்குதல்.

ஏ. விசர்க்கம்:

தவம் செய்யும்போது வரும் துன்பங்களை அஞ்சாமல் பொறுத்தல், வாளும் உறையும் போல உடலும் உயிரும் வேறு, வேறு என்பதை உணர்ந்து தமது உடம்பையும் தமது என்று கருதாமல் யாக்கையில் பற்றறுத்தல்.

துறவின் உயர் நிலையை அடைந்த சமண முனிவர் மேலும் ஏழுவகை விரதங்களைச் செய்ய வேண்டும். அவை வருமாறு;

அ. லோசம் (மயிர் களைதல்):

சமண முனிவர் துறவு கொள்வதற்கு முன்னர் தீட்சை பெறுவர். முடியைக் களைவது தீட்சையில் இன்றியமையாதது. முடியைக் கத்தியால் மழிக்காமல் கையி னால் பிடுங்கிக் களைய வேண்டும். இதனைச் செய்யும் நாட்களில் உண்ணா நோன்பு இருக்க வேண்டும்.

ஆ. திகம்பரம் (ஆடையில்லாது இருத்தல்) :

தோல், இலை, மரவுரி எதுவுமே இல்லாது நிர்வாணமாக இருந்து முழுத் துறவை மேற்கொள்ள வேண்டும். அப்போது வெயிலின் கொடுமையையும், குளிரின் தண்மையையும் பொறுத்துக்கொள்ளவேண்டும். எறும்பு, கொசு கடித் தால் தாங்கிக் கொள்ள வேண்டும்.

இ. நீராடாமை:

உடம்பில் ஏற்படும் வியர்வை, அழுக்கு முதலியவற்றைக் கழுவிப்போக்காமல் இருக்க வேண்டும். நீராடிச் செய்யும் புறத்தூய்மையைவிட அகத்தூய்மையையே சிறந்தது என்று கருத வேண்டும்.

ஈ. தரையில் படுத்தல்:

பாய், படுக்கையின்றித் தரையின்மீது படுக்கும்போது, புழுப்பூச்சிகள் இல்லாத இடத்தில் படுக்க வேண்டும். குப்புறவோ, மல்லாந்தோ படுக்கக்கூடாது.

ஊ. பல்தேய்க்காமை:

பல்லின் ஈறுகளில் சிறிய உயிரினங்கள் இருக்கின்றன என்பது சமணத்துறவிகளின் நம்பிக்கை; எனவே, பல்தேய்க்காமல் சுத்தம் செய்ய வேண்டும்.

ஊ. நின்று உண்ணல்:

இலை, உண்கலம் முதலியவற்றில் உண்ணாமல், உணவை கையில் வாங்கி நின்றபடியே உட்கொள்ள வேண்டும்.

எ. ஏகபுக்கம்:

ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் உணவு உட்கொள்ள வேண்டும்.

இவ்விரதங்கள் அனைத்தையும் சமண முனிவர்கள் முறையாகக் கடைபிடிக்க வேண்டும் என்று சமண நூல்கள் கூறுகின்றன.

5. தமிழ் நாட்டில் சமணம்

சமணர்களின் கடைசித் தீர்த்தங்கரர் வர்த்தமான மகாவீரர். இவர் தமது 72ஆம் வயதில் கி.மு. 527இல் வீடுபேறடைந்தார். அதுவரை, அவரே சமண சமயத் தலைவராக இருந்தார். அவருக்குப்பின் முறையே கௌதம இந்திரபூதி, சுதர்மர், சம்புசுவாமி, விஷ்ணுநந்தி, நந்திவர்மர், அபராசிதர், கோவர்த்தனர், பத்திரபாகு முனிவர் ஆகியோர் சமண சமயத் தலைவர்களாக இருந்தார்கள்.

பத்திரபாகு முனிவர் காலத்தில்தான் சமண சமயம் தமிழ்நாட்டிற்கு வந்தது என்பர். இவர் கி.மு. 317 முதல் கி.மு. 297 வரையில் சமண சமயத் தலைவராக இருந்தவர். இவர் சந்திர குப்தன் (கி.மு. 322-கி.மு. 298) என்னும் மௌரிய அரசனுக்கு மதக் குருவாகவும் இருந்தார். சந்திரகுப்தன் கிரேக்க அரசன் மகா அலெக்சாண்டரின் காலத்தவன்.

பத்திரபாகு முனிவர் மகத நாட்டில் பன்னிரெண்டு ஆண்டுகள் வற்கடம் வரப்போவதை முன்கூட்டியே அறிந்து, அதிலிருந்து மீளக்கருதித் தம்மைச் சார்ந்த பன்னீராயிரம் சமண முனிவர்களையும், ஆட்சியைத் துறந்து, துறவு பூண்ட சந்திர குப்தனையும் அழைத்துக் கொண்டு தென்திசை நோக்கிப் புறப்பட்டு வந்து, மைசூரில் உள்ள சிரமண பெளிகுளத்தில் தங்கினார்; பின்பு அவர்களில் ஒரு பகுதியினரை சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்கு அனுப்பி வைத்து, சமண சமயக் கொள்கைகளைப் பரப்பச் செய்தார். பின்பு கி.மு. 297இல் வடக்கிருந்து வீடு பேறடைந்தார். சந்திர குப்த மௌரியனும் அவ்விடத்திலேயே வடக்கிருந்து உயிர் நீத்தார் என்று வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

மேலும் கி.மு. 322-185 என்ற கால இடைவெளியில் வடபுலத்தில் ஆட்சி புரிந்த மௌரிய அரசன் ஒருவன் வடுகரைத் துணையாகக் கொண்டு தமிழ் நாட்டின் மேல் படையெடுத்துள்ளான்.

இச்செய்தியை

''முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவு.''

என்று அகநானூற்று 281ஆம் பாடல் கூறுகிறது. இது பத்திரபாகு முனிவரைக் குருவாகக் கொண்ட சந்திர குப்த மௌரியருடைய படையெடுப்பைப் பற்றியதாக இருக்கலாம்.

தமிழகத்தில் சமணம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே இருந்து வந்திருக்கிறது என்பதை வலியுறுத்தும் கல்வெட்டுக்கள் தமிழ் நாட்டில் திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, வட ஆற்காடு, தென் ஆற்காடு, முதலிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை என்று கல்வெட்டாராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

மகாவம்சம் என்னும் பௌத்த மத நூலில் இலங்கையில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே சமண சமயம் இருந்ததற்கான குறிப்புக் காணப்படுகிறது. இந்நூல் கி.மு. 377 முதல் 307 வரையில் இலங்கையில் ஆட்சிபுரிந்த பாண்டு காபயன், அநுராதபுரத்தில் சோதியன், கிரி, கும்பண்டன் முதலிய சமண மத குருமார்களுக்குப் பள்ளிகள் கட்டிக் கொடுத்தான் என்று கூறுகிறது.

வட இந்தியாவை அரசாண்ட சந்திர குப்தனும் இலங்கையை ஆண்ட பாண்டு காபயனும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். பாண்டுகாபயன் காலத்தில் சமண சமயத்தவர்கள் இலங்கையில் இருந்தார்கள் என்றால், அவர்கள் தமிழ் நாட்டிலிருந்தே சென்றிருக்க வேண்டும். ஏன் என்றால் அவர்கள் கப்பல் ஏறிக் கடல் வழியாகச் சென்றிருக்க முடியாது. சமணத் துறவிகள் ஆறு முதலிய சிறு நீர் பரப்புகளைக் கடந்து செல்லலாமே தவிர, கடலில் பயணம் செய்யக் கூடாது என்பது சமண சமயக் கட்டுப்பாடு. இலங்கைக்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையில் உள்ள மன்னார் வளைகுடாக் கடல் அக்காலத்தில் மிகக் குறுகி ஆழம் இல்லாது இருந்தது என்பதால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே தமிழ் நாட்டு வழியாக இலங்கைக்குச் சமணர்கள் சென்றிருப்பார்கள் என்று மயிலை சீனி வேங்கடசாமி கூறுகிறார்.

கி.மு. 6ஆம் நூற்றாண்டில் சமணர்கள் தமிழ் நாட்டில் நுழைந்தார்கள் என்று பி.பி. தேசாய் 'தென்னிந்தியாவில் சமணம்' (Jainism in South India. P. 181) என்னும் தனது ஆங்கில நூலில் குறிப்பிடுகின்றார்.

எனவே, மேற்கண்ட ஆதாரங்களையும் செய்திகளையும் நோக்கும் போது, சமணர்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்கும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் நாட்டிற்கு வந்திருப்பார்கள் என்று உறுதியாகக் கூறலாம்.

6. சமணசமயம் சிறப்படைந்த வரலாறு

சமணர்கள் இன்று தமிழ்நாட்டில் குறைந்த எண்ணிக்கையில் காணப்பட்டாலும் பண்டைக்காலத்தில் நாடு முழுவதும் பரவி, சீரும், சிறப்புமாக இருந்தார்கள்

என்பதைத் தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், பெரிய புராணம், திரு விளையாடற் புராணம், மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலான நூல்களின் வழி அறியலாம். மேலும், தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களில் காணப்படுகின்ற கல்வெட்டுச் சாசனங்களும், சிதைந்து போன சமணக் கோயில்களும், வயல் ஓரங்களிலும், காடுமேடுகளிலும் காணப்படுகின்ற சமண தீர்த்தங்கரர்களின் சிலை களும், சமணப் பாக்கம், அருகத்துறை, சமண சமுத்திரம், ஜினலாலயம், திரு ஜினப்பள்ளி (திருச்சிராப்பள்ளி) பஞ்சபாண்டவமலை, அமண்குடி, சமணர் திடல், சமணர் மலை, அருக மங்கலம் முதலிய இடங்களின் பெயர்களாலும் சமண சமயம் சிறப்புற்றிருந்ததை அறியலாம்.

பிறப்பினால் உயர்வு, தாழ்வு காணும் குறுகிய மனப்பான்மை சமண சமயத் தில் இல்லை. எந்தக் குலத்தவராக இருந்தாலும் சமண சமயக் கொள்கையைப் பின்பற்றுவாராயின் அவரைச் சமணர்கள் போற்றி வந்தனர்.

''பறையன் மகனெனினும் காட்சி யுடையான்
இறைவ னெனவுணரப் பாற்று.''

என்று அருங்கலச் செப்பு 31ஆம் பாடல் கூறுகிறது.

உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி என்ற நான்கு தானங்கள் செய்வதைச் சமணர்கள் அறமாகக் கொண்டிருந்தார்கள். இவற்றை அன்னதானம், அபய தானம், ஔடததானம், சாத்திரதானம் என்பர்.

சமணர்கள் தமிழ் நாட்டில், தமிழ் மொழியில் தம் மதக் கொள்கைகளை எழுதினார்கள். இதனால், சமண சமயத் தத்துவக் கருத்துக்கள் தமிழர்களின் மனதில் ஆழமாகப் பதியத் தொடங்கின. காதலையும், வீரத்தையும், கொடையை யும் பெரிதும் போற்றி வந்த சங்கத் தமிழனின் வாழ்வில் நாலடியார், பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அறநெறிச்சாரம், அருங்கலச் செப்பு முதலான நூல்கள் அறவழிப்பட்ட சிந்தனைகளை ஏற்படுத்தின. நீலகேசி என்ற சமண சமயத் தர்க்க நூலும், பெருங்கதை, யசோதர காவியம், மேருமந்தர புராணம், கலிங்கத்துப் பரணி முதலான நூல்களும் சமணப் புலவர்களால் இயற்றப்பட்டன.

இன்றுவரை போற்றிக் கற்கும் வகையில் செய்யுளுக்கு யாப்பிலக்கணத்தை எழுதியவர் அமிர்தசாகரர் ஆவார். எழுத்து, சொல் இலக்கணத்தைப் போற்றத்தக்க வகையில் சொன்னவர் ஆசிரியர் பவணந்தி முனிவர் ஆவார். பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, திவாகர நிகண்டு முதலான நூலகராதிகளையும் அவிநயம், அவிநயனார் யாப்பு, அவிநயனார் புறனடை, அவிநயனார் கலாவியல், அவிநய னார் புறத்திணைப்பாடல், இந்திரகாளியம், யாப்பருங்கலம், அமுத சாகரம், நேமிநாதம், வெண்பாப் பாட்டியல் முதலிய நூல்களையும் எழுதிச் சமணர்கள் தமிழன்னைக்குச் சிறப்பு செய்தார்கள். இன்னும் பெயர் அறியப்படாத நூல்கள் எண்ணிறந்தன. இவையாவும் தமிழ்நாட்டில் சமண சமயம் சிறப்புப் பெற்றிருந் தமைக்குச் சான்றுகளாகும்.

மேலும், சமணத் துறவிகள் ஊர் ஊராகச் சென்று தம் மதக் கருத்துக்களைத் தமிழ் மொழியிலேயே மக்களிடம் போதிப்பதைக் கடமையாகக் கொண்டார்கள்.

இவர்கள் கூட்டத்திற்குச் சங்கம் என்று பெயர். இச்சங்கம் பெரிதாக வளர்ந்த நிலையில் இதை நான்காகப் பிரித்திருந்தனர். அவை நந்திகணம், சேணகணம், சிம்மகணம் தேவகணம் என்பன.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் திருவாலவாய் திருநீற்றுப் பதிகம் ஆறாம் பாடலில் கனகநந்தி, புட்பநந்தி, பவணநந்தி, சுனகநந்தி, குனகநந்தி, திவணநந்தி, அனகநந்தி முதலியவர்களைக் குறிப்பிடுகின்றார். இவர்கள் நந்தி கணத்தைச் சேர்ந்தவர்கள். அதே பதிகத்தில் நான்காம் பாடலில் சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன், கந்துசேனன், கனகசேனன் முதலிய சேனகணத்தவர்களைக் குறிப் பிடுகின்றார். திருநாவுக்கரசரும் சமண சமயத்தில் இருந்தபோது, தருமசேனர் என்ற பெயரைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிம்மகணத்தைச் சேர்ந்தவர்கள், வீரர்கள்என்னும் பெயரால் அழைக்கப் பட்டனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் ஆறாம் பாடலில் 'கருமவீரன்' என்பவரைக் குறிப்பிடுகின்றார். கணகவீரர் அடிகள், குணவீர படாரர் என்னும் பெயர்கள் சாசனங்களில் காணப்படுகின்றன.

சீவக சிந்தாமணியை இயற்றிய திருத்தக்கதேவரும் சூளாமணியை இயற்றிய தோலாமொழித்தேவரும் தேவகணத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்.

சமண சமயத்தைப் பரப்புவதற்குப் பெண்பாற் துறவிகளும் இருந்தார்கள் என்ற செய்தி காணப்படுகிறது. சிலம்பில் வரும் கவுந்தி அடிகள் சமணத்துறவி ஆவார்.

பெரிய புராணமும், திருவிளையாடற் புராணமும் சமண சமயப் பெண்பால் துறவிகளைக் குரத்திகள் என்று கூறுகின்றன. தமிழ்நாட்டுச் சாசனங்களிலும் குரத்திகள் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. ஸ்ரீமிழலூர்க் குரத்திகள், ஸ்ரீவிஜயக் குரத்திகள், திருச்சாணத்துக் குரத்திகள், நால்கூர்க் குரத்திகள், கூடர் குரத்தியார், வேம்பு நாட்டு குரத்தி, கனக வீரக் குரத்தியார், பிருதிவிடங்கக் குரத்தி என்பன அவ்வாறான பெயர்களாகும். குரத்தி என்பது குரவர்—குரு என்பதன் பெண்பாற்பெயராகும் என்பார் மயிலை சீனி. வேங்கடசாமி.

தமிழ் நாட்டில் மீன் பிடித்தல், வேட்டையாடுதல் முதலான உயிர்க்கொலை செய்யும் தொழிலைத்தவிர மற்ற தொழில்களை எல்லாம் சமண சமயம் போற்றி வந்தது. வணிகரும், வேளாளரும் மற்ற தொழில் செய்பவரும், சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்களும் இச்சமயத்தை ஆதரித்தார்கள். இதனால், சமண சமயத்திற்கு ஆதரவும் செல்வாக்கும் பெருகின. பள்ளிகளும், மடங்களும் எழுந் தன. இவற்றிற்கு நிலங்களையும், பொன்னையும், பொருளையும் பள்ளிச் சந்த மாக அரசர்கள் கொடுத்து உதவினார்கள். இத்தகைய காரணங்களால் சமண சமயம் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கியது.

தமிழ் நாட்டில் சமண சமயம் சிறந்து விளங்கியதைப் பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பகுதியில் சேக்கிழார் பாடியிருக்கின்றார்

"பூழியார் தமிழ்நாட்டு உள்ள
 பொருஇல்சீர்ப் பதிகள் எல்லாம்
பாழியும் அருகர் மேவும்
 பள்ளிகள் பலவும் ஆகிச்
சூழ்இருள் குழுக்கள் போலத்
 தொடைமயில் பீலி யோடு
மூழிநீர் கையில் பற்றி
 அமணரே ஆகி மொய்ப்ப."

(பாடல்-600 —-தொடர் எண்-2504)

"பறிமயிர்த் தலையும் பாயும்
 பீலியும் தடுக்கும் மேனிச்
செறியு முக் குடையும் ஆகித்
 திரிபவர் எங்கும் ஆகி
அறியும்அச் சமய நூலின்
 அளவினில் அடங்கிச் சைவ
நெறியினில் சித்தம் செல்லா
 நிலைமையில் நிகழும் காலை."

(பாடல்-601 — தொடர் எண்-2505)

ஆக இச்செய்திகளை எல்லாம் நோக்கும் போது, சமண சமயம் அக்காலத்தில் தமிழ்நாடு முழுவதும் செழித்துச் சிறப்புப் பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

7. சமயப்போரில் சமணம்

வடநாட்டில் தோன்றிய சமணம், பௌத்தம், ஆசீவகம், வைதீகம் ஆகிய சமயங்கள் தொடக்க காலந்தொட்டே ஒன்றோடு ஒன்று பகைத்துப் போரிட்டு ஒன்றை ஒன்று அழிக்க முயற்சி செய்து வந்தன. இச் சமயப்போர் தமிழ்நாட்டிலும் பரவி பண்டைக்காலந்தொட்டே நடந்து வந்தது. இச்சமயப்போரில் முதலாவதாக ஆசீவகமும், அடுத்துப் பௌத்தமும் அழிந்து விட்டன; மூன்றாவதாக சமணம் ஆற்றல் குன்றியது. வைதீக சமயம் எல்லா மதங்களையும் குன்றச் செய்து நிலை பெற்று விட்டது.

முன்னர் வைதீகம், பௌத்தம், சமணம் ஆகிய மும்மதங்களுள் நடைபெற்ற போராட்டத்தில் வைதீக சமயம் பின்னடைந்த நிலைமையை எய்தியது. இதற்கான காரணங்கள்: வைதீகம் கொலை வேள்வியைச் செய்து வந்தது, பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டியது, வேதத்தை மற்றவர்கள் படிக்கக் கூடாது என்று தடுத்து வந்தது. பொன், நிலம், பசு, எருமை, குதிரை, யானை, கன்னி, பாரியாள் முதலியவற்றைத் தானமாக மக்கள், அரசர்களிடம் இருந்து பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தது. மீன், புலால் முதலியவற்றை உணவாகக் கொண்டது. இவையே வைதீக சமயம் குன்றக் காரணங்களாக இருந்தன என்பர். வைதீக சமயம் செல்வாக்கில்லாமல் பின்னடைந்த நிலையில் பௌத்தமும், சமணமும் செல்

வாக்குப் பெற்றுச் சிறந்திருந்தன. இவற்றுக்கான காரணங்கள்: இவ்விரு சமயத் தலைவர்கள் வைதீக சமயத்தவரைப் போன்று இல்லறத்தில் இல்லாமல் துறவி களாக இருந்தனர். பிராமணர்களைப் போன்று பொன், நிலம், பசு முதலியவற் றைத் தானங்களாகப் பெறாமல் உணவை மட்டும் சிறிதளவு தானமாகப் பெற்று வந்தார்கள். தங்கள் பள்ளிகளில் ஏழைச் சிறுவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பித்துக் கொடுத்தனர். நோயாளிகளின் பிணிகளைப் போக்கி வந்தனர், பிறப்பி னால் உயர்வு தாழ்வு பாராட்டவில்லை. கொலை, புலாலுணவை அறவே நீக்கி யிருந்தார்கள். இச் செயல்களால் பௌத்த, சமண சமயங்கள் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றுச் சிறந்து விளங்கியது.

சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு பௌத்த சமயமும், சமண சமயமும் ஒற் றுமை இல்லாமல் ஒன்றையொன்று தாக்கிக் கொள்ளத்தொடங்கின. கி.பி.7 ஆம் நூற்றாண்டில் சமண சமயத்தைக் கடிந்து, குண்டலகேசி என்னும் நூலை நாத குத்தனார் என்னும் பௌத்தர் இயற்றினார். இதில் குண்டலகேசி என்னும் வணிகக்கன்னி அருகச்சந்திரன் என்பவனிடத்தில் பௌத்த தருமத்தைக் கற்று நாவலந்தீவிலுள்ளாரை வாதத்தில் வென்று பௌத்தராக்கும் செய்தியும், ஆவணம் என்னும் நகரில் நாதகுப்தனார் என்னும் சமணத் துறவியை வாதில் வென்ற செய்தியும் காணப்படுகின்றன.

குண்டலகேசியில் சமணத்துறவி தோல்வியுற்ற நிகழ்ச்சி கூறப்படுவதைக் கண்டு வருந்திய சமணரால் நீலகேசி என்னும் நூல் இயற்றப்பட்டது. குண்டல கேசிக்கு உபதேசித்த அருகச் சந்திரனையும், குண்டலகேசியையும் சமணர் வாதித்து வென்றதாகக் கூறப்படுகிறது. மற்றும் பலரையும் அவர்கள் வாதில் வென்ற தாகவும் கூறப்படுகிறது.

சமண சமயத்தைக் கண்டித்து இயற்றப்பட்ட குண்டலகேசியையும், பௌத்த சமயத்தைக் கண்டித்து இயற்றப்பட்ட நீலகேசியையும் பார்க்கும்போது, இவர்களுக் குள் இருந்த சமயப் பகைமை தெரியவருகிறது.

பண்டைக் காலத்தில் வடநாட்டிலிருந்து வைதீகம், சமணம், பௌத்தம் முதலிய சமயங்கள் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்பே தமிழர்களிடம் முருகன், கொற்றவை, சிவன், திருமால் முதலிய தெய்வங்களையும் போரில் இறந்த வீரர் களின் நடுகற்களையும் தெய்வமாக வணங்கும் வழிபாடு இருந்தது. இதனை திராவிட மதம் என்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி. அக்காலத்து வைதீகப் பிராமணர் தம் வேள்விகளில் ஆடு, மாடுகளைக் கொன்று வந்தது போலவே திராவிட மதத்தைச் சேர்ந்தவர்களும் ஆடு, கோழிகளைப் பலி கொடுத்து வணங்கி வந்தனர். உயிர்ப் பலியிடுவதைப் பொறுத்தவரை இரண்டு சமயங்களுக்கும் ஒற்றுமை இருந்தது. எனவே, திராவிட மதத்தை வைதீக சமயம் தழுவியது. சிவன், திருமால், கொற்றவை, முருகன் முதலிய தெய்வங்களையும் ஏற்றுக் கொண்டது. மேலும் திராவிடத் தெய்வங்களுக்கும், வைதீக தெய்வங்களுக்கும் புதிய தொடர்பு களையும், உறவுகளையும் கற்பித்துக் கொண்டது. தமிழ் முருகனுக்குச் சுப்பிர மணியன், கந்தன் போன்ற புதுப்பெயர்களைச் சூட்டி, வள்ளி என்னும் ஒரு தமிழ்

மனைவியோடு இருந்த முருகனுக்குத் தெய்வயானை என்னும் ஆரிய வைதீகப் பெண்ணொருத்தியை இரண்டாம் மனைவியாகக் கொடுத்து ஆரிய திராவிடத் தொடர்பை உறுதிப்படுத்திக் கொண்டது. சிவன் என்னும் திராவிடத் தெய்வம் உருத்திரன் என்னும் வைதீகத் தெய்வத்துடன் இணைத்து இரண்டும் ஒன்றே என்று கற்பிக்கப்பட்டது. மாயோனாகிய திருமால் வைதீக தெய்வங்களாகி விஷ்ணு, சூரியன் இவைகளுடன் பொருதப்பட்டது. வாதாபியிலிருந்து வந்த விநாயகன் தமிழ்க் கடவுளாக ஆக்கப்பட்டது. தமிழ்க் கடவுள் முருகனின் அண்ணன் விநாய கன் என்றும், சிவனுக்கும் பார்வதிக்கும் இவர்கள் மகன்களாகப் பிறந்தார்கள் என்றும் கதைகள் கற்பிக்கப்பட்டன. இந்திரன், சந்திரன், பலதேவன், சூரியன் முதலிய தெய்வங்கள் மறைக்கப்பட்டு மறக்கப்பட்டன. இதற்கு ஏற்ற முறையில் புராணங்கள் எழுதப்பட்டன. இவ்வாறு திராவிட மதமும், வைதீக சமயமும் கலந்து சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு, புதிய மதமாக 'இந்து மதம்' உருவானது என்பார் மயிலை சீனி. வேங்கடசாமி.

மேலும், புதிய இந்து மதத்தில் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கம் தோன்றியது. இவ்வியக்கத்தை ஆதாரமாகக் கொண்டு இந்துமத்தை நிலைநாட்ட நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றினார்கள். சிவன், திருமால் ஆகிய இருவரும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் அருளிச் செய்தார்கள் என்றும், அவர்களே இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என்னும் நான்மறைகளையும் அருளிச் செய்தார்கள் என்றும் பக்தி இயக்கத்தினர் கதைகள் புனைந்தனர். இவர்கள் திராவிட, வைதீகக் கொள்கைகளை ஒன்றோடொன்று பொருத்திப் பிணைத்துப் புதிய இந்து மதத்திற்கு ஆக்கம் தேடினர்.

அவ்வாறே 'முத்தமிழும் நான்மறையும் ஆனாய் கண்டாய்; வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும், ஆனவன்காண்; செந்தமிழோ டாரியனைச் சீரியனை; ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் அண்ணாமலை யுறையும் அண்ணல் கண்டாய்; அருந்தமிழின் இன்பப் பாவினை அவ்வடமொழியைப் பற்றற்றார்கள் பயிலரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும் கோவினை' என்பது முதலாக இவர்கள் கூறியதும் இப்புதிய திராவிட—ஆரிய வைதீக மதக் கலப்பினை வற்புறுத்துவதற்காகும்.

சேக்கிழார் தமது திருத்தொண்டர் புராணத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் பகுதியில்,

''சைவ நெறிவை திகம்நிற்கச்
 சழக்கு நெறியைத் தவம்என்னும்
பொய்வல் அமணர் செயல்தன்னைப்
 பொறுக்ககில்லோம்...'' (1556)

என்றும் குறிப்பிடுகின்றார். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணப் பகுதியில்,

''வேதநெறி தழைத்தோங்க
 மிகுசைவத் துறை விளங்க

பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத...'' (1904)

என்றும் குறிப்பிடுகின்றார்; இடங்கழி நாயனார் பகுதியில்

சைவநெறி வைதிகத்தின் தரும நெறியோடும் தழைப்ப
மைவளரும் திருமிடற்றார் மன்னிய கோயில்கள் எங்கும்... (4118)

என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பல பாடல்களில் திராவிட, வைதீக சமயங்கள் இரண்டும் இணைந்து வருவதைக் காணலாம். மேலும், வடநாட்டில் தோன்றிய காபாலிகம், காளாமுகம், பாசுபதம், மாவிரதம் முதலிய சமயங்கள் இந்து சமயத்தின் உட்பிரிவுகளாகச் சேர்க்கப்பட்டு, அகச்சமயங்கள் எனப் பெயர் கொடுக்கப்பட்டன. இந்தச் சமயங்களின் உதவியாலும் பக்தி இயக்கத்தின் துணையாலும் புத்துயிர் பெற்ற இந்துமதம் சமண சமயத்தை வன்மையாகத் தாக்கியது.

8. சமணம் குன்றக் காரணங்கள்

பக்தி ஒன்று இருந்தாலே போதும் எளிமையாக வீடுபேறு அடைய முடியும் என்று நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடல்கள் கூறுகின்றன. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் தேவாரத்தில் திருவாடானைப் பதிகம் இரண்டாம் பாடலில்

''வாடல் வெண்டலையங் கையேந்தி நின்று
ஆட லானுறை யாடானை
தோடு லாமலர் தூவிக் கைதொழ
வீடு நுங்கள் வினைகளே''

என்று பாடுகின்றார். இப்பாடலில் சிவபெருமானை மலர்கள் தூவி வணங்கினாலே தம் பாவங்கள் நீங்கும் என்கிறார்.

திருநாவுக்கரசு நாயனார் திருநாகைக் காரோணம் திருக்குறுந்தொகை மூன்றாம் பாடலில்,

''புனையு மாமலர் கொண்டு புரிசடை
நனையு மாமலர் சூடிய நம்பனைக்
கனையும் வார்கட னாகைக் காரோணனை
நினைய வேவினை யாயின நீங்குமே''

என்று பாடுகின்றார். இப்பாடலில் சிவபெருமானை நினைத்தாலே தங்கள் பாவம் போகும் என்கிறார். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் (தொடர் எண். 2925),

''குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே''.

என்ற பாடலில் திருமால் எழுந்தருளியுள்ள வேங்கடமலையை வணங்கினாலே வணங்கியவர் பாவங்கள் போகும் என்கிறார்.

எனவே, மனைவி மக்களை விட்டு, இன்ப துன்பங்களைத் துறந்து, ஐம்புலன் களையும் அடக்கி, கடுந்தவம் புரிந்து, வீடுபேறு அடையும் சமண சமயத்தை விட்டு, பக்தி நெறியைப் பின்பற்றி வீட்டுலகைப் பெறுவதில் மக்கள் நாட்டம் கொண் டார்கள். ஆகவே, இந்து மதத்தின் பக்தி இயக்கம் சமண சமயத்தின் செல்வாக்கைப் பெரிதும் குறைத்து விட்டது எனலாம்.

தமிழ் நாட்டில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை சமயப்போர் மிகக் கடுமையாக நடந்தது. இப்போர் இந்து சமயத்திற்கும் சமண சமயத்திற்கும், இந்து சமயத்திற்கும் பௌத்த சமயத்திற்கும், பௌத்த சமயத்திற்கும் சமண சமயத்திற்குமாக மும்முனைப் போராக நடைபெற்றது என்று மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகின்றார்.

இப்போரில் பௌத்தம் முதலாவதாக அழிந்தது. பௌத்த சமயத்தில் ஹீன யானம், மகாயானம் என்ற பிரிவுகள் ஏற்பட்டு, பௌத்த மதத்தினர் தங்களுக்குள் பூசலை விளைவித்துக் கொண்டார்கள். பொது மக்களாலும் அரசர்களாலும் கொடுக்கப்பட்ட செல்வத்தைப் பௌத்த துறவிகள், தங்கள் கடமைக்காகப் பயன் படுத்தவில்லை. இதனால், துறவிகள் பொது மக்களின் கோபத்திற்கு ஆளானார் கள். இக்கால கட்டத்தில்தான் இந்து, சமண, சமயங்கள் பௌத்த சமயத்தைக் கடுமையாகத் தாக்கின. இத் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பௌத்தத் துறவி கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. இதனால் பௌத்தம் அழிய நேரிட்டது என்று வரலாறுகள் சுட்டுகின்றன.

அடுத்த காலகட்டத்தில் சைவர்களாலும் வைணவர்களாலும் சமணர்கள் பல விதத்தில் கொடுமைப்படுத்தப்பட்டார்கள், கழுவேற்றப்பட்டார்கள். சமணர்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டன.

தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருமாலைப்பகுதி

''வெறுப்போடு சமணர் முண்டர்
வீதியில்சாக் கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில்
போவதே நோய தாகி
குறிப்பெனக் கடையு மாகில்
கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமங் கண்டாய்
அரங்கமா நகருளானே!'' (பாடல்-879)

என்று பாடுகின்றார். இப்பாடலில் பெருமானே! நான் சமணர்களின் தலையை அறுக்க வேண்டும். அப்படி நான் அவர்களைச் செய்யாதிருந்தால் அந்தப் பணி யினைப் பார்த்துக் கொள்ள வேண்டியது உன்னுடைய பொறுப்பு என்று திருமா லிடம் விண்ணப்பம் செய்கிறார்.

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் திருநாவுக்கரசு நாயனார் பகுதியில்

"ஓடி அருகர்கள் தம்மை
உழறி மிதித்துப் பிளந்து
நாடிப் பலரையும் கொன்று
நகரம் கலங்கி மறுக..." (பாடல்-1389)

"யானையின் கையில் பிழைத்த
வினைஅமண் கையர்கள் எல்லாம்
மானம் அழிந்து மயங்கி
வருந்திய சிந்தையர் ஆகி..." (பாடல்-1390)

என்று பாடுகின்றார். இப்பாடல்களில் சமணர்கள் யானையால் கொல்லப்பட்டதையும், நகரத்தில் உள்ள சமணர்கள் கலங்கி நிலை குலைந்து போனதையும் அறிய முடிகிறது,

அடுத்து, திருஞானசம்பந்தர் சுவாமிகள் பகுதியில்

"....அமணர் சேரும்
பாழியும் அருகர் மேவும்
பள்ளியும் ஆன எல்லாம்
கீழ்உறப் பறித்துப் போக்கி..." (பாடல்-2774)

என்று சேக்கிழார் பாடுகின்றார். இப்பாடலில் சமணர்களின் பாழிகள், பள்ளிகளாகிய மடங்கள், கட்டிடங்கள் எல்லாம் பறிக்கப்பட்டதாகக் கூறுகின்றார்.

"ஆய நாள்களில் அமண் பயில் பாண்டி நாடு அதனைத்
தூய ஞானம் உண்டருளிய தோன்றலார் அணைந்து
மாய வல் அமண் கையரை வாதில் வென்றதுவும்
மேய வெப்பு இடர் மீனவன் மேல் ஒழித்ததுவும்" (பாடல்-2953)

"நெருப்பில் அஞ்சினார் தங்களை நீரில் ஓட்டியபின்
மருப்பு நீள் கழுக்கோலில் மற்று அவர்களே ஏறியதும்."
(பாடல்-2954)

என்று பாடுகின்றார். இப்பாடல்களில் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டில் சமணர்களை வாது செய்து வென்ற நிகழ்ச்சியையும், கழுவேற்றிய நிகழ்ச்சியையும் கூறுகிறார். மேலும், மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் பொற்றாமரைக் குளத்து மண்டபத்தின் சுவரில், சமணர்களைக் கழுவேற்றிய காட்சிகளைச் சித்திரமாகத் தீட்டி வைத்திருப்பதும், இக்கோவிலில் ஆண்டுதோறும் ஐந்து நாட்கள் நடைபெற்று வரும் கழுவேற்று உற்சவமும், கழுவேற்றம் நடைபெற்றதற்கான ஆதாரங்களாகும்.

தண்டிஅடிகள் பகுதியில் சமணர்கள் துன்பத்துக்குள்ளான நிகழ்ச்சிகள் (3597-3622) பேசப்படுகின்றன.

"செங்கண் விடையார் திருக்கோயில்
குடபால் தீர்த்தக் குளத்தின் பாங்கு

எங்கும் அமணர் பாழிகளாய்
  இடத்தால் குறைபாடு எய்துதலால்
அங்கு அந்நிலைமைதனைத் தண்டி
  அடிகள் அறிந்தே ஆதரவால்
இங்குநான் இக்குளம் பெருகக்
  கல்ல வேண்டும் என்று எழுந்தார்''

திருவாரூர் கோயிலின் மேற்குப் பகுதியில் உள்ள சிறிய தீர்த்த குளத்தின் அருகில் சமணர்களின் மடங்களும் கட்டிடங்களும், நிலங்களும் இருந்தன. இதைப் பொறுக்காத தண்டியடிகள், இவற்றை இடிப்பதற்கு சூழ்ச்சி செய்கிறார். எனவே, 'சமணர்களின் மடங்கள், கட்டிடங்கள், நிலங்களை அழித்து, குளத்தைப் பெரி தாக்க எனக்கு அருள் தருவாய் 'ஆண்டவனே' என்று வேண்டுகின்றார். பின்பு அக்குளத்தின் அருகினில் இருக்கும் மடங்கள் முதலியவற்றை அழிக்க ஆயத்த மாகும் போது சமணர்கள் தடுக்கின்றார்கள். மீண்டும் சிவபெருமானிடம் வேண்டு கின்றார். சிவபெருமானும் அரசனின் கனவில் தோன்றி சமணரை அழிக்க ஆணையிட்டான் என்றும், ஆண்டவன் சொன்னது போல் அரசனும் சமணர்களை அப்பகுதியிலிருந்து வெளியேற்றிவிட்டு அங்குள்ள மடங்கள், கட்டிடங்கள், நிலங்கள் முதலியவற்றை அழித்து, பதினெட்டு ஏக்கர் நிலப்பரப்பு உள்ள பெரிய குளமாக வெட்டிக் கரை அமைத்தான் என்றும் கூறுகின்றார்.

இந்தச் செய்திகளை

''...சொன்ன வண்ணமே அவரை
  ஓடத் தொடர்ந்து துரந்ததன்பின்
பன்னும் பாழிப் பள்ளிகளும்
  பறித்துக் குளம்சூழ் கரைபடுத்து
மன்னன் அவனும் மனம்மகிழ்ந்து
  வந்து தொண்டர் அடிபணிந்தான்''

என்ற பாடலிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

சமணம் குன்றியதைக் கதைகள் வாயிலாகவும் அறியலாம். கி.பி. 1478இல் விஜயநகர மன்னனுக்கு உட்பட்ட செஞ்சி பகுதியைத் தெலுங்கு இனத்தைச் சேர்ந்த வெங்கடபதி நாயகன் என்னும் கிருஷ்ணப்ப நாயகன் ஆண்டு வந்தான். இவன் ஒவ்வொரு உயர் குலத்தைச் சேர்ந்தவரிடத்திலும் ஒரு பெண்ணை மணக்க விரும்பினான். முதலில் பிராமணர்களிடம் பெண் கேட்டான். பிராமணர்கள் எங்களைவிட உயர்ந்தவர்களான சமணர்களிடம் முதலில் மணம் செய்யுங்கள்; பின்பு நாங்கள் பெண் தருகிறோம் என்று கூறினர்; அரசனும் அவ்வாறே சமணர் களை அழைத்துப் பெண் கேட்டான். அவர்கள் மறுத்து அரசனின் கோபத்திற்கு ஆளாகாதிருக்க, ஒரு சமணச் செல்வந்தரின் வீட்டைக்கூறி, குறிப்பிட்ட தேதியில் வந்தால் மணம் செய்துகொண்டு போகலாம் என்று கூறினர்; அரசனும் அவ்வாறே அத்தேதியில் தன் சேனைப் பரிவாரங்களுடன் அவ்வீட்டிற்குப் போனான். அவ் வீட்டில் யாரும் இல்லை; பந்தல்காலில் ஒரு பெண் நாய் கட்டியிருப்பதைக் கண்டு

அவமானப்பட்டான் அவ்வரசன்; அதனால், அப்பகுதியிலுள்ள சமணர்களை எல்லாம் தன் படைகளை ஏவி அழித்தான் என்றும், சமணர்கள் அவனுக்கு அஞ்சி வேறு நாடுகளுக்குச் சென்றார்கள் என்றும், தங்கள் பூணூலை அறுத்து விட்டுச் சைவர்கள் ஆனார்கள் என்றும் அப்பரம்பரையினர் இன்றும் நீறுபூசிய வேளாளர் என்று சொல்லிக்கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் சமணமும் தமிழும் என்ற நூலில் மயிலை சீனி. வேங்கடசாமி கூறுகின்றார்.

இவ்வாறாகச் சைவர்களாலும், வைணவர்களாலும், அரசர்களாலும், பற்பல காலங்களில் பல்வேறு கொடுமைகளுக்குச் சமணர்கள் உள்ளாக்கப்பட்டார்கள். அவர்கள் உடமைகள் பறிக்கப்பட்டும், மதமாற்றத்திற்கு ஆளாக்கப்பட்டும் வந்தார் கள் என்பதை அறிய முடிகிறது.

9. தற்கால நிலை

பல்வேறு காரணங்களால் சமண சமயம் நாளடைவில் குன்ற ஆரம்பித்தது. இருந்தும் பௌத்தம் போல் சமணம் முற்றிலும் மறையவில்லை. சமணர்கள் தமிழ்நாட்டில் சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, தஞ்சா வூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் சிறு தொகையினராக வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் வாழும் ஒவ்வோர் ஊரிலும் தீர்த்தங்கரர்களுக்குக் கோயில் கட்டி உருவ வழிபாடு நடத்தி வருகின்றனர். சமண மடம், செஞ்சி வட்டத்திலுள்ள சித்தாமூரிலிருக்கின்றது, அங்கு மடாதிபதியும், துறவிகளும் இருக் கின்றனர். இவர்கள் அருகதேவருக்கு விழா எடுக்கின்றனர். இவர்கள் சிவராத்திரி, தீபாவளி முதலான பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். சமண சமய நெறி களை முறையாகக் கடைபிடித்து வருகின்றனர். அன்னதானம், அபயதானம் முதலியவற்றையும் செய்து வருகின்றனர். இல்லறத்திலிருக்கும் சிலர் துறவற ஒழுக் கங்களை மேற்கொண்டு துறவிகளாகவும் ஆகி வருகின்றார்கள். இவர்கள் பண் டைய சமண சமய முன்னோர்கள் பின்பற்றி வந்த சமயக்கொள்கைகளை மாறு படாது பின்பற்றி வருகின்றார்கள். தமிழ்நாட்டில் இவர்களின் மொத்த மக்கள் தொகை சுமார் 50,000 பேர் என்று மல்லிநாத் ஜெயின் சாஸ்திரி கூறுகின்றார்.

JAINISM THEN AND NOW

The Origin of Jainism

Among the religions of the world, Jainism is of a very ancient origin. Besides its antiquity Jainism is an independently functioning religion among the religions of India. It is erroneous to state that Jainism was founded by Mahāvīrar. It is also incorrect to hold the view that Jainism emerged as a counter to the religion of the Vedic period. In his book, *Jaina Culture* (pp 5-6) Mohanlal Mehtha asserts that Jainism is a totally independent religion in its functioning or practice.

The word *Camanar* means ascetics. This religion stresses the importance of renunciation and claims *Vīṭu* or the state of eternal bliss only as the prerogative of ascetics. Hence the word *Camaṇam* is used to distinguish Jainism as an honorific term. The other names of this religion are Jaina religion, *Ārukata* religion, *Nikaṇṭa* religion and *Anēkānta* religion or *Siyātvāta* religion.

Tīrttaṅkarars

It is the avowed belief of the followers of Jainism that Tīrttaṅkarars appeared in this world from time to time to propagate the tenets of Jainism.

The Sanskrit word Tīrttaṅkarar gives the stretched meaning, 'those who rescue the souls struggling in the ocean of human life and bring them ashore.' Briefly the word is a combination of *tīrttam* which means water and *karar* which means those who lead to the shore.

The details regarding the height, life-span and symbols are mentioned in Jaina treatises as follows:

S. No. and Name of Tīrttaṅkdrar	*Height*	*Life-span*		*Symbol*
1 Virucapatēvar (alias Ātinātar Ātipakavaṉ)	500 vil	84	Crores of Years	Ox
2 Ajitanātar	450 vil	72	,,	Elephant
3 Campavaṉātar	400 vil	60	,,	Horse
4 Apinantaṉar	350 vil	50	,,	Monkey
5 Cumatinātar	300 vil	40	,,	Ruddy goose
6 Patmanāpar	250 vil	30	,,	White Lotus
7 Cupārsvanātar	200 vil	20	,,	Svastikam
8 Cantirapirapar	150 vil	10	,,	Crescent moon
9 Puṣpatantar	100 vil	2	,,	Crocodile

10 Cītaḷanātar	90 vil	1 "	Perennial tree
11 Sriyāmcanātar	80 vil	80 Lakhs of Years	Rhino
12 Vācupūjyar	70 vil	72 "	Buffalo
13 Vimalanātar	60 vil	60 "	Pig
14 Anantanātar	50 vil	30 "	Porcupine
15 Tarmanātar	45 vil	10 "	Vajjira staff
16 Cāntinātar	40 vil	1 "	Deer
17 Kuntunātar	35 vil	95Thousand Years	Goat
18 Aranātar	30 vil	84 "	Fish
19 Mallinātar	25 vil	55 "	Pot
20 Muṉicuviratanātar	20 vil	20 "	Tortoise
21 Namiṉatar	15 vil	10 "	Blue Lotus
22 Nēminātar	10 vil	1 "	Conch
23 Pārcuvanātar	9 muḻam	100 Years	Snake
24 Mahāvīrar (Varttamāṉar)	7 muḻam	72 "	Lion

(One vil = 160 cms)
(One muḻam = 45 cms)

The places of birth of the Tīrttaṅkarars:

The Tīrttaṅkarars of the chronological sequence of 1,2,4,5, and 14 were born at Ayōdhya, the 3rd Tīrttaṅkarar at Cirāvasti, 6th Tīrttankarar at Kaucāmpi, 7th and 23rd Tīrttaṅkarars at Vāraṇāci, 8th Tīrttaṅkarar at Cantirapuri, 9th Tīrttaṅkarar at Kākanti, 10th and 13th Tīrttaṅkarars at Pattaḷapuram, 11th Tīrttaṅkarar at Cimmapuri, 12th Tīrttaṅkarar at Campāpuri, 15th Tīrttaṅkarar at Iratiṉapuri, 16th, 17th and 18th Tīrttaṅkarars at Hastiṉāpuram, 19th and 21st Tīrttaṅkarars at Mitilāpuram, 20th Tīrttaṅkarar at Irācakirutam, 22nd Tīrttaṅkarar at Cauripuram and the 24th Tīrttaṅkarar at Kuṇtalapuram. These details are found in Jain treatises and works. Moreover all these Tīrttaṅkarars appeared in North India and preached various moral codes to the people of this mundane world and guided them to a state of eternal bliss. It is to be noted here that not a single Tīrttaṅkarar appeared in the land of Tamil.

Jaina works state that Virucapatēvar also known as Ātiṉātar or *Ātipakavaṉ* formulated first the tenets of Jainism and the other Tīrttaṅkarars, who succeeded him preached and propagated that religion.

Tiruvaḷḷuvar in his very first *Kuṟal* or couplet of the first invocatory chapter of *Tirukkuṟaḷ* states,

> "akara mutala eḻuttellām, **āti**
> **pakavaṉ** mutaṟṟē ulaku"

(As the letter 'அ' is the first and foremost among letters in the alphabet, Ātipakavaṉ (the foremost God) is the first or pioneer in this world of ours)

Kunacākarar in his work *Yāpparuṅkālakkārikai* states

"pōtu cāntam poṟpa ēnti
ātinātar cērvōr
cōti vāṉam tūṉṉuvārē"

(Here Kuṇacākarar says that Ātinātarāṉa virucāpatēvar is the Foremost God)

However historians aver that the 23rd Tīrttaṅkarar Pārcuvanātar founded Jainism and the 24th Tīrttaṅkarar, Mahāvīrar reformed it. Looked at from a research angle, it is evident that all the Tīrttaṅkarars were great savants, who really lived in this world. It is customary on the part of those who live in later periods to attribute supernatural characteristics on the religious leaders of the distant past. This is natural in respect of all religions. In order to project an enhanced image regarding the glory, talent, excellence and godliness of their respective religious leaders the followers of each religion weave imaginary accounts of their leaders and spread them with religious fervour. Setting aside such imaginary and supernatural attributes as religious affinity one can certainly infer that they actually lived in this world.

All the Tīrttaṅkarars do not belong to the historical period. The first nineteen Tīrttaṅkarars appear to belong to the pre-historic times. The last five ie. Muṉicuviratanātar, Naminātar, Nēminātar, Pārcuvanātar, and Mahāvīrar come under the purview of the historic period.

The stories of *Irāmāyaṇam* and *Mahāpāratam* are treated as historical ones by historians in Indian history. In the beginning of Indian history the tales of those two epics are narrated. As the Hindus have their *Irāmāyaṇam* and *Mahāpāratam* stories the Jains too have their versions of the same with only slight changes.

As those two epics find a place in Indian history, the Tīrttaṅkarars who lived during the period of *Irāmāyaṇam*, such as Muṉicuviratanātar, Naminātar, Nēminātar, Pārcuvanātar and Māhāvīrar were historical persons.

The 23rd Tīrttaṅkarar, Pārcuvanātar lived for 100 years between 817 B.C. and 717 B.C. 250 years later. Vartamāṉa Mahāvīrar lived for 72 years between 599 B.C. and 527 B.C. During the period of Mahāvīrar, Gautama Buddha, the founder of Buddhism and Maṟkali, the founder of Ācīvaka religion were contemporaries. Mahāvīrar was the eldest of them all. Maṟkali first aligned himself with Mahāvīrar for six years and then established Ācīvaka religion on account of a difference of opinion with Mahāvīrar. Mayilai Ciṉi Vēṅkaṭacāmi contends that the Jainism was in vogue earlier than Buddhism and Ācīvaka religions.

The sects of Jainism

In the later period Jainism was divided into two sects ie *Tikampara* and *Cuvētāmpara.*

The Jain ascetics who belong to the *Tikampara* order do not wear any garment. They do not even cover themselves with a loincloth. The word Tikampara (Tikku + ampara) means wearing only the *tikkus* or directions as garments. The Tirttankarar idols in their temples are found naked without clothes.

There are two subsects among *Cuvētāmparas (1) Cuvētāmpara* and (2) *Cuvētamparastāṉakavāci*.

The *Cuvētāmpara* Jain saints wear white garments. The idols of their Tirttankaras too are clothed in white. The word *Cuvētāmparam* means white garment.

The *Cuvētāmparastāṉakavāci* Jains too are clad in white like the *Cuvētāmparas*. But they do not subscribe to idol worship. Therefore they place Jain scriptures in their temples and worship them as Tirttankarars and God Arukar. Among the followers of this sect there is another sect known as *Terāpanti*. They are similar to *Cuvētāmparastāṉakavāci* Jains in all respects. *Cuvētāmparars* and *Cuvētāmparastāṉakavācis* are found in many towns of Tamil Nadu. *Tikampara* Jains live in different parts of Tamil Nadu.

The philosophy of Jainism

In Jain religious philosophy nine objects are mentioned. They are called *Navapatārttam*. They are *Uyir* (life), *Uyirallatu* (the lifeless) *Puṇṇiyam* (result of good deeds), *Pāvam* (sin), *Ūṟṟu* (fountain) *Ceṟippu* (Souls that get freed from karma), *Utirppu* (shedding), *Kaṭṭu* (bond) and *Viṭu* (eternity). These are also known respectively as *Jīvaṉ, Ajīvaṉ, Puṇṇiyam, Pāvam, Āsravam, Jamvarai, Nirjarai, Pantam and Mōṭcam.*

In *Mēru Mantara purāṇam*, the 68th quatrain states the above mentioned nine components of Jain philosophy thus

uyirum uyirallatum puṇṇiyam pāvam ūṟṟum
ceyirtir ceṟippum utirppum kaṭṭum viṭum....

1. ***Uyir*** (Jīvaṉ) — Lives are innumerable, imperishable and have been there from times immemorial without a beginning. They are not created by God. They commit good or bad deeds and as a result enjoy happiness or suffering. They attain birth and death in the four stages of *Naraka kati* (habitation in Hell) *Vilanku kati* (animal stage) *Makkaḷ kati* (Human stage) and *Tēva kati* (divine stage). After struggling in those four stages they attain *Pēriṉpa Viṭu* (the stage of Eternal bliss) without further birth free from both good or bad deeds.

Uyirkaḷ (lives) are of five kinds i.e. *Ōraṟivuyir* (lives with a single sense) *Īraṟivuyir* (lives with two senses) *Mūvaṟivuyir* (lives with three senses), *Nālaṟivuyir* (lives with four senses) and *Iyaṟivuyir* (lives with five senses). The last mentioned

Iyarivuyir — lives with five senses have two divisions i.e. those with *pakuttarivu* (sense of discrimination) those without that sense.

According to the bigness or smallness of its dimension *Uyir* is spread over the body of the living being either in a big or small measure.

The illuminating capacity of a lamp in a bushel is confined to the bushel whereas a lamp in a room lights the entire room. Similarly according to the size of the bodies of living beings *Uyir* will expand or shrink. There is an *Ārukata* saying 'Periyatan āvi peritu' (the life of the big one is big).

There is a further division of *Uyirkaḷ* i.e. *Vīṭṭatu* and *Mārratu*. *Vīṭṭatu* known also as *Mōtca Jīvan*, is the enlightened form of life having ridden itself of both good and bad deeds and eligible for *Vīṭu* or the state of eternal bliss. *Mārratu* known as *Camcāra jīvan* is the bonded form of life enmeshed in good and bad deeds and in consequence shunting between heaven and hell and struggling in the cycle of birth and death. The *Uyirkaḷ* born as *Vilaṅku* (animal) *Narakar* (hell inmates) and *Tēvar* (heavenly beings) cannot attain *Vīṭu* in their respective states of birth. Only the *Uyirkaḷ* born as human beings and that too ascetics among them can attain *Vīṭu*.

2. ***Uyirallatu*** *(Ajīvan) Putkalam, Tarmam, Atarmam, Kālam* and *Ākāyam* are the five lifeless inanimate objects. These also are *Anāti* (without a beginning) like *Uyir*. God has not created these objects. These lifeless or inanimate objects do not have the characteristics of life such as commission of good and bad deeds experiencing joy or sorrow as a result of those deeds, wallowing in the many stages of birth and death acquisition of knowledge and wisdom after severing the bonds of good and bad deeds and ultimately attainment of *Vīṭupēṟu* or the state of eternity.

Putkalam This covers the *Uyirkaḷ* and impels them to commit good or bad deeds (*Puṇṇiyam* and *Pāvam*). *Putkalam* consists of the five senses, the objects apprehended by the five senses, darkness, light, sunlight, shadow, sound, earth, water, fire and wind. *Putkalam* is of alterable nature either as a big or small concrete object. *Putkalam* has shape, colour, taste, odour, and harm. It gives life, body, mind, speech, joy, sorrow, birth, living and death.

Tarmam-Atarmam In Sanskrit these are known as *Tarmāstikāyam* and *Atarmāstikāyam*. These are not *Puṇṇiyam* and *Pāvam*. *Tarmam* and *Atarmam* are minute atoms. They serve as the venues for *Uyirkaḷ* to stay and function. As water enables fishes to swim and rest, *Tarmam* and *Atarmam* serve as places of work and stay for *Uyirkaḷ*. Such functions as walking and running are caused by the atoms of *Tarmam* and sitting, standing and lying are related to the atoms of *Atarmam*. Without these atoms the various bodies formed by *Putkalam* cannot stay and function. The above mentioned roles of *Tarmam* and *Atarmam* are expounded as follows:

'tarumātti kāyam tāṉeṅkum uḷatāyp
poruḷkaḷai naṭattum porunta nittiyamāy
appaṭit tāki ataṉmātti kāyamum
epporuḷ kaḷaiyum niṟuttal iyaṟṟum'

(*Maṇimēkalai* 27.187-190)

Kālam (Time) covers infinitesimally small periods of time taken to blink one's eyes or snap one's fingers (Imaithal and Nodital) as well as astronomically long periods like *Karpa kālam* (aeon)

'kālam kaṇikam eṉaṅkuṟu nikaḻcciyum
mēlum kaṟpattiṉṉeṭu nikaḻcciyum ākum' (*Maṇimēkalai* — 27.: 191-192)

Ākāyam is not one of the five elements or pancapūtams according to Jainism. It provides shelter to *Tarmam, Atarmam, Kālam, Uyirkaḷ and Putkalam.*

'..... ākāyam ellāp poruṭkum
pūkkum iṭaṅ koṭukkum puriviṟṟākum' (*Maṇimēkalai* — 27 : 193-194)

The objects mentioned so far are lifeless (Ajīvaṉ) objects.

3 & 4 Puṇṇiyam, & Pāvam *or nalviṉai, & Tīviṉai* (Good and Bad deeds):

These *Puṇṇiyam* and *Pāvam* mingle in three kinds with *Uyirkaḷ*. They are thought (mental action), speech (oral action) and deed (bodily action). *Puṇṇiyam* attained on account of good thoughts and deeds causes the birth of *Uyirkaḷ* as human beings or heavenly beings and makes them enjoy wealth, wisdom, joy, fame, exalted state and excellence. *Pāvam* accrued due to one's bad thoughts and deeds leads *Uyirkaḷ* to be born in *Naraka kati* (birth in Hell) and *Vilaṅku kati* (birth as animals) and makes them to suffer from ignorance, sorrow, disgrace, poverty and meanness.

5. Ūṟṟu *or Āsravam* (Fountain) As water gushes out of a fountain, *Nalviṉai* (good deeds) and *Tīviṉai* (bad deeds) mingle spontaneously with *Uyirkaḷ* through mind, speech and body (thought, word and deed).

6. Ceṟippu *or Samvarai* (Releasing *āṉmā* from the blockage of karma)

The blockage of the path of *Ūṟṟu* (fountain) through which *Nalviṉai* and *Tīviṉai* reach *Uyirkaḷ* is called *Ceṟippu. Uyir* while experiencing the result of its good or bad deeds in the previous birth, commits good or bad deeds in the present birth thereby acquiring *Karma.* Hence *Uyirkaḷ* should prevent the acquisition of such *karma* of their present birth and confine themselves to the experience of the karma of previous birth. This prevention is known as *Ceṟippu*. If the canals through which water flows into a tank are blocked the tank will not be flooded. Similarly if one's mind, body, speech and five senses are restrained, *Nalviṉai* and *Tīviṉai* cannot reach or affect *Uyirkaḷ.*

7. Utirppu (Nirjarai) (*anmā* drifting away from karma)

After blocking the further impact of good and bad deeds on *Uyirkaḷ*, the unsuffered residual effects of the good and bad deeds of previous birth should be removed. This process of riddance is known as *Utirppu* or *Nirjarai*. This should be performed by means of *Tuvātacatapam, Kupti, Camiti, Tarumattiyāṉam* and *Cukkilattiyāṉam*. This *Utirppu* process is poetically stated as follows:

varumpāvam etirkāttu maṉṉuntam paḻaviṉaiyum
oruṅkāka utirtakkāl uyirtūymai viṭeṉṟāṉ (*Nīlakēci Mokkala* — 313)

8. Kaṭṭu (Pantam-Bond)

When the *Viṉaikaḷ* (deeds) of mind, speech, body and five senses mingle in a union with *Uyirkaḷ* it is called *Kaṭṭu* or *Pantam*. *Viṉaikaḷ* mingle with *Uyirkaḷ* and are absorbed by the latter just as redhot iron absorbs the water sprinkled on it or like the mingling of water with milk. Another analogy for *Kaṭṭu* is that *Uyir* is a piece of cloth soaked in oil (mind, body, five senses) and the soaked piece of cloth easily absorbs dirt (*Viṉaikaḷ*).

9. Vīṭupēṟu (Mōṭcam or Mukti)

The *Uyir* severing itself from the five senses attains *Kēvala ñāṉam* (endless wisdom), *Kēvala taricaṉam* (endless sight), *Kēvala Vīriyam* (endless valour) and *Kēvala cukam* (endless bliss). Ultimately *Uyir* attains *Vīṭu* which is the most exalted among all the worlds and acquires the revered *Arukata* state. This attainment is known as *Vīṭu* or *Mōṭcam*.

'varuvaḻi iraṇṭaiyum māṟṟi muṉcey
aruviṉaip payaṉ aṉupavittu aṟuttiṭutal
atu vīṭākum. (*Maṇimēkalai*, 27 : 199-201)

The awareness or knowledge of the true import of the above mentioned nine matters is known as *Naṉñāṉam* (good wisdom). Realising without any doubt their nature is called *Naṟkāṭci* (good sight). Conducting oneself with *Naṉñāṉam* and *Naṟkāṭci* in mind is known as *Nalloḻukkam* (good conduct). This three-fold interaction is known as *Irattiṉattirayam* or *Mummaṇi* (three gems). This is essential for the attainment of *Vīṭu* or *Mōṭcam*.

III. The *Illaṟam* (household life) and *Tuṟavaṟam* (ascetic life) of Jains and their respective conduct in those stages

Human life is of two kinds i.e. *Illaṟam* (household life) and *Tuṟavaṟam* (ascetic life). These two divisions are also known as *Cāvaka Tarumam* and *Yati tarumam*. *Illaṟam* or *Cāvaka tarumam* is the adoption of a householder's life led by a person along with his wife, children and relations. *Tuṟavaṟam or Yati tarumam* is the renunciation

of the world and worldly considerations and doing penance for the attainment of *Vīṭu* or *Mōṭcam*. This saintly conduct is known as *Tuṟavaṟam*.

The Jaina norms of conduct for Illaṟam (householder's life)

The Jaina religious scriptures prescribe the following ten *viratams* (vows) to be adhered to and adopted by the Camaṇars (Jains).

1. ***Kollāmai*** *or (Ahimsai)* — (Avoidance of slaughter)

iyaṅkuyir kollāmai yēvāmai yākum
peruṅ kolaiyiṉ miṭci yeṉal (*Aruṅkalacceppu* verse — 67)

Kollāmai is not killing any *Uyir* (living being) which has the capacity to function and not setting others on the assignment of slaughtering any *Uyir* (living being)

2. ***Poyyāmai*** (not uttering lies or falsehood)

pāvam periyaṉa collāmai yēvāmai
yāku miraṇṭā vatam (*Aruṅkalacceppu* verse — 69)

Poyyāmai is not uttering a lie or falsehood which is responsible for *Tīviṉai* (bad deeds) and causes grief to oneself and others. It is also the trait of not making others utter lies or falsehood.

3. ***Kallāmai*** (not stealing)

koṭātatu kollāmai yēvāmai yākuṅ
koṭātatu killā vatam (*Aruṅkalceppu* verse — 71)

Kallāmai is not plundering what one has not given willingly and also not instigating others to steal the belongings of others.

4. ***Piṟar maṉai Virumpāmai*** (not casting lustful eyes on other man's wife)

vititta vaḻiyiṉṟik kāma ṉukartal
matippiṉmai nāṉkā vatam (*Aruṅkalacceppu* verse — 74)

Pirarmanai virumpāmai is not desiring to have sexual pleasure by other means or with persons other than the legitimate partners with whom the union was solemnized in the presence of parents, mentor and other relations. This vow should be observed in both thought and deed.

5. ***Poruḷ Varaital*** *or Miku poruḷ virumpāmai* (Not desiring excessive wealth)

poruḷvarain tācaic curukka lēvāmai
yiruṭirntārk kaintā vatam (*Aruṅkalacceppu* verse — 77)

Poruḷ varaital is not having avarice towards assets like house and land and not being attached excessively towards one's own belongings. It is the curtailment of desire on one's part and also not urging others to acquire and bring more than what is absolutely necessary to fulfil one's actual needs.

These five vows are called *Anuviratam.*

6. ***Mūlakuṇaṅkaḷ*** (Fundamental Qualities) (3 in number.)

kaḷḷoṭu tēṉpulāl uṇṇāmai aivatamun
teḷḷuṅkāṇ mūla kuṇam (*Aruṅkalacceppu* verse — 82)

As *Kaḷ* (toddy) intoxicates a man and ruins his intellect and as *tēṉ*(honey) is extracted by killing bees and as *pulāl* (meat) is obtained by slaughtering animals, these three things should be avoided by *illaṟattār* (householders).

These three *Mūlakuṇaṅkaḷ* (fundamental qualities) along with the already mentioned five vows (*Aṇuviratam*) make for a total of eight *Mūlakuṇaṅkaḷ.*

7. ***Piṟa Oḻukkaṅkaḷ*** (other rules of conduct) (2 in number)

Piṟa Oḻukkaṅkaḷ (other rules of conduct) are not eating after sunset and paying obeisance to *Acāriyās* (mentors). Hence *Camaṇars* (Jains) eat before sunset and show due respect to their mentors. These two qualities added to the already mentioned eight traits make for the ten vows to be observed by Jains.

Thus in Jainism householders should not only conduct themselves virtuously but also revere asceticism. The Jain householders always held the Jain ascetics in great esteem. They considered their esteem for ascetics as *Puṇṇiyam* (an act of virtue).

The following couplet in *Tirukkuṟaḷ* sums up the essence of the *illaṟavāḻkkai* (householder's life) of Jains.

'turantārkkut tuppuravu vēṇṭi maṟantārcol
maṟṟai yavarkaḷ tavam (*Tirukkuṟaḷ* — 263)

(In order to serve the ascetics, others have forgotten to do penance)

IV. The conduct of Camaṇa (Jaina saints)

வராங்கன் குதிரை ஆகாயத்தில் பறப்பதுபோல் வேகமாக ஓடி, யாரும் அறிய முடியாத காட்டினுள் சென்று, ஒரு பெரிய கிணற்றில் விழுந்து இறந்து விடுகின்றது. வராங்கன் செய்வதறியாது திகைத்து அக்கிணற்றில் இருக்கும் ஒரு கொடியைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறிவந்து, பாதையை நோக்கி நடக்கும்போது, வேங்கைப் புலி ஒன்று வராங்கனைப் பின்தொடர்ந்து வருகின்றது. இதைக் கண்டதும் வராங்கன் ஓடி அருகில் உள்ள ஒரு மரத்தில் ஏறித் தப்பிக்கின்றான்.

மரத்தின் அருகில் வந்த புலி வராங்கன் வரவுக்காக காத்து நிற்கின்றது. பொழுதும் இரவாகின்றது. வராங்கன் மரத்தின் கிளைகளைப் பிடித்துக் கொண்டே தூங்கிவிடுகின்றான். விடிந்த நேரத்தில் கீழே பார்க்கின்றான். புலி போகாமல் இருப்பது கண்டு மனம் வருந்துகின்றான். அப்போது அருகில் ஒரு ஆண் யானையைப் பார்க்கின்றான். உடனே பெண் யானையைப் போல் குரல் கொடுக்கின்றான்.

யானையும் குரல் வந்த திக்கை நோக்கி வருகின்றது. மரத்தின் கீழ் வந்த யானை பெண் யானை இல்லாது மரத்தின் மேல் இருக்கும் வராங்கனைப் பார்த்துக் கோபம் கொள்கிறது. இந்நிலையில் பசியுடன் இருக்கும் புலியும் யானை யின் மேல் பாய்கிறது. யானையும் அதிக கோபத்துடன் புலியைத் தாக்க, இறுதியில் புலி கொல்லப்பட்டு யானை வந்த வழியே சென்று விடுகின்றது.

வராங்கன் மரத்தைவிட்டுக் கீழே இறங்கி நடந்து வரும்போது, பொய்கையைப் பார்க்கின்றான். அந்தப் பொய்கையில் இறங்கிக் கைகால்களைக் கழுவிக் கொண் டிருக்கும்போது முதலை ஒன்று அவனைப் பிடித்துக் கொள்கிறது. என்ன செய் வது என்று அறியாது திகைத்த அவன் அருக தேவரையும் நேமி நாதரையும் நினைத்து வேண்டுகின்றான். இவர்களுடைய அருளினால் முதலையிடமிருந்து விடுபடுகின்றான்.

வராங்கன் தடம்பார்த்து நடக்கும்போது அவனைச் சோதனை செய்வதற்காக ஒரு அழகான தேவதை ஒருத்தி தோன்றுகிறாள். அவள் வராங்கனிடம், ''மன்னன் பூமிபாலகன் மகளாகிய நான் ஒரு சத்திரியனுக்கு திருமணம் முடிக்கப்பட்டு, பல படைகளுடன் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தேன். அப்போது காட்டு வழியில் வேட்டுவர்கள் வழிமறித்துத் தாக்கும்போது, நான் தப்பித்து வந்து விட்டேன். உன்னை விட்டால் எனக்கு வேறு யாரும் இல்லை; எனவே, என்னை மனைவி யாக்கிக்கொள்'' என்று வேண்டுகின்றாள்.

வராங்கன் அப்பெண்ணை ஏறெடுத்தும் பார்க்காமல் ''பெண்ணே நான் உன்னை மனைவியாக்கிக் கொள்ளும் நிலையில் இல்லை. நான் உன்னைத் தொட்டால் என்னுடைய உயர்ந்த கொள்கையான விரதம், அருக தரிசனம், நாலு கெதி எல்லாம் கெட்டுப் போய்விடும். என்னை விட்டுவிடு. உன்னைக் கொன்ற பாவத்துக்கு என்னை ஆளாக்காதே'' என்று வேண்டுகின்றான். அதைக் கேட்ட அத்தேவதை ''அன்பரே! நான் பெண் அல்ல; தேவதை. உன்னைச் சோதிக்கவே வந்தேன்'' என்று கூறி மறைந்து விடுகின்றது.

வராங்கன் அத்தேவதையின் செயலை நினைத்து, நடந்துவரும்போது காடு வருகின்றது. அங்கு வேடர்களைக் காணுகின்றான். அவ்வேடர்கள் வராங்கனைப் பிடித்து, அவர்கள் தலைவனிடம் கொண்டு போகின்றனர். சதுர்த்தசி நாளில் பிடாரிக்கு வராங்கனைப் பலிகொடுக்குமாறு தலைவன் ஆணையிடுகின்றான். வேடர்கள் வராங்கனைக் கூட்டிச் சென்று, எலும்புகளால் தூண் நிறுத்தி, பசுத் தோலால் மேலே மூடி, புழுக்கள் சொரியும் கொட்டடியில் போட்டு அடைத்து வைக்கின்றனர். இந்நிலையில் வராங்கன் தன்னைப் பற்றிய ஆழ்ந்த யோசனையில் அருக தேவரை நினைத்து இருக்கும்போது, வேடர் தலைவனின் மகன் பாம்பு கடித்து, இறந்தவன் போல் கொண்டு வரப்படுகின்றான். அப்போது, தலைவன் ''என் மகனின் விசத்தைப் போக்க யார் இருக்கிறார்கள்'' என்று அழுது புலம்பு கின்றான்; வராங்கன் 'நான் விசம் தீர்க்கின்றேன்' என்று சொல்ல, வராங்கன் விடுவிக்கப்படுகிறான். வேடர் தலைவனின் மகனும் விசம் நீக்கப்பட்டுக் குண மாகின்றான். வேடர் தலைவன் மனமகிழ்ந்து வராங்கனுக்குக் குடம் பொன்

கொடுக்கச் சொல்கிறான். இதை வராங்கன் தவிர்த்து வழித் துணைக்கு மட்டும் ஆள் ஒருவன் வேண்டும் என்று கூற, தலைவனும் அவ்வாறே அனுப்பி வைக்கிறான்.

வராங்கனும் வேடனும் பாதையறிந்து போகும்போது வணிகர்களின் கூட்டத்தைப் பார்க்கிறான். பின் வேடனை அனுப்பிவிட்டு அவ்வணிகர்களின் கூட்டத்துடன் போகும்போது அவ்வணிகர்கள் வராங்கனைக் களவு செய்புவன் என்று நினைத்து அவனைப் பிடித்துத் தன் தலைவனிடம் கொண்டு போகின்றனர். அத்தலைவன் வராங்கனின் வடிவழகைக் கண்டு இவன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருப்பான் என்ற முடிவுக்கு வருகிறான். வராங்கனையும் ''நீ யார்?'' என்று கேட்க அவனும் தன் வரலாற்றைக் கூறுகின்றான். அந்நிலையில் அவ்வணிகர்களின் பொருள்களை வேடர்கள் சூழ்ந்து கொள்ளையடிக்கின்றனர். இதனால், வணிகர்கள் கூட்டம் சிதறடிக்கப்பட்டும் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டும் இருக்கும் நிலையில் வராங்கன் வேடர்கள் கூட்டத்தின் மேல் படையெடுத்து, அவர்களின் தலைவனையும், மற்றவர்களையும் கொன்று குவிக்கின்றான். இதைக் கண்ட வணிகர்கள் வராங்கனைப் புகழ்ந்து ''செட்டிப்பட்டம்'' கட்டிச் சிறப்புச் செய்து அவன் நாட்டுக்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

உத்தம பட்டணத்தில் தருமசேனராசன் வராங்கனைக் காணாது, துயரமுடன் இருக்கிறான். இந்நிலையில் தன் சேனைகளை அழைத்துத் தன் மகனைத் தேடி வருமாறு உத்தரவிடுகின்றான். தேடிச் சென்ற படைவீரர்கள் வழியில் வராங்கன் அணிந்திருந்த ஆபரணங்கள் எல்லாம் சிதறிக் கிடப்பதைப் பார்த்து, அவ்வழியே தொடர்ந்து போகும்போது, பெரிய கிணறு ஒன்றில் வராங்கன் சென்ற குதிரை இறந்து கிடப்பதைப் பார்த்து, அரசனிடம் வந்து கூறுகின்றார்கள். அரசனும் வராங்கன் தேவியர்களும், நகர மக்களும் வராங்கன் இறந்துவிட்டான் என்று மனங்கலங்கி வர்த்தமாமுனியை அடைந்து தங்கள் துயரத்தைக் கூறுகின்றார்கள். அப்போது வர்த்தமாமுனி வராங்கன் சுகமாக இருக்கிறார் என்று கூற, தர்ம சேனனும் மற்றவர்களும் மன ஆறுதல் அடைந்து இருப்பிடம் வருகின்றார்கள். தருமசேனன் சாகாரம், அநாகாரம், தருமம் போன்ற விரதங்களை மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றான்.

தன் நாட்டை நோக்கி நடந்துவரும் வராங்கன் லலித புரத்தை அடைகின்றான். அங்கு தேவசேனன் ஆண்டு வருகிறான். அவன் நாட்டின் மேல் இந்திரசேனன் படையெடுத்து வருகிறான். எதிரியை முறியடிக்கக் கூடிய பலம் தன்னிடம் இல்லாது தேவசேனன் தவிக்கின்றான்; நாட்டை எதிரியிடமிருந்து காப்பாற்றுபவருக்கு நாட்டில் பாதியும் தன் மகள்களையும் கொடுப்பதாகப் பட்டண வீதியில் முரசு அறிவிக்க உத்தரவிடுகின்றான். இதைக் கேட்ட வராங்கன் தேவசேனராசனுக்கு ஆதரவாகப் படைகளைத் திரட்டிக்கொண்டு இந்திரசேனன் படையுடன் போரிட்டு வெற்றிபெறுகின்றான்.

தேவசேனன் மனமகிழ்ந்து வராங்கனை எதிர் சென்று அழைத்துவந்து தன் மாளிகையில் தனி சிம்மாசனம் போட்டுக் கௌரவிக்கிறான். இந்நிலையில் உத்தமபுரத்திலிருந்து தூதுவர்கள் வந்து தேவசேனனிடம், ''உங்கள் மைத்துனர்

தருமசேன மகாராசாவின் மகனாகிய வராங்கன், வேட்டைக்குப் போனவர் இன்றுவரை வீடு திரும்பவில்லை. இவ்வேளையில் பக்கத்து நாட்டு அரசர்கள் உத்தமபுரத்தை வளைத்துக் கொண்டார்கள். மகனைக் காணாத துயரத்தால் தன் படைகளைத் திரட்டி அவர்களை வெல்ல முடியாத நிலையில், உங்கள் படைகளின் உதவியைப் பெறுவதற்காக எங்களை தருமசேனராசன் அனுப்பி வைத்தார்'' என்று கூறுகிறார்கள்.

வராங்கன் இச்செய்தியைக் கேட்டு மனம் வேதனைப்படுகின்றான். தேவ சேனன் இந்த வராங்கன் தன் மாமன் மகன் என்று எண்ணி பெருமகிழ்ச்சி அடைந்து, அரச சபையைக் கூட்டி, எல்லோரையும் அழைத்து, அவர்கள் முன் னிலையில் தன் இருநூறு மகள்களையும் வராங்கனுக்குத் திருமணம் செய்து வைத்துப் பல பூசைகள் செய்து ''பேரரசர்'' பட்டம் கட்டிச் சிறப்பு செய்து முடித்த பின் இறுதியாகத் தன் சேனைப் பரிவாரங்களுடன் வராங்கனை உத்தமபுரத்துக்கு அனுப்பி வைக்கின்றான்.

தருமசேனன் சேனைப் பரிவாரங்களுடன் வந்து வராங்கனை அழைத்துச் செல்கின்றான். வராங்கன் தன் தந்தையிடம் ஆசிபெற்று, அவருடன் சென்று, தன் மனைவி, மக்கள் எல்லோரும் கூடியிருக்கும் சபையில் தான் பட்ட துன்பங்களை விளக்கமாகக் கூறுகின்றான். இதைக்கேட்ட தருமசேனன் ''நீ முன் செய்த புண்ணி யத்தால் தான் திரும்பி வந்திருக்கின்றாய்'' என்று கூறுகின்றார். பின் தன் நாட்டைச் சூழ்ந்துள்ள படைகளைக் கூறுகின்றார். எல்லாவற்றையும் கேட்ட வராங்கன் படைகளைத் திரட்டி எதிரிகளின் மேல் படையெடுத்து வெற்றி வாகை சூடுகின்றான். வராங்கனின் வெற்றிச் செய்தியைக் கேட்ட தருமசேனன் மகனை எதிர்சென்று அழைத்து வந்து அரச சபையைக் கூட்டி பலநாட்டு அரசர்களையும் வரவழைத்து அவர்களின் முன்னிலையில் நாட்டின் அரசுரிமையை வராங்கனுக்குக் கொடுத்துவிட்டுத் தன் குருவை வணங்கித் தவஞ்செய்து முத்திபதம் அடைகின்றார்.

வராங்கன், வஞ்சனைகள் செய்த தம்பி சுசேணனை அழைத்து, ''பயப்படாதே; நான் உன்மேல் கோபம் கொள்ளவில்லை; நாட்டின் ஒரு பகுதியை நீயே ஆட்சி செய்'', என்று கூறிப் பட்டம் சூட்டித் தானும் அரசாண்டு வருகின்றான். ஆண்டு கள் பல சென்றபின் தன் மகனுக்குப் பட்டம் சூட்டி ஆட்சியைக் கொடுத்துவிட்டுத் தான் முன்பட்ட துன்பங்களை நினைத்து ஒரே மனதாய் இருந்து, கடுமையான தவங்களைச் செய்து, மேன்மையான நிலை அடைந்து, துயில் நிலை ஒழித்து, மூப்பு, நரை, பிணி எதுவும் இல்லாமல் உயர்ந்த குரு நிலையை அடைகிறான்.

கதைப்பாடலின் அமைப்பு

வராங்கன் கதைப்பாடல் காப்பியத்தின் சில தன்மைகளைக் கொண்டமைந் திருக்கிறது. இதற்குக் காரணம் புராணக் காப்பியத்தின் தழுவல் முறையே காரண மாக இருக்கலாம். இது காப்பியத்தின் உறுப்புகளான காப்பு, இறைவணக்கம், நுதலிப்புகுதல், கதையோட்டம், வாழிபாடுதல் முதலானவற்றைப் பெற்றிருக்கின்றது.

காப்பு

காப்பு என்பது கதைப்பாடலின் தொடக்கமாகத் தாம் மேற்கொண்டிருக்கும் கவிதைப் பணி சிறப்பாக அமைய, தாம் வழிபடும் கடவுளர்களை துணை நின்று அருள்புரிய வேண்டி ஆசிரியரால் பாடப்படுவதாகும்.

''திங்கள்மும் மாரிப்பெய்ய தேசம் செழித்தோங்க
எங்கும் ஜினதருமம் இயலுடனே தான்விளங்க
கொல்லா விரதமுதல் கோமான் நிறம்விளங்க
....
....
நாமகளும் பூமகளும் நன்மையுடன் காப்ப''. (அடி எண். 1-8)

இப்பாடலின் பொருள்:

மழைவளம் வேண்டியும், தேசம் செழிக்கவும், கொல்லாமை விரதமுதல் சொல்லப்பட்ட இல்லற, துறவற நெறிமுறைகள் அனைத்தையும் மக்கள் பின்பற்றி வாழவும், தருமம் சிறப்படையவும், தவமுனிவர்கள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்யவும், நீதிதவறாது மன்னன் ஆட்சி செய்யவும், புராணக்கதைகள் விளங்கவும், வராங்கன் கதையை உண்மையுடன் பாட நாமகளும் பூமகளும் நன்மையுடன் காப்பாற்ற வேண்டும் என்று இந்நூலாசிரியர் பாடுகின்றார். இக்காப்புப் பாடல் உணர்த்தும் கருத்தின் மூலம் இந்நூல் சமண சமய அறங்களை மக்களிடம் போதிக்கும் நோக்கத்தில் படைக்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது.

சமண சமயக் கருத்துக்கள்

கதைப்பாடலில் காப்புப் பாடலை அடுத்து மாநகரச் சிறப்பு பேசப்படுகின்றது. இதில் மாநகரத்தின் அழகு, இயற்கை வளங்கள், சோலை, வயல்களின் வளப்பம், நகரின் அழகு முதலானவற்றை கூறிவருகின்ற ஆசிரியர் 'தேரும் திருநாளும் தீர்த்தங்கரர் உற்சவமும்' (40) என்று கூறுகின்றார். இவ்விடத்தில் தீர்த்தங்கரர்களின் வீதியுலாக் காட்சி குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம்.

தொடர்ந்து நாட்டின் மன்னன் தருமசேனன், அரசி குணமதி முதலானோர் கூறப்பட்டு, வராங்கன் பிறப்பு, வளர்ப்பு, பருவம் முதலான செய்திகள் இடம் பெறும் இடத்தில் 'சம்யக்த் தரிசனமும் தாஷ்டீக முண்டாகி' (85) என்று கூறுகின்றார்.

வடமொழியில் சம்யக்த் தரிசனம் என்பது தமிழில் நற்காட்சி என்று சொல்லப்படுகிறது. இது சீவன், அசீவன், ஊற்று, கட்டு, செறிப்பு, உதிர்ப்பு, வீடு என்பனவாம். இது சமண சமயத் தத்துவமாகும். இவற்றை வராங்கன் பிழையற உணர்ந்து வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் வராங்கனின் சிற்றன்னை, சுசேணன், மந்திரி மூவரும் வராங்கனைக் கொல்லச் சதி செய்கின்றார்கள். இதனால் வராங்கன் மூன்று வகையான

துன்பங்களை அடைகின்றான். ஒன்று குதிரையுடன் கிணற்றில் விழுதல், புலியிடம் இருந்து தப்பித்தல், முதலையிடம் அகப்படுதல் என்பனவாம்.

முதலாவதாக ஒரு குதிரையின் மூலம் ஒரு பெரிய கிணற்றில் வீழ்ந்து மீண்டு வருகிறான்.

இதுபற்றிக் கூறும் ஆசிரியர்,

''புண்ணிய பாவமெல்லாம் பொருந்தி அனுபவிக்கும்
தன்னாலே யெண்ணித் தானே மனந்தெளிந்து''

(அடி எண். 324-325)

என்ற பகுதியில் சமண சமயக் கொள்கையின் ஒன்றாகிய புண்ணியபாவம் கூறப்படுகிறது. வராங்கன் புண்ணியம் செய்த அளவிற்குப் பாவமும் செய்திருக் கின்றான். அந்த பாவத்தின் கழுவாய்தான் தான் படும் துன்பம் என்று நினைந்து வருந்துகின்றான். எனவே, பாவம் செய்யக்கூடாது என்பது இங்கு உணர்த்தப் படுகின்றது.

கிணற்றிலிருந்து மீண்டுவரும் வராங்கனை புலி ஒன்று பின் தொடர்ந்து வருகின்றது. இதனால், அருகில் இருந்த மரத்தில் ஏறித் தப்பிக்கின்றான். இரவு வருகிறது. புலியும் போகவில்லை, வராங்கனின் மனம் மிகவும் துன்பமடைகின்றது.

''சுகதுக்கம் இரண்டுக்கும் சொல்லரிய சீவனுக்கு
சீவ னொருவனுக்கு சினரையும் தியானித்தான்''

(அடி எண். 342-343)

இந்நிலையில் அருகதேவரை நினைக்கின்றான். பின்பு அத்துன்ப நிலையி லிருந்து விடுபடுகின்றான். எனவே, துன்பம் வரும்போது அருகதேவரை நினைத் தால் துன்பம் தானே விலகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட இப்பகுதியை அமைத் திருக்கலாம்.

புலியிடம் மீண்ட வராங்கன் சோர்ந்த நிலையில் காட்டு வழியே செல்லும் போது, ஒரு பொய்கையைப் பார்க்கிறான். அப்பொய்கையில் இறங்கி அருகரை நினைத்து வேத மந்திரங்களால் வழிபாடு செய்கிறான். பின்பு அப்பொய்கையில் இருக்கும் தாமரை இலையில் இருக்கும் நீரை வடித்துக் குடிக்கும்போது,

''பெரியதொரு முதலை பேர்பெரிய பொய்கையிலே
வராங்கனைக் கண்டு மனமகிழ்ந்து பார்த்தது
இரையகப் பட்டதென்று யிளைப்பாக ஓடிவந்து
காலைப் பிடித்தது கனத்த தொருமுதலை''

(அடி எண். 395-399)

திரும்பவும் துன்பநிலை அடைந்த வராங்கன் மீண்டும் அருகதேவரை நினைக் கின்றான்.

''அருகர் துணையில்லாமல் வேறொருவ ரில்லையென்று
அரணாவ தெல்லாம்வர நேமிநாதர் பாதம்
சரணார விந்தம் சுவாமி துணையென்று''

(அடி எண். 404-406)

அருகரையும், நேமிநாதரையும் வணங்குகின்றான். பின்பு தருமதேவதை முதலை யிடமிருந்து வராங்கனைக் காப்பாற்றுகின்றாள்.

இப்பகுதியில் சமண சமயத் தீர்த்தங்கரராகிய அருகதேவர், நேமிநாதர், முதலானோர் பேசப்படுகின்றார்கள்.

பின்பு வராங்கன் பாதை நோக்கி வரும்போது மாற்றானின் மனைவியான ஒரு அழகான பெண், முறையான காரணம் கூறி வராங்கனை மணந்து கொள்ளு மாறு வேண்டுகின்றாள். அதற்கு வராங்கன் உன்னைத் தொட்டால்

''சம்மிய தரிசனமும் சாதியுள்ள தன்குலமும்
நாலு கதியும் நல்ல சரித்திரமும்
எல்லாம் கெடுமென்று....''

(அடி எண். 478-480)

கூறி தன்னை விட்டுவிடுமாறு கடிந்து கூறுகின்றான். பின்பு அப்பெண், ''நான் மானிடப் பெண் அல்ல, தேவதை, உன் மனதைச் சோதிக்கவே வந்தேன்'', என்று கூறி மறைந்து விடுகின்றாள்.

இப்பகுதி சமண சமயத்தின் இல்லற நெறிகளில் ஒன்றாகிய பிறன்மனை விரும்பாமையை மக்களிடம் உணர்த்துவதற்காகவே அமைக்கப்பட்டிருப்பதை அறியலாம்.

வராங்கன் வேடர்களைப் பார்க்கின்றான். அவர்களை நோக்கிச் செல்லும் போது, அவர்களால் சிறைபிடிக்கப்படுகின்றான். அந்நிலையில் வேடர் மகனை பாம்பு கடித்துவிடுகிறது. வராங்கன் அவனைக் காப்பாற்றுகின்றான். இதனால், குடம்பொன் வராங்கனுக்குக் கொடுப்பதாக வேடர் தலைவன் கூறுகின்றான்.

''குடம்பொன் கொடுப்பதென்று கூறுவான் வேட்டரசன்
வராங்க மகாராசன் வேண்டா மதுவென்றான்''

(அடி எண். 567-568)

தனக்குப் பொன் தேவையில்லை, வழித் துணைக்கு ஆள் மட்டும் கொடுத்தால் போதும் என்கிறான் வராங்கன். இப்பகுதியில் சமண சமயத்தின் அணு விரதங் களில் ஒன்றாகிய மிகுபொருள் விரும்பாமை சொல்லப்படுகிறது.

அவரவர் செய்த புண்ணியம் (நல்வினை) அவரவரையே சார்ந்து நிற்கும் என்பது சமண சமயத் தத்துவங்களில் ஒன்று. இங்கு வராங்கன் பல துன்பங் களிலிருந்து மீண்டு, தன் அரண்மனையை அடைந்து, அங்குள்ளவர்களிடம் தன் துன்ப வரலாற்றைக் கூறுகின்றான். அப்போது தருமசேனன்,

'நடுக்கடலில் வீழ்ந்து நீர்ச்சர்ப்பம் தான்கடித்தால்
பட்ட சிறுமையைப் பட்டு விலகுவதும்
வெகுசாய் மரணங்கள் வேதனிய கருமங்கள்
வந்துதித் ததுபோல் மனக்கவலை வந்தாலும்
முன்செய்த புண்ணியத்தால் இப்போ நமக்குதவி
பிழைத்து வருவார்கள் பிராணன் நினைவில்லாமல்
பாப முதயமானால் பருக்கரசை செய்தாலும்
பிழைக்கவே வாராது பெரும்பாவம் செய்தோர்க்கு
....
....
நீர்முன் செய்தபுண்ணியம் முன்வந்து தான்நிற்கும்''

(அடி எண். 925-935)

என்று கூறுகின்றார். இங்கு, வாழுகின்ற காலத்தில் வராங்கன் பலருக்கும் பல நன்மைகளைச் செய்திருக்கின்றான் என்பதும் அந்த வகையிலுள்ள புண்ணியம் தான் இப்போது அவனைக் காப்பாற்றியிருக்கின்றது என்பதையும் அறிகின்றோம். இதனால், மக்கள் வாழுகின்ற காலத்தில் நல்லவையே செய்ய வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

இவ்வாறாக சமண சமயத்தின் தத்துவங்களையும் இல்லற நெறிமுறைகளையும் கடைபிடித்து வரும் வராங்கன் வணிகர்களின் பொருளைக் கவர்ந்து செல்லும் கொடிய வேடர்களின் மேல் போர்புரிகின்றான். தேவசேனனுக்கு ஆதரவாக லலிதபுர நாட்டின் மேல் போர் தொடுக்கும் மன்னனை எதிர்த்து போர் புரிகின் றான். தந்தையின் ஆணையை ஏற்றுத் தன் நாட்டின் மேல் போர் தொடுக்கும் மாற்று அரசன் மேல் போர் தொடுக்கின்றான். இம்மூன்று போர்களிலும் பலர் கொல்லப்படுகின்றனர். இச்செயல் கொல்லாமைக்கு முரண்பாடாக அமையினும் அரசர் குலத்தைச் சேர்ந்தவர்கள் தவிர்க்க முடியாத நிலையில் போர் செய்வது உண்டு என்பதால் கொள்கை அடிப்படையில் பெரிதான மாறுதல் இல்லை என்று கொள்ளலாம்.

கதைமுடிவு

கதைப்பாடல்கள் பலவித நோக்கங்களைக் கொண்டு எழுதப்படுகின்றன. கதையின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் முடிவுகள் அமையவேண்டும். அம்முறையில் வராங்கனும் முன்செய்த கருமங்கள், தனக்கு வந்த துன்பங்களை நினைத்து, கடுமையான துறவு வாழ்க்கை மேற்கொண்டு, வீடுபேறடைவதாக கதை முடிகிறது. இப்பகுதியில் துறவு வாழ்க்கை மேற்கொள்வோர் கடைபிடிக்க வேண் டிய விதிமுறைகள் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன.

திகம்பர சமணநூல்

வராங்கன் கதை திகம்பர சமணத்தைச் சார்ந்த நூல் என்பதை நிறுவுவதற்கான சான்றுகள்:

திகம்பர சமணத்தில் பிளவு ஏற்பட்டது பத்திரபாகு காலமாகிய கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்று சொல்லப்படுகிறது. வராங்கன் வாழ்ந்த காலம் கி.மு. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்பாகிய நேமிநாதர் காலம். எனவே, அக்காலத்தில் பிளவு இல்லாத திகம்பர சமணம் மட்டுமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வராங்கன் கதையை வடமொழியில் எழுதியவர் ஜடாசிம்ம நந்தியாவார். இவர் வடக்கிருந்து உயிர்நீத்ததாகக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. சமணர்களில் திகம்பரர்கள் மட்டுமே வடக்கிருத்தலை மேற்கொள்வதால் இந்நூல் திகம்பர சமணத்தைச் சார்ந்தது என்று கூறலாம்.

தீர்த்தங்கரர்கள் வகுத்துத்தந்த தத்துவங்களையும் நெறிமுறைகளையும் திகம்பரர்கள் முறையாகப் பின்பற்றி வருகின்றார்கள். வராங்கன் கதையில் இடம் பெறும் தத்துவங்கள் நெறிமுறைகள் இவர்கள் பின்பற்றி வருபவையே.

வடமொழி நூலான வராங்கன் கதையைத் திகம்பர சமணத்தைச் சேர்ந்த வி. என். பொன்னுசாமி ஜைன் என்பவர் தமிழில் மொழிமாற்றம் செய்து 'அருகன் தத்துவம்' என்ற மாத இதழில் 1993 டிசம்பரிலிருந்து வெளியிட்டு வருகின்றார். இதனை வெளியிடும் குந்தகுந்தர் தத்துவப் பரப்புமையம் திகம்பர சமணத்தைச் சேர்ந்தது என்பது அறியத்தக்கதாகும்.

திகம்பர சமணத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை நயினார் என்றும் கூறிக் கொள்கின்றனர். வராங்கன் கதையை படியெடுத்தவர்களாகிய கடலூர் விஜய நயினார் குமாரன் அம்மையப்பனும், எறமலூர் கிராமத்தைச் சேர்ந்த ஆதிநாத நயினார் குமாரன் விருசபதாசனும், இச்சுவடியை ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்குக் கொடுத்த பிருதூர் யசோபத்திர நயினாரும் திகம்பர சமணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆக, மேற்கண்ட சான்றுகளை எல்லாம் நேர்க்கும்போது, வராங்கன் கதை திகம்பர சமணத்தைச் சேர்ந்தது என்று உறுதியாகக் கூறலாம்.

THE STORY OF VARĀṄKAṈ — A CRITIQUE

Before undertaking a study of 'The story of Varāṅkaṉ', a Tamil ballad from palm-leaf manuscripts, it is necessary to trace and analyse its original source i.e. *Varāṅkaṉ Carittiram* a mythological epic.

Original or source work

Varāṅkaṉ Carittiram is a Jain mythological epic written in Sanskrit by Jaṭācimmananti Ācāriyār.

Varāṅkaṉ was a contemporary of Nēminātar, the twentysecond Tīrttaṅkarar. Varāṅkaṉ, the son of king Tarumacēṉaṉ's first wife is noble, handsome and heroic and hence eligible to succeed his father to the throne. His stepmother and her son hatch a conspiracy to kill him. Varāṅkaṉ is subjected to many trials and tribulations but his valour and devotion to the Jaina God Arukatēvar stand him in good stead. He is always saved in time by his God and Yaṭciṉi. He lives incognito under an assumed name Kascitpaṭaṉ. After overcoming all his enemies and adverse circumstances, he reaches his native land and rules over his kingdom happily. He even forgives his enemies. Ruling thus for a very long period, he sees the fall of a star, realises the transitory nature of worldly power and human body. He crowns his son Cukātraṉ, renounces his householder's life, performs rigorous penance, conquers Karmic bonds and attains *Vīṭu peṟu* or eternal bliss.

The message of the epic

Those who follow Jaina religion should adopt the five aṇuviratam, i.e., not killing a living being, not uttering falsehood, not stealing not desiring the wives of others, and not desiring excessive wealth. They should also restrain the five senses and get rid of the ten external bonds, fourteen internal bonds and six occupations. Only such a total renunciation will lead one to *Vīṭu pēṟu* or eternal bliss. This is the message of the epic *Varāṅkaṉ Carittiram.*

The chronological period of the epic's composition

The Kannada poets of the 10th century, Cāmuṇṭarāyaṉ, Pampakavi and Tavaḷakavi have praised the author of the epic *Varāṅkaṉ Carittiram*. According to them, this epic should have been composed towards the end of the 7th century A.D. In the state of Nizam, on a mountain near the place called Koppavil, the footsteps of the author of this epic are found to be engraved. There is also a Kannada inscription stating that Cāvyaṉ has engraved the footsteps of Jaṭācimmananti Ācāriyār. All these details prove that the author was a native of the Kannada country.

An account of the entry of Varāṅkaṉ's story into Tamil Nadu

In those days the Jaina saints propagated Jainism all over India, covering the country's various parts by walk. These peripatetic philosophers availed themselves of the accounts of the noble lives of Tīrttaṅkarars and the heroic exploits of the great kings who were contemporaries of Tīrttaṅkarars, to cite as examples of Jaina codes of conduct. Such didactic stories stressed the tenets of Jainism. The story of Varāṅkaṉ, supposed to be a contemporary of Nēminātar, served the purpose of preaching Jaina principles of life and conduct. On account of the proximity of Tamil Nadu to Kannada country, the story which originated in the latter region would have reached Tamil Nadu. The story read orally over a long period of time, came to be written in palm-leaves for preservation and propagation by reading.

The palm-leaf manuscripts of the story of Varāṅkaṉ

The palm-leaf manuscripts of *Varāṅkaṉ Katai* are found in two places, Government Oriental Manuscripts Library, Madras and Institute of Asian Studies, Madras.

In the Government Oriental Manuscripts Library, the available palm-leaf manuscript is numbered R-330. In the last leaf of the manuscript it is mentioned, that in the Tamil year (*Pārtipa* (1917 A.D.) in the month of *Kārtikai* on the 10th day *Cōmavāram* (Monday) *Rōkiṇi Naṭcatiram* (star) *Tivviya titi* and *Virucapa lakṉa*, Ammaiappaṉ, the son of Vijaya Nayiṉār of Kaṭalūr, wrote and completed this manuscript. A copy of this manuscript was taken in the year 1943.

In the palm-leaf manuscript available in the Institute of Asian Studies, Madras, on the first leaf, it is written as follows:

Anyone who takes this story of Varāṅka Mahārācaṉ being perused by Virucapatācaṉ, son of Ātināta Nayiṉār of Yeramalūr village, Vantavāci taluk, should return it after reading.'

On the last leaf of this manuscript it is mentioned that the writing of the manuscript was completed in the Tamil year *Piramōtūta* (1930 A.D.), in the month of *Tai* on the 21st day.

Both the manuscripts however seem to be only copies. The period and author of the original are not known.

The attributes of the story

This ballad is characterised by musical diction, proper phraseology and a fine story content. It makes attractive reading.

The description of the lush vegetation and fertility of the fields (11.16-28) in the ballad is an illustration of the musical diction and ancient words employed by the author:

Astounding incidents such as the terrific speeding of the horse carrying Varāṅkaṉ away from others, are described effectively in the ballad (ll.275-278). It is stated that Varāṅkaṉ's horse sped away in a skyward flight.

Shocking incidents are also mentioned in the poem. Varāṅkaṉ being chased by a tiger and his escape by climbing a tree are picturesquely depicted as follows:

vēṅkaip puliyoṉṟu miṉṭum toṭarntu vara
kaṇṭu varāṅkaṉum kālkaḷnilam pāvāmal
aṅkēyoru viruṭcatil atikamāy ceṉṟi (ll.327-330)

There are tragic incidents too evoking pathos. When the hunters imprison Varāṅkaṉ in a stinking worm-infested cell, the disgusting scene is quite effectively portrayed

elumpukaḷ tūṉniṟuti iraipacumtōl mēlmūṭi
turkantamākap puḻukkaḷ coriyap, perumtukkamāy (ll.531-532)

The battle scenes in the ballad reveal Varāṅkaṉ's valour. In the lines 787-818 of the ballad, we find the characterisation of Varāṅkaṉ as almost a superhuman warrior capable of achieving what is impossible for ordinary mortals. In those lines Varāṅkaṉ leading an army against Intiracēṉaṉ in support of Tēvacēṉaṉ is described with telling effect.

The story of Varāṅkaṉ as a Purāṇic ballad

This ballad is an adaptation of the epic depicting Varāṅkaṉ as a hero of the Purāṇic times.

The story is woven round human beings such as Tarumacēṉaṉ, Cucēṉaṉ and Kuṇamati of the Purāṇic era and goddesses and angels like Tarumatēvatai, Pakavatiammai etc.

There are supernatural events such as the skyward flight of the horse, Varāṅkaṉ's rescue from the crocodile by Tarumatēvatai and testing of Varāṅkaṉ's mettle by the goddess in a human guise.

The moral values and tenets of Jainism are found interspersed throughout the ballad. In the invocation song in the beginning itself, we come across the poetic statement that this ballad is a Purāṇic one; *'Pūmikaḷ tāṉviḷaiya purāṇak kataiviḷaṅka'*.

The Story

Uttamapuram was a prosperous and excellent city in many respects. The king of that city was Tarumacēṉaṉ. He had two spouses. His first wife Kuṇamati had a son by name Varāṅkaṉ. His second wife too had a son whose name was Cucēṉaṉ.

Varāṅkaṉ was handsome and he distinguished himself in heroic exploits and exercises like archery and fencing. On account of this distinction of Varāṅkaṉ, Tarumacēṉaṉ had a special affinity for him. Tarumacēṉaṉ's second wife and her son Cucēṉaṉ, who did not relish the prospect of Varāṅkaṉ's succession to the throne, conspired to kill Varāṅkaṉ with the help of a minister of that kingdom.

According to the advice of the minister, two highbred horses were bought and one of the horses was trained to run very fast and to fall in a daze after a while. After such a training the horse was brought before Varāṅkaṉ, who set out on a horse riding as per the treacherous plan of the minister.

With great fanfare and accompanied by elephants, horses, soldiers and dancing damsels, Varāṅkaṉ mounted on the uncommonly trained horse. The horse sped away at a terrific pace and all others who followed him were left behind. Varāṅkaṉ's horse galloped as if in a skyward flight reached an unfamiliar jungle and fell into a big well along with the rider. The horse died and Varāṅkaṉ climbed up holding a creeper in one of the trees lining the well. As Varāṅkaṉ was walking in search of the proper way back home, a ferocious tiger followed him. On seeing it he climbed up a tree and escaped. The tiger waited till night under the tree for him to come down. Varāṅkaṉ holding fast to the branches of the tree slept and even after day-break he found the tiger still near the tree waiting for him. At that juncture a male elephant passed that way and Varāṅkaṉ resourcefully trumpeted like a female elephant. The male elephant turned in the direction of that alluring sound and became furious on seeing Varāṅkaṉ. The tiger pounced on the elephant but the elephant killed the tiger and left the place.

Varāṅkaṉ thus saved from danger and death got down and as he was walking away saw a big *poykāi* (tank). As he stepped into that tank to wash his hands and feet, a crocodile caught him. The helpless Varāṅkaṉ prayed earnestly to Arukatēvar and Nēminātar to save him from the critical situation. Those gods saved him by releasing him from the jaws of the crocodile.

As Varāṅkaṉ was proceeding further in search of the proper path in the jungle, a beautiful angel appeared before him. She told him that she was the daughter of king Pūmipālakaṉ and she had married a Shatriya. After the wedding, when she was going along with her husband and his retinue, they were waylaid and attacked by a gang of dacoits. She had however escaped but lost her way in the jungle. She requested Varāṅkaṉ to take pity on her and make her his spouse. She pleaded with him that she had no other option except to cling to him. She even threatened to end her life if he refused to accept her.

Varāṅkaṉ, without even looking at her turned down her plea saying that he would lose his reputation and be deprived of his high Jain principles like *Viratam, Aruka-*

taricanam and the four-fold stages of experience, if he acceded to her request. He also advised her not to provoke him and make him kill her. The angel, who was in a human guise till then , appeared in her real shape and told him that she was Tarumatēvatai (the angel of justice) and she had only tested his real mettle and inherent virtue. Then the angel vanished.

Varāṅkaṉ while walking further wondering over the angel's action, met a group of hunters in the forest. They overpowered Varāṅkaṉ and took him to their chief who ordered them to keep him in custody and sacrifice him to propitiate Cātaṉapiṭāri, their goddess. While in custody in a worm-infested cell covered with cowhide Varāṅkaṉ reflected over his plight and prayed to Aṟukatēvar. At that juncture the son of the hunters' chief was bitten by a snake. He collapsed and was carried by wailing hunters before their chief. The chief lamenting over his son's condition wanted to know who could rid his son of poison and save him. As Varāṅkaṉ offered to cure the son of the chief, he was released from custody. Varāṅkaṉ then chanted certain incantations and saved the victim of poison from death. The happy chief offered a pot of gold as reward to Varāṅkaṉ, but the latter declined the gold and wanted only a hunter to accompany and guide him to his native country. The guide left after showing the proper path when Varāṅkaṉ happened to meet a group of traders.

The traders mistook Varāṅkaṉ for a thief and took him to their chief. The traders' chief on seeing Varāṅkaṉ's dignified deportment and good looks realised his royal identity and lineage. Varāṅkaṉ also narrated his identity, strange experiences and his sad plight to the chief. At that time a gang of hunters surrounded the traders and robbed them of their belongings. Varāṅkaṉ bravely came to the rescue of the battered traders by launching a vigorous attack on the hunters and trouncing them totally. The traders thus rescued were so happy and grateful, that they felicitated Varāṅkaṉ and conferred on him the title of 'Ceṭṭi'. They also arranged for sending Varāṅkaṉ to his native country.

Meanwhile at Uttamapuram, Tarumacēṉaṉ was grieved over his missing son Varāṅkaṉ. He sent his retinue and soliders to trace the whereabouts of his son. The soldiers who scoured the jungle along the course taken by Varāṅkaṉ's horse found the jewels and ornaments of Varāṅkaṉ lying scattered. Following that direction they reached the big well and saw the horse lying dead there. They returned and reported to Tarumacēṉaṉ what they had found. Tarumacēṉaṉ, Varāṅkaṉ's spouses and the people of the city thought that Varāṅkaṉ also was dead. With great grief they approached their mentor Vartamāmuṉi and apprised him of their supposed bereavement. But the mentor consoled them saying that Varāṅkaṉ was quite alive and well and he would return to them. Somewhat relieved of their sorrow at the assurance of the mentor, Tarumacēṉaṉ and the queens observed many and varied vows of abstinence, for Varāṅkaṉ's welfare.

On his way home Varāṅkaṉ reached Lalitapuram, ruled by Tēvacēṉaṉ. The arrival of Varāṅkaṉ coincided with the arrival of messengers bringing ill tidings of the invasion of Intiracēṉaṉ on Lalitapuram. Tēvacēṉaṉ regretted his inability to counter the attack of Intiracēṉaṉ, and announced a reward of half of his kingdom and also the hand of his daughter in marriage to whosoever could fight against Intiracēṉaṉ and defeat him. Varāṅkaṉ mobilished an army in support of Tēvacēṉaṉ and defeated Intiracēṉaṉ in a battle.

Tēvacēṉaṉ happily relieved of the menace of his enemy felicitated Varāṅkaṉ and honoured him. At that time messengers from his brother-in-law, Tarumacēṉaṉ arrived there and informed Tēvacēṉaṉ that the country of Tarumacēṉaṉ had been surrounded by hostile kings and their forces in the absence of Varāṅkaṉ. They also said that Tarumacēṉaṉ already aggrieved over the missing of Varāṅkaṉ could not muster courage or strength to tackle the invaders. Hence he had sought the support of Tēvacēṉaṉ.

On hearing that message Varāṅkaṉ, who was there felt quite sad. Tēvacēṉaṉ then came to know of the identity of Varāṅkaṉ as the son of Tarumacēṉaṉ and his own nephew as well. The gladdened king Tēvacēnan immediately arranged for the wedding of all his two hundred daughters to Varāṅkaṉ. After the marriage Varāṅkaṉ was sent to Uttamapuram with an army to support him.

Varāṅkaṉ's arrival was reported to Tarumacēṉaṉ who received him with rejoice. Varāṅkaṉ narrated all his trials and tribulations to his father, the queens and all others assembled to greet him. Tarumacēṉaṉ attributed Varāṅkaṉ's safe return to the impact of the good deeds of their forefathers and then apprised Varāṅkaṉ of the foes surrounding their country. Varāṅkaṉ gathered an army under his leadership, gallantly fought against the enemy forces and inflicted a crushing defeat on them. Tarumacēṉaṉ summoning the elders and important citizens of his country arranged for the coronation of Varāṅkaṉ and retired for solitary penance. He ultimately attained *mukti* or the state of eternal bliss.

Varāṅkaṉ who became the king did not entertain any malice towards his treacherous step-brother Cucēṉaṉ. Nor did he seek any revenge. On the contrary he magnanimously offered a part of his kingdom to Cucēṉaṉ. Varāṅkaṉ ruled over the rest of the kingdom benevolently and after quite a long period handed over his kingdom to his son. He remained then in a state of renunciation and retirement reflecting over his past experiences of harrowing bitterness. He also observed single-minded concentration and performed very severe penance. He attained the supreme state free from sleep, old age, greying and disease. Ultimately he attained the exalted state of a mentor or Guru.

The structure of the ballad

This ballad of the story of Varāṅkaṉ has a few characteristics of an epic. This is perhaps on account of its adaptation from the original epic. The components of an epic

such as invocation, prayer to God, *nutalippukutal*, the tempo of the story, and the benedictory epilogue, are found. The invocation (*ll.* 1-8) is of course in the form of the usual poetic convention of praying for three spells of rain every month, country's prosperity, the continuity of the royal dynasty, etc. But the prayer extends itself specifically for the spread of Jainism and the faithful observance of Jaina vows like avoidance of slaughter. Hence in the beginning itself the Jaina message intended to be conveyed to the readers through this ballad is made clear.

The concepts of Jainism

The glory of the city is described following the invocation. Here also the line, *'Tērum tirunāḷum Tīrttaṅkarar Uṟcavamum'* refers to the procession of the idols of the Tīrttaṅkarars taken out in the streets during festivals.

The reference to *Camyakt taricaṉam* in the ballad while describing the birth and royal upbringing of Varāṅkaṉ, is a pointer to the Jaina orientation of the hero and his family. *Camyakt taricaṉam* a Sanskrit term which means *Naṟkāṭci* in Tamil is a religious concept of Jainism. It contains the seven principles of *Cīvaṉ, Acīvaṉ, Ūṟṟu, Kaṭṭu, Ceṟippu, Utirppu* and *Vīṭu*. Varāṅkaṉ is portrayed in the ballad as flawlessly conversant with these principles. He has adopted them all in his life.

Varāṅkaṉ falls into a well along with his horse, on account of the conspiracy of his stepmother and her son Cucēṉaṉ. He however escapes by climbing up and consoles himself by contemplating upon the *puṇṇiyam* and *pāvām* theory of Jainism,

'puṇṇiya pāvamellām porunti aṉupavikkum
taṉṉālē eṇṇit tāṉē maṉamteḷintu' (11-324-325)

Jainism stresses this impact of one's own good or bad deeds committed early in life or in earlier births. Thereby sinning is proscribed in Jainism.

Again when Varāṅkaṉ stays atop a tree for fear of the lurking tiger right under him, he reflects over his joy and sorrow and earnestly prays to the Jaina God Arukatēvar.

'cukaṭukkam iraṇṭukkum collariya cīvaṉukku
cīvaṉ oruvaṉuku Jiṉaraiyum tiyāṉitāṉ'. (11.324-325)

Perhaps these lines emphasize the efficacy of prayer to the Jaina God in alleviating sorrow and danger.

Tragedy strikes Varāṅkaṉ yet again in the form of a crocodile gripping his legs in a *poykai* (tank). There also the hero turns to Arukatēvar for help. He prays to Nēmiṉātar as well.

'arukartuṇai illāmal vēṟoruva rillaieṉṟu
aranāva tellāmvara nēmiṉatar pātam
caraṇāra vintam cuvāmi tūṇaieṉṟu' (11. 404-406)

His prayers are answered as anticipated and he is saved by Tarumatēvatai (Goddess of justice) from the jaws of the crocodile.

Then comes the crucial testing of Varāṅkaṉ's mettle and virtue by Tarumatēvatai. The goddess in disguise as a ravishingly beautiful girl tries to tempt and lure him towards her in wedlock. Varāṅkaṉ stoutly refuses stating:

'cammiya taricaṉāmum cātiyuḷḷa taṉkulamum
nālu katiyum, nalla caritiramum
allām keṭumeṉṟu....' (11. 478-480)

Cammiya taricaṉam and *Nālukati* are Jaina terms indicating the seven principles mentioned early in this article and the four stages of birth prescribed and ordained in Jainism.

These lines also stress the moral code of *Piraṉmaṉai Virumpāmai* (not desiring others' wives) which is a Jaina prescription for virtuous conduct in *Illaṟam* (householder's life)

Another Jaina virtue pointed out in this ballad is avoidance of greed or desire for excessive wealth. The hunters' chief offers Varāṅkaṉ a pot of gold in appreciation of the latter's miraculous restoration of his son from the danger of death by snake-bite. Varāṅkaṉ declines the offer of gold.

'kuṭampoṉ koṭuppateṉṟu kūṟuvāṉ vēṭṭaracaṉ,
varāṅka makarācaṉ vēṇṭā matuveṉṟāṉ' (11. 567-568)

This refusal to accept gold proves his strict adherence to the Jaina tenet of *mikuporuḷ virumpāmai* (not desiring excessive wealth).

One of the concepts of Jainism is that the *puṇṇiyam* or *nalviṉai* (good deeds) of a person has a specific bearing on his life. When Varāṅkaṉ finally reaches his native country after many trials and tribulations, he narrates his woes and bitter experience to his father Ṭarumacēṉaṉ, who philosophically sermonizes as follows: (lines 925 to 935 in the Tamil original.

Even if a person is bitten by a snake after falling in the midsea, his misery and danger will be dispelled.

If there is anxiety over the grim prospect of death and other sorrowful situations, people will survive on account of their earlier good deeds *(Puṇṇiyam)*.

On the other hand, those guilty of grave sins cannot survive despite all efforts.

On all occasions your *puṇṇiyam* (good deeds) will precede you.

We come to know from the above utterances of Tarumacēṉaṉ, that Varāṅkaṉ's good deeds and help rendered to many people, have stood him in good stead and the *puṇṇiyam* incurred by his altruistic and beneficial service to others have saved him from danger and death. It is thereby stressed in this story, that we should perform only good deeds when we are alive. Varāṅkaṉ, who adopts the Jaina tenets of an ideal householder, has however to engage himself in three battles in support of his relations like Tēvacēṉaṉ and well-wishers (the traders). He also has to defend his native country against the enemy kings, who have invaded it in his absence. On such occasions, he is described as fiercely killing many people. This act of Varāṅkaṉ runs contrary to the Jaina tenet of *Kollā viratam̐* (not killing any living being). The course of the story dictates such an action. As Varāṅkaṉ is a king, he has to discharge certain royal responsibilities such as participating in battles. Hence it is not a serious breach of Jaina principles on the part of Varāṅkaṉ.

The conclusion of a story has to be in accordance with the main purpose or objective of the ballad. In the end Varāṅkaṉ makes amends for all the breaches and lapses in his conduct by undergoing a rigorous penance and ultimately attains *Vīṭu pēṟu* (eternal bliss). In this section of the ballad, the rules to be observed by Jaina ascetics are laid down briefly.

The story of Varāṅkaṉ is a work, which belongs to the Tikampara sect of Jainism. That inference is supported by the following evidence.

Tikampara Camaṇam suffered a rift during the period of Pattirapāku of the 3rd century B.C. But Varāṅkaṉ lived in the 10th century B.C. as a contemporary to Nēmiṉātar. At that time there was no rift in Tikampara Jainism and therefore the story of Varāṅkaṉ is a Tikampara work.

The author of the Sanskrit original Varāṅkaṉ Caritam, Jaṭācimmananti Ācāriyār is said to have died of *Vaṭakkiruttal* (fasting in a northward-facing posture). Among Jainas only Tikamparas follow this method of personal sacrifice.

Tikamparas very rigorously adhere to the tenets and guidelines framed by the Tīrttaṅkarars (The Jain apostles). In the story of Varāṅkaṉ such tenets and concepts are found mentioned.

The translation of the Sanskrit original of the story of Varāṅkaṉ has been done by one V. N. Poṉṉucāmi Jain, who belongs to Tikampara Jainism. This serial translation, has been appearing in a monthly magazine called *Arukaṉ Tattuvam* from December

1993. The publishing organisation of this magazine is 'Kunta Kuntar Tattuvap Parappu Maiyam', which is a centre devoted to the propagation of Tikampara Jainism.

Those who belong to Tikampara Jainism call themselves Nayiṉārs. Those who copied the story of Varāṅkaṉ from the palm-leaf manuscripts were Ammaiyappaṉ son of Vijaya Nayiṉār of Kaṭalūr and Virucapatācaṉ son of Ātināta Nayiṉār of Eramalūr village. The person who gave a copy to the Institute of Asian Studies, Madras was Yacōpattira Nayiṉār of Pirutūr. It is to be noted that all these persons belonged to the Tikampara sect of Jainism.

We have to come to the conclusion that the story of Varāṅkaṉ is a work of Tikampara Jainism.

வராங்கன் கதை

கடவுள் வாழ்த்து

திங்கள்மும் மாரிபெய்ய தேசம் [1]செழித்தோங்க
எங்கும் ஜினதர்மம் யியலுடனே தான்விளங்க
கொல்லா விரதமுதல் கோமான் நிறம்விளங்க
தர்மம் தழைத்தோங்க தவமுனிவர் தான்விளங்க
செங்கோ லரசு செழித்து மிகவாழ

பூமிகள் தான்விளைய புராணக் கதைவிளங்க
வராங்கன் கதையை வண்மையுடன் நான்பாட
நாமகளும் பூமகளும் நன்மையுடன் காப்ப

மாநகரச் சிறப்பு

நாவலந் தீவினுள் நற்பரதக் கண்டத்துள்
தர்ம கண்டத்துள் தழைக்கும் மகாபுரமாம்

அமரர்கள் கொண்டாடும் அதிசய மாநகரம்
உத்தம புரமென்று உயர்நகரம் தன்வளமை
மெத்த மகிழ்ச்சியுடன் விளங்கிய நன்னகரம்
[2]அமரா பதியொக்கும் அதிசய மாநகரம்
எண்டிசையி லில்லாத யியலான மாநகரம்

திங்கள் மும்மாரிப் பெய்ய — மாதத்திற்கு மூன்று மழை பெய்ய. தேசம் செழித்தோங்க — நாடு நல்ல வளமுடன் தட்டுப்பாடு இல்லாத நிலையில் அமைய, ஜினதர்மம் — சமண சமய அறங்கள், கொல்லா விரதம் — இயங்குந் தன்மை வாய்ந்த எவ்வுயிரையுங் கொல்லா தொழிதலும், பிறரை ஏவி அவ்வுயிர்களைக் கொல்லுமாறு செய்யாதிருத்தலும். ஆம். கோமான் — அரசன், மன்னன். நிறம் — குலம். தர்மம் — தான முதலிய அறம். தவமுனிவர் — பற்றை நீக்கிக் காயக்கிலேசஞ் செய்துகொண்டு கட்வுளை வழிபடும் முனிவர். செங்கோலரசு — அரசாட்சி சின்னமாகிய நேர்கோல் தவறாத அரசு. பூமிகள் — பூஉலகு, உலகம். புராணக்கதை — பழமையான கதை. வண்மை — ஈகை; வாய்மை; வளப்பம்; வலிமை. நாமகள் — (பிரம்மாவின் நாவில் வசிப்பவள்) சரசுவதி. பூமகள் — இலக்குமி; பூதேவி. நாவலந்தீவு — எழுதீவுகளுள் உப்புக்கடல் சூழ்ந்த தீவு. பரதகண்டம் — விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பிரதேசம், இந்திய நாடு. தரும கண்டம் — நற்செயல் புரிகின்ற நாடு. அமரர் — வானோர்; தேவலோகத்தார். அதிசயன் — அருகன். உத்தம்புரம் — பல்வகை வளங்களும் பெற்ற நாடு. அமராபதி — இந்திரன் நகர். எண்டிசை — எட்டுத் திக்கு.

DESTINY AND DIVINITY

THE STORY OF VARĀṄKAṈ

Prayer – Invocation to goddesses of Learning and Earth

To rain thrice every month and the country to prosper,
The tenets of Jainism to prevail everywhere in tact,
To avoid slaughter of living beings and the dynasty of the king to perpetuate,
Charity to flourish, and saints to thrive,
The just and benevolent kingdom to prosper as symbolized by an upright sceptre,

The fields to yield plenty and the good old legends to spread,
And to narrate the story of Varāṅkaṉ with eloquence by me,
May goddess Nāmakaḷ (Sarasvati) and goddess Pūmakaḷ
(Pūmātēvi) be pleased to provide and protect.

The glory of the city

In the island of Nāvalam[1] in Paratakaṇṭam[2] there was,
A city that prospered in a benevolent country,
A wondrous city hailed by heavenly folk,
Called Uttamapuram rightly indeed,
A good city in its prosperity and prevalent happiness,

An amazing city that resembled Amarāpati[3] the city divine,
With no other city to match it on earth in all the eight directions.

---

1. Nāvalam – One of the seven isles surrounded by saline seas. 2. Paratakaṇṭam – The Indian sub-continent south of the Vindhya range of mountains. 3. Amarāpati – The city of Intiran, the chief of Tēvars.

சோலை வயல்களின் சிறப்பு

வாவிகளும் கூபம் வகையான தடாகங்கள்
சோலை கமுகுகளும் சூழுமந்த வாவிகளும்
சம்பூநாவல் வெண்ணாவல் சாதிநெல்லி மாவுகளும்
தாமமத்த கிச்சிலியும் சாதியுள்ள தண்துளஞ்சி
எலும்பிச்சை நார்த்தையுடன் மிசைந்தகுடை மாதுளையும்

மல்லிகை முல்லைமலர் மந்தாரைச் செங்கழுநீர்
செங்கழுநீர்ப் பூவுடனே [3]செழித்ததொரு செண்பகமும்
நாகமல்லி ஊசிமல்லி நலமான செண்டுமல்லி
நந்தியாவட்டம் கொன்றை நலமான பாதிரியும்
மருவும் மரிக்கொழுந்தும் மலர்ந்த[4]செந் தாழைகளும்

தேமாவும் கோங்கும் செழித்தபலா பூங்காவில்
பூங்காவி லன்னம் புறாக்கள்[5]குயில் ஓசைகளும்
செந்நெல் [6]பழுத்து செழிக்கும் வயலுகளும்

நகரின் அழகு

வீதி யழகும் வீறான நன்னகரம்
சுற்றுமதில் கோட்டைகளும் சூழும் [7]அகழிகளும்

மச்சுகள் வீடும் மாளிகைபோல் மேல்வீடும்
சுற்று நகரழகும் சூழ்ந்திருக்கும் மாளிகையும்
தேரும் தெருவழகும் செழித்திருக்கும் நன்னகரில்
திண்ணை யலங்கரித்துத் தெருவெங்கும் கோலமிட்டு
பூமாலை பொன்மாலை புண்டரீக மாமாலை

மல்லிகை மாலை மந்தாரைச் செண்டுகளும்
முத்து மணிமாலை முல்லைசிறு செந்தாழை
சிறுசெண் பகமாலை சேர அலங்கரித்து
[8]கட்டி யலங்கரித்துக் காட்சியுடன் சீராக

வாவிகள் — நீர்நிலைகள். கூபம் — கிணறு. தடாகம் — குளம். கமுகு — பாக்குமரம். சம்பூ நாவல் — மலைகளில் வளரும் நாவல் மரம். வெண்ணாவல் — நாவல் மரங்களில் ஒருவகை. சாதிநெல்லி — நெல்லிக்காய் மரங்களில் ஒருவகை. கிச்சிலி — கொழிஞ்சி மரம். துளஞ்சி — கொழிஞ்சி மரம். மந்தாரை — ஒரு பூவகை. செங்கழுநீர்ப்பூ — செந்நிறமான அல்லி வகை. பாதிரி — பொன்நிறமுள்ள பூவுடைய மரவகை. தேமா — இனிப்பான மாமரம். கோங்கு — கோங்கிலவு மரம். அகழி — கோட்டையைச் சுற்றியுள்ள ஆழமான நீர்நிலை. புண்டரீகம் — தாமரைமலர். அலங்கரித்து — அழகு செய்து காட்சியுடன் — கட்புலனாற் காணுமாறு.

The lush vegetation and fertility of fields

Ponds, wells and varied tanks
Kamuku[4] trees in groves, gentle pools,
Campūnāval[5], veṇṇāval[6] and cātinelli[7] trees
Kiccili[8] there was and the koḷuñci[9] tree as well
Lime, citrus besides the big sized pomegranate
Mallikai[10], mullai[11], mantārai[12] and ceṅkaḻunīr[13] flowers
Luxuriant ceṉpakam[14] too there was along with ceṅkaḻunīr,
Nākamalli[15], ūcimalli[16] and the charming ceṉṭumalli[17]
Nantiyāvaṭṭam[18], koṉṟai[19] and gracious pātiri[20] trees
Maru[21], marikoḻuntu[22] and the blossomed screwpine,
Sweet mango, silkcotton and well-grown jackfruit trees,
The sounds caused by swans, doves and cuckoos,
And fertile fields abounding with ripe paddy grains.

The city beautiful

Elegant roads in a vibrant city,
Forts with ramparts and surrounding moats,
Terraced houses and palatial superstructures,
Graceful suburbs dotted by towering palaces,
Chariots in well-laid streets adorning the city,
Pials decorated and streets covered with kōlam.[23]

Garlands galore, flower lace and lotus garlands,
Jasmine garlands and mantārai bouquets,
Pearl necklaces too with mullai and screwpine,
Small cenpakam garlands, all these made and
Arranged properly to decorate the city as a show piece.

---

4. Kamuku – Arecanut tree. 5. Campūnāval – Jaumoon plum tree found in mountains. 6. Veṇṇāval – another variety of jaumoon plum tree. 7. Cātinelli – a kind of gooseberry. 8. Kichili – bitter lime tree. 9. koḷuñci – citrus tree. 10. Mallikai – Jasmine. 11. Mullai – another kind of jasmine. (12. Mantārai. 13. Ceṅkaḻunīr. 14. Ceṉpakam. 15. Nākamalli. 16. Ucimalli and 17. Ceṉṭumalli) – flowering plants and creepers. (18. Nantiyāvaṭṭam, 19. Koṉṟai, 20. Pātiri) flowering trees. (21. Maru and 22. Marikoḻuntu) – fragrant plants. 23. Kōlam – Designs drawn on the floor with white or coloured powder or rice flour.

சேனைப் பரிவாரங்களின் அழகு

தேருந் திருநாளும் [9]தீர்த்தங்கரர் உற்சவமும்

முத்துக் குடையும்மும் மாணிக்கப் பொற்குடையும்
வச்சிரக் குடைகளும் வகைவகையாய் தானெருங்க
[10]பட்டுக் குடைகள்மிகப் பலவகையாய்ச் சூழ்ந்துவர

கோடிக்கொடி முன்னே கொடிச்சீலைகள் தான்நெருங்க
பொன்னால வட்டமுடன் பூண்கவரி தான்வீச

தவளமொடு சங்கு தானே தொனித்துவர
கொடியும் [11]குடையழகும் கொம்பனையா ராடலும்
மேள வகைமுழங்க வெண்முரசு நின்றதிர
பேரிகை தாளமுடன் பெருமுரசு நின்றதிர
பதினெட்டு வாத்தியமும் பலவகையாய்த் தானெருங்க

திக்குள்ளா ரெல்லாரும் தெருவெல்லாஞ் சந்தமிட
ஆனை குதிரைத்தேர் யணியணியாய்த் தானெருங்க
பூமாரி தான்பொழிய புலவர்துதி கொண்டாட
கீதம் முழங்க [12]கழிநரம்பி னோசையெழ
வண்டுகள் கூடி மணமகிழ்ந்து ஒலமிட

அரம்பையர்கள் கூடி நடனமிட்டு நின்றிலங்க
நாடகப் பெண்கள் நலம்பெறவே கைகாடட
மத்தள தாளமுடன் மனமகிழ்ந்து கூத்தாட
இந்த வகையாக யிருக்குமந்த மாநகரம்
எண்டிசையி லில்லாத யிகலான மாநகரம்

மகாராசன் மகாராணி (அரசன்—அரசி)

இந்நகர்க்கு மன்னவனாம் ஏற்ற குலத்தரசன்
தர்மசேன ரென்னும் தழைக்கும் மகாராசன்

தீர்த்தங்கரர்—சைனருள் அருகபதவியடைந்த விருஷபர், அசிதர், சம்பவர், அபிநந்தனர், சுமதி, பத்மபிரபர், சபார்சுவர், சந்திரபிரபர் புஷ்பதந்தர் அல்லது கவிதி, சீதளர், சிரேயாஞ்சர், வாக பூச்சியர், விமலர், அநந்தர், தர்மர், சாந்தி, கிரந்து அல்லது குந்து, அமர், மல்லி, முனிசுவ்விரதர், நமி, நேமி, பார்சுவர், வர்த்தமானர், என்ற இருபத்து நால்வர். பூண்கவரி—பொன்னால் ஆன பூணையுடைய கவரி. தவளம்—வெண்மை. தொனித்தல்—ஒலித்தல், குடை—கவிகை; அரசாட்சி. வெண்முரசு—வெள்ளை நிறமான முரசு. பேரிகை—முரசு. பதினெட்டு வாத்தியமும்—பதினெட்டு வகையான வாத்தியங்களும். சந்தமிட—அழகுசெய்ய. அணியணியாய்—பிரிவுபிரிவாக; பகுதி பகுதியாக. பூமாரி—பூக்களை மழை போல் தூவுதல். கீதம் முழங்க—இசை இசைக்க. ஓலமிட—சத்தமிட. அரம்பையர்—தெய்வமகளீர். மன்னவன்—அரசன். தழைக்கும்—செழிக்கும்.

The impressive military retinue and related paraphernalia

Chariots, festivals and Tīrttaṅkara festivals,
Pearl parasol and golden parasol studded with three emeralds,
Steel umbrellas of various kinds in close parade,
Silk parasols various cordoning,
Crores of flags in the front and festoons close by
Fans with orb-shaped golden handles oscillating,
White conchs blowing,
Flags, parasols beautiful,
Various kinds of mēḷams[24] and white royal drums thundering,

To the accompaniment of kettle drum the big royal drum booming,
Eighteen kinds of musical instruments variously closing in,
Folks in all directions decorating the streets,
Elephants, horses and chariots closely moving in separate files,
Flowers showering, poets eulogising,
Music loud and stringed instrument sounding,
Swarming bees happily humming,
Divine damsels dancing and posing,
Stage actresses greeting with their hands,
Dancing gaily to the accompaniment of mattaḷam[25]
Thus revelled the city,
A city peerless in all the eight directions.

The king and the queen

The king of this city of appropriate royal line,
Tarumacēṉaṉ by name, a blessed ruler,

24. Mēḷam — A kind of drum beaten on both sides. 25. Mattaḷam — drum beaten on both sides.

மகாமண்ட லேசுவரன் மன்மதன்போல் நேரொப்பான்
பட்டத் தரசியும் பதிவிரதை மகாதேவி
குணமதி யென்றுமவள் குளிர்மதிபோல் நேரொப்பாள்

அழகு மிளமையும் ஆண்மையுள்ள மென்பாடும்
திருவழகும் ஒப்புமையும் தேவலோக ரம்பையொப்பாள்.

வராங்கன் தோற்றம்

இஷ்டவிச யங்கள் யெதிர்காமனும் போகத்தில்
அநுபவித்துச் செல்கின்ற ஆச்சியொரு காலத்தில்
ஆங்கவர்க்கு உற்பவித்தான் அதிகவ ராங்கனென்பான்

இவ்வகை யாக யிருக்குமந்த நாள்தனிலே

வராங்கன் சிறப்புக்கள்

[13]கல்வி யழகும் காட்சியுள்ள பேரழகும்
அறிவும் அடக்கமும் ஆண்மையுள்ள சேவகமும்
சூட்சிப் பிரதாபமும் சுந்தரீக மென்பாடும்
அலர்தா மரைநிறமும் அதிகமுள்ள தன்னிறமும்

பவளம் பதித்ததுபோல் பார்வையுள்ள செவ்வாயும்
முத்துப் பதித்ததுபோல் முன்வரிசைப் பல்லழகும்
அஸ்த கடகமும் அணிவிரலில் மோதிரமும்
சரப்பளி முத்துகளும் சங்கிலியும் தன்பதக்கம்
அரையில் அரைஞாணும் அதிகமுள்ள மென்பாடும்

குளிர்மதிபோல் நேரொக்கும் கொற்றவனார் தன்முகங்கள்
காட்சிப் பெரிதுடைய கல்வியுட னழகும்
[14]வீரியப் பிரதாபமும் வில்லாண்மை சேவகமும்
[15]சம்யக்த்வ தரிசனமும் தாஷ்டிக முண்டாகி
இப்படி யாக யினிதுசெல்லுங் காலத்திலே

மகாமண்டலேசுவரன் — மண்டலத்தையாளும் அதிபதி. மன்மதன் — காமன், நேரொப்பாள் — இணையாயிருப்பாள். பட்டத்தரசி — தலைமையரசி. பதிவிரதை — கற்புடையமனைவி. மகாதேவி — பார்வதி, தலைமையரசி. ஆண்மை — ஆளுந்தன்மை. திருவழகு — இலக்குமியின் அழகு போன்றவன். ஒப்புமை — சமானம், தேவலோகம் — சுவர்க்கலோகம். இஷ்டம் — விருப்பம். உற்பவித்தல் — தோன்றுதல். சேவகம் — ஊழியம். சூட்சி — ஆலோசனை. பிரதாபம் — வீரம். சுந்தரீகன் — அழகுள்ளவன். பவளம் — நவமணியுள் ஒன்று. செம்மை + வாய் = செவ்வாய் — சிவந்தவாய். அஸ்தகடகம் — கைக்கங்கணம். சரப்பளி — பொன்னால் ஆன கழுத்தணிவகை. அரையில் — இடுப்பில்; இடையில். அரைஞாண் — இடுப்பில் கட்டுங் கயிறு. கொற்றவன் — அரசன். பிரதாபம் — பெருமை; கீர்த்தி. வில்லாண்மை — விற்றிறமை, சேவகம் — ஊழியம். சம்யக்த்வ — நற்காட்சி. தாஷ்டிகன் — உத்தண்டன், செல்வாக்கு உள்ளவன்

Great chief of regions, handsome like Manmatan[26]
The queen a chaste lady great,
A paragon of virtue ever as benign as the cool moon,
In beauty, youth and royal tenderness
Resembling divine damsels in her Lakshmi-like looks.

Varāṅkaṉ's birth

Desires inspired by Kāmaṉ [27]resulting in a sexual union,
Emotions ruling high in a spell of enjoyment,
There was born Varāṅkaṉ to them (The royal pair)
And in such a context and period.

Varāṅkaṉ's attributes

Erudition and handsomeness apparent,
Intelligence, modesty and spirit of service majestic,
Resourceful heroism and tender charm,
Fairer in complexion than the elegant lotus,
Mouth as red as coral fixed
With front teeth like a row of pearls,
Bracelets on hand and rings in fingers,
Pearl necklaces and chains with pendents,
Band in the waist so tender,
A royal mien very like the moon
Enhanced by scholarly deportment,
Vigour and bravery with archery facile,
Good looks and influence great

Thus passed time happily when

26. Maṉmataṉ — God of love noted for his handsomeness. 27. Kāmaṉ — God of Love who inspires lust.

வராங்கனுக்கு விழா எடுத்தல்

கண்டார் மன[16]மகிழ காட்சியுள்ள பேரழகை
[17]பந்து சனங்கள் பெருக்க மனமகிழ்ந்து
சேனைப் பரிவாரம் செல்லமாய்க் கொண்டாட
பரிவார சேனைகளும் பரிமளம்போல் கொண்டாட
வீரிய வராங்கனை விசயமுடன் கொண்டாட

வராங்கனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தல்

கொண்டாடிச் செல்லநல்ல கோமான் வராங்கனை
தக்க புகழில் தர்மசேன ராசனுக்கு
இளையதேவிக் குமாரன் இவனும் சுசேணனென்பான்
வராங்க னிருந்து மகிழ்ச்சியுடன் இராசியத்தை
எல்லாங் கைக்கொள்வான் என்றுமவன் நினைத்து

மனது பொறுக்காமல் மாதா வுடன்கூற
மாதாவு மப்போது மனத்தில் துயரமதாய்
எல்லா மவன்வசமா யிருக்குதென்று மப்போது
சுசேணனை யிப்போது துரும்பாய் மதிக்கவில்லை
என்று மவள் நினைந்து இருவரும் தான்பேசி

மாதாவும் தானும் வராங்கனைக் கொல்லவென்று
இப்படி யாகவே தயக்கமுடன் யோசித்து
வராங்கனிட மந்திரியைத் தயக்கமுட னப்போது
உள்ளாக்கிக் [18]கொண்டு உறுதியாய் அப்போது
ஆலோ சனைக ளப்போதே கேட்ப்போமென்று

மந்திரியின் வீட்டிற்குச் செல்லுதல்

மாதாவும் தானுமப்போ மந்திரிதன் பாடுசென்று
சுசேணனு மாதாவும் துயரமுடன் தானிருந்து
கண்டந்த மந்திரியும் கனமா யெடுத்துரைப்பான்
ஏதுக்கு வந்தீர்கள் யெனக்கறியக் கூறுமென்றார்
சுசேணனு மப்போது சூதாக வார்த்தைசொல்லி

பந்துசனம் — சுற்றத்தார்கள். விசயமுடன் — வெற்றியுடன். கோமான் — அரசன். இராசியம் — நாடு. கைக்கொள்ளுதல் — தன்வசமாக்கிக் கொள்ளுதல். பொறுக்காமல் — பொறுக்க முடியாமல். துயரமுடன் — கவலையுடன். துரும்பு — அற்பம், தயக்கம் — கலக்கம். மாதா — அம்மா. பாடு — வீடு. துயரமுடன் — கவலையுடன். கனமாக — அதிகமாக. சூதாக — தந்திரமாக.

Varāṅkaṉ felicitated

Impressive good looks delighting the viewers,
Relations rejoicing greatly,
Army and retinue fondly celebrating,
Attendants in good number adding lustre,
To felicitate Varāṅkaṉ the brave one.

Conspiracy to kill Varāṅkaṉ

Thus when Varāṅkaṉ as a good king by all esteemed,
King Tarumacēṉaṉ of just repute,
Had a son by his second spouse, one Cucēṇaṉ
Who brooding over the happy prospect
Of Varāṅkaṉ's succession to the kingdom
With bitter jealousy complained to his mother,
His mother too with the same unhappy disposition
Felt that Varāṅkaṉ with all in his hold,
Who had scant regard now for Cucēṇaṉ,
Would humiliate him further. Both discussed this,
Mother and son decided to kill Varāṅkaṉ,
Thus deliberated with some apprehension,
Decided to take Varāṅkaṉ's minister into confidence,
And to conspire with him conceretely then and there.

Calling at the minister's residence

Mother and self (Susēṇaṉ) called at the minister's house,
Cucēṇaṉ and mother in deep sorrow remained,
Seeing them thus, spoke the minister strongly;
'Why have you gone over here? Inform me' he said
Cucēṇaṉ replied cunningly thus;

வந்த கருமம் வார்த்தைக் கிடமில்லை
நான்வந்த காரியம் நலமாக நீர்கேட்டு
அந்தப் படியேநீர் அருளுகிறேன் னென்றாக்கால்
வந்த கருமங்கள் வகையா யுரைக்கிறேன்
என்று சுசேணனு மிகலா யவனுரைக்க

மந்திரி கேட்டு மனமகிழ்ந்து கூறுவான்

மந்திரி கூறுவது

சொன்ன கருமம்நான் துரிதமாய்ச் சொல்லுகிறேன்
பரவசம் சொல்லென்றான் பண்பான மந்திரியும்
கேட்டுச் சுசேணனும் கிலேசமற்றுத் தானிருக்க
மந்திரி பார்த்து மகிழ்ச்சியுடன் தானிருக்க

அப்போது சுசேணன் அன்பாகக் கூறுவான்
வராங்கனிட [19]சரிதம் வகையாய்த் தானுரைத்து
வராங்கனே தானிருந்தால் வண்மையுள்ள ராசியத்தை
எல்லா மவன்கையில் யென்னை மதியார்கள்
கொல்லவே வேணுமென்றான் கோமான் சுசேணனும்

அப்போது மந்திரியும் அபயமது சாதிப்பான்

குதிரை வாங்குதல்

உபாயமா யிரண்டு உறுதியுள்ள தன்புரவி
கொண்டுவா வென்றான் கொலைக்கேடன் மந்திரியும்
அப்போ சுசேணனும் அன்பாய் மனமகிழ்ந்து
குதிரைக் கதிபதிக்கு கூறுவான் சுசேணனும்

நல்ல புரவியாய் நாட்டிலுள்ள தன்புரவி
இரண்டு புரவிகள் கொண்டுவர வேண்டுமென்றான்
அப்போ அதிபதியும் அன்பாய் மனமகிழ்ந்து
நல்ல புரவியாய் நலமாகக் கொண்டுவந்து
சுசேணனுக்கு முன்னே சொல்லியவர் நிறுத்தி

அந்தப் புரவியை அன்பாகத் தான்பார்த்து
மெத்த மனமகிழ்ந்து வீரியமாய்க் கூறுவான்.

கருமம் — செயல். காரியம் — அலுவல், அருளுதல் — கிருபை செய்தல். பரவசம் — மிகு களிப்பு. கிலேசம் — துக்கம். சரிதம் — சரித்திரம்; வரலாறு. வகையறிதல் — செய்யும் முறை தெரிதல்; கூறுபாடறிதல். வண்மை — ஈகை. இராசியம் — அரசாளுந்தேசம். மதியார்கள் — மதிக்க மாட்டார் கள். அபயம் — தஞ்சம்; அடைக்கலம். உறுதியுள்ள — வல்லமையுள்ள. புரவி — குதிரை. கொலைக் கேடன் — பழி பாவங்களுக்கு அஞ்சாதவன். அதிபதி — தலைவன். வீரியமாய் — வலிமையாய்.

"The purpose of our visit cannot be simply revealed
If you listen kindly to the object of my visit
And promise to act accordingly
Then shall I reveal the purpose of my visit"
Cucēṉaṉ thus speaking glibly
The minister felt happy and observed.

The minister's utterance

'The task you stated I shall respond quickly
And with rejoice, tell me' said the minister noble,
Hearing this Cucēṉaṉ was rid of his sorrow,
The minister noted this and remained happy;
Then Cucēṉaṉ spoke nicely thus.

Varāṅkaṉ's history he narrated in proper sequence,
'If Varāṅkaṉ presides over the kingdom prosperous,
He will hold sway over all, nobody will care for me.
He (Varāṅkaṉ) has to be killed,' said prince Cucēṉaṉ;
The minister then promised refuge and support.

Buying horses

"Bring two sturdy horses",
Said the murderous minister cleverly,
Cucēṉaṉ glad at heart,
Told the horse-keeper blundly,
'Bring two good stallions,
The best among the horses available in the land,"
The horse-keeper happily responded,
Brought two horses in fine fettle,
To the presence of Cucēṉaṉ,
Who on seeing the horses with delight,
Much satisfied, instructed he clearly.

தூதுவருக்குக் கட்டளை யிடுதல்

தூதுவரைத் தானழைத்து துலக்கமுடன் தான்கூறுவான்
வராங்கனிட மந்திரியை மகிழ்ச்சியுடன் தானழைத்து
அழைத்துக்கொண்டு வாவென்று அன்பாகக் கூறுவான்

அப்போது தூதுவரும் அன்பாய் மனமகிழ்ந்து
மந்திரி யண்டையிலே மனமகிழ்ந்து தான்போகி
மந்திரி யோடே மகிழ்ச்சியுடன் கூறுவான்
சுசேணனு மிப்போ துருசாய் வரச்சொன்னார்
தூதுவர் சொல்லவே துருசாக மந்திரியும்

அப்போ யெழுந்திருந்து அன்பாக மந்திரியும்
சுசேணன் இருக்கின்ற துரித யிடங்குறுகி
மாவினி ரெண்டையும் மகிழ்ச்சியுடன் தான்பார்த்து
மெத்த மனமகிழ்ந்து வீரியமாய்க் கூறுவான்

குதிரைக்குப் பயிற்சி கொடுத்தல்

மாவிந்தி பதியும் மந்திரியும் தானழைத்து

அதிபதி யோடே அன்பாகக் கூறுவான்
புரவியில் இரண்டிலொன்று புகழ்வீரா யிப்போது
நாட்டியப் புரவிபோல நலமாக சிட்சைபண்ணி
மேதினியி லில்லாத விபரீத சிட்சையுமாய்க்
கடிவாளந் தானிழுக்கக்[20] கதறிப் பறக்குமதாய்

கடிவாளந் தளரவிடக் கருத்துடனே நிற்குமதாய்
இப்படிக்குச் சிட்சைபண்ணி யென்முன்னே கொண்டுவந்தால்
அப்படியே வெகுமானம் அன்பா யுனக்களிப்பேன்
நாட்டியப் புரவிபோல நலமாக சிட்சைபண்ணி
விபரீத சிட்சையுமாய் வீறுபெறத் தான்பண்ணி

கைகயிறு தானிழுக்க காற்றாய் பறக்குமதாய்
இப்படியாக யியலுடனே சிட்சை பண்ணி
அப்போ அதிபதியும் அன்பாய் மனமகிழ்ந்து

தூதுவன் — ஒற்றாராய்பவன். அண்டையிலே — பக்கத்திலே. துருசாய் — விரைவாய், மா — குதிரை. வீரியமாய் — வலிமையாய். மாவிந்திபதி — குதிரை படைத்தலைவன். புரவி — குதிரை. சிட்சை — பயிற்சி. மேதினி — பூமி; உலகம். விபரீதம் — மாறுபாடு; திரிவுபட்ட. கடிவாளம் — குதிரையின் வாயில் பூட்டப்படும் இரும்புக்கருவி. கதறுதல் — உரக்க அழுதல். கருத்துடனே — அறிவுடனே. வெகுமானம் — வெகுமதி; பெருமதிப்பு. வீறு — தனிப்பட்டச் சிறப்பு. அதிபதி — தலைவன்.

Instructing the emissaries

He summoned emissaries and told them plainly,
'Bring Vaṟāṅkaṉ's minister here.'
Said he smoothly,
The messengers too gladly obeyed,
Went to the minister's place and,
Informed him happily thus
'Cucēṇaṉ has asked you to meet him urgently'.
Thus informed by the messengers the minister quickly
Rose and reached Cucēṇaṉ at the appointed place,
And saw the horses both with satisfaction,
Delighted the minister thus asserted.

Training the horses

The minister summoned the cavalry chief
And told the chief gently,
'If you train one of the horses now,
Skilfully as a dancing horse,
And uncommonly train as nowhere on earth,
So that it flies, loudly neighing though in reins,
If you train the horse thus and bring it before me,
Then and there shall I reward you liberally.
It should dart like wind when its reins are pulled,
As the horse was accordingly trained,
Beamed the chief with happiness then.

குதிரைகளை அழகு செய்தல்

மாவினி லிரண்டையும் மகிழ்ச்சியுட னப்போது
பதிவான குதிரைக்குப் பளபளென கல்நகையும்

[21]அங்க வடியும் அழகாகச் சோடித்து
மெத்தைப் படிச்சுட்டு மேல்நகையும் தான்போட்டு
மெத்த மகிழ்ச்சியுடன் வீறாகச் சோடித்து
மந்திரிக்குக் காட்ட மகிழ்ச்சியுடன் தான்சென்று
மந்திரி யோடே மனமகிழ்ந்து கூறுவான்.

சொன்ன படிக்கிச் சொல்லொ(ன்று)ந் தப்பாமல்
அந்தப் படியேநான் அசுவ மிரண்டையும்
நாட்டுப் புரவிபோல நலமாகச் சிட்சைபண்ணி
விபரீத சிட்சையொன்று வீறாகத் தான்பண்ணி
மாவுக் கதிபதியும் மந்திரி யோடேகூற

மந்திரியு மப்போது மனமகிழ்ந்து தான்பார்த்து
அதிபதி யோடேயவன் அன்பாகக் கூறுவான்
குதிரை யிரண்டையும் கோமான் வராங்கனிட
அரண்மனை யண்டையிலே அதிகமுடன் கட்டிவைத்து
மாவி னதிபதியும் மந்திரியு மப்போது

வராங்கன் அரண்மனைக்கு வரிசையாய்ச் சென்றேறி
வராங்கமகா ராசனைத்தான் உண்மையுடன் தரன்கண்டு
மந்திரியு மப்போது மனமகிழ்ந்து கூறுவான்.

வராங்கனுக்குக் குதிரையைக் காட்டுதல்

அரண்மனைக் குள்ளேதான் அதிக புரவிரண்டும்
கொண்டுவந்தே னிப்போது கொற்றவனே உந்தனுக்கு

வராங்கன் குதிரையைப் பார்த்தல்

மந்திரியுஞ் சொல்லவே மனமகிழ்ந்து தான்கேட்டு
அதிபதியைத் தான்பார்த்து அன்பாய் எடுத்துரைப்பான்
அரண்மனைக் குள்ளிருந்த அசுவ மிரண்டையும்
[22]கொண்டுவா வென்றான் கோமான் வராங்கனும்
அந்த விசேசத்தை அதிபதியும் தான்கேட்டு

சோடித்து — அலங்கரித்து. சொல் — பேச்சு, தப்பாமல் — குற்றமில்லாதல், அசுவம் — குதிரை புரவி — குதிரை; மா — குதிரை, அதிபதி — தலைவன், கோமான் — அரசன், அண்டையிலே — பக்கத்திலே; அருகிலே. உண்மையுடன் — வெற்றியுடன், கொற்றவன் — அரசன். விசேடம் — சிறப்பு. பிரியமாய் — மகிழ்ச்சியாய். புரவிகள் — குதிரைகள். வீரியம் — வளமை.

Adorning the horses

Happily both horses were groomed,
The marked horse was adorned with jewels studded with shining stones,
Decorated gaily on both sides,
Much learned in the art did he cover the horse with jewels
Vigorously adorned with ecstasy,
Went to show the horse jubilantly to the minister
And told the minister gaily:
'As instructed and not going back a whit on it
Accordingly have I trained both horses
As well as any horse on land,
And vigorously trained one to behave uncommonly',
Thus the cavalry chief informed the minister.
The minister saw the horses with satisfaction,
He did express nicely his approval,
The horses both were tied near Varāṅkaṉ's palace,
The cavalry chief and the minister then,
Reached together the palace of Varāṅkaṉ.
Met Varāṅkaṉ royal verily,
The minister then spoke merrily.

Showing the horse to Varāṅkaṉ

I have brought the horses both to the palace,
Now for you, O! king

Varāṅkaṉ sees the horses

Delighted on hearing the minister spoke thus
Turned to the cavalry chief and gently said,
'Bring both the horses from within the palace',
Observed king Varāṅkaṉ,
Hearing the message, the cavalry chief,

மெத்த மனமகிழ்ந்து பிரியமாய்த் தானோடி
அசுவமி ரண்டையும் அன்பாய் வராங்கன்முன்னே
கொண்டுபோய் கட்டினான் குதிரைக் கதிபதியும்
புரவிகளைப் பார்த்து புகழ்வீரன் அப்போது
மெக்த மனமகிழ்ந்து வீரியமாய்க் கூறுவான்

காவலனுக்குப் பரிசு கொடுத்தல்

கண்டு மனமகிழ்ந்து காவலன்தா னப்போது
அசுவங்கள் கொண்டுவந்த அதிபதியைத் தான்பார்த்து
அன்பாய் சிறப்புடனே ஆடையுடன் கொடுத்து
புரவியை வாங்கியப்போ புகழ்வீர னப்போது
புரவி நடையழகைப் புகழ்வீரன் பார்க்கவென்று
நடையழகைப் பார்க்கவென்று நலமாய்ப் புறப்பட்டான்.

வராங்கன் அரண்மனையை விட்டுப் புறப்படுதல்

இவ்வகை யாலேஇவன் இசைந்து படையெடுத்தான்
அரண்மனையை விட்டு அன்பாய்ப் படையெடுத்தான்
ஆனை குதிரைத்தேர் ஆட்கள் நெருங்கிவர
சேனைப் பரிசனமும் திரளும் பலர்சூழ
காலாளும் வில்லாளும் கனகனத்த புரவிகளும்
கொண்டாடும் கோமான் குலத்தரசர் தன்சமூகம்
கொடியும் குடையழகும் கொம்பனையா ராடலும்
தவளமொடு சங்கு தானே முழங்கிவர
பொன்னால் வட்டமுடன் பூண்கவரி தான்வீச
தவளசத்திர சாமரைகள் தானே மருங்கசைய
ஆடலும் கூத்துகளும் அரம்பையர்கள் சூழ்ந்துவர
மத்தள தாளமுடன் மங்கையர்கள் கைகாட்ட

படைகளின் முழக்கங்கள்

ஆனை குதிரைத்தேர் அனேகம்பேர் நெருங்கிவர
[23]பஞ்ச மகாசப்தம் பார்முரசு நின்றதிர
பேரிகை தாளமுடன் பெருமுரசு நின்றதிர
பதினெட்டு வாத்தியமும் பலவகையாய்த் தான்முழங்க

சேனை—படைகள், பரிசனம்—பரிவாரம். திரள்—மிகக் கூடுதல். காலாள்—வீரர், பதாதி. புரவி—குதிரை. கோமான்—அரசன். குலத்தரசர்—மக்களைக் காக்கும் மன்னன். தவளம்—வெண்மை. சத்திரம்—குடை. முழக்கம்—ஆரவாரம். சாமரம்—கவரிமானின் மயிரால் அமைந்த விசிறி. மருங்கு—பக்கம். அரம்பையர்கள்—தெய்வ மகளிர். சூழ்ந்துவர—நெருங்கிவர. மத்தளம்—இசைக்கருவி. மங்கையர்கள்—பெண்கள். அனேகம்பேர்—எல்லோரும், பஞ்ச—ஐந்து, பார்—பூமி; மண்ணுலகம். மகா சப்தம்—பெரிய ஆரவாரம். பேரிகை—முரசு.

With great rejoice, rushed promptly,
Brought both horses before Varāṅkaṉ,
And they were tied by the chief there
On seeing the horses, the famed warrior,
Greatly satisfied Varāṅkaṉ, observed majestically.

Rewarding the trainer

Seeing the horses, the king was delighted,
Turning to the cavalry chief who brought the horses,
Rewarded him with fine garments in appreciation
The famed warrior received the horses there
The warrior wanted to examine the impressive gait of the horses
And accordingly he set out to observe their gait.

Varāṅkaṉ leaves with retinue

Thus he set out on the expedition willingly,
Invaded with pleasure leaving the palace,
Elephants, horses, chariots and men close on heels,
Army and retinue and many others surrounding,
Infantry, archers and stout horses
In the presence of the king, the saviour of his subjects,
Flag, parasol graceful and women slim as horn dancing,
White conch blowing
Fan with golden-orbed handle waving,
White Cāmarams[28] oscillating sideward,
Dance and drama with divine damsels around,
Rythmic beating of mattaḷam[29]and women waving their hands.

The rumbling of the army

Elephants, horses, chariots and many others closing in,
In a fivefold din the drum on earth thundering,
To the rhythmic accompaniment of pērikai[30] the big drum beating
Eighteen instruments rumbling in varied pitches

28. Cāmaram – Big fans with handles operated manually. 29. Mattaḷam – Drum. 30. Pērikai – War drum.

பாட்டுங் கூத்தும்

கட்டியங் காரர்கள் கவிகள் பலஉரைப்ப
பாடும் புலவர்களும் பாடியவர் சூழ்ந்துவர
பாடகர்கள் கூடித்தான் பரிமளம்போல் கொண்டாட

சின்னரர்கள் கூடிப்போ கீதம் பலமுழங்க
நாடக சாலை நலம்பெறவே கைகாட்டி
[24]நடனமிட்டு பெண்களெல்லாம் நட்டுவர்கள் [25]தான்கூடி
மெத்த மகிழ்ச்சியுடன் உருகி நடனமிட
காலி லிருக்குமந்த கச்சைகள் [26]ஓசையிட

பாதத்தில் தாங்களிட்ட பெருஞ்சில்ம்பு [26]ஓசையிட
முத்துரத் தினமாலை முலைமார்பில் தான்புரள
ஆபரண மெல்லாம் அதிகமுடன் தானசைய
நெற்றிக்குச் சுட்டிகட்டி நீள்விழிக்கி மையெழுதி
இட்ட திலர்தபொட்டு யிகலாக சோதியிட

கட்டழகி கையிலேதான் கடசல் பவளமுடன்
இட்ட வளையலும் யிசைந்து [26]ஓசையிட
வட்டணைகள் போக்கியவள் வண்ணமயில் போலாட

மாமன்னர்களின் கவி

வண்டுகள் தும்பி மகிழ்ந்து யிசைபாட
மாமுடி மன்னர்கள் மகிழ்ந்து கவிபாட

பார்மகள் தன்மதிப்பு பதித்து அவள்நெளிப்ப
இப்படி யாகவே யெதிர்த்துப் படையெடுத்தான்

குதிரைகளுடன் அதிகாரி

அசுவ மிரண்டையும் அதிகாரி கொண்டுசெல்ல
மெத்த வெகுவெளியில் வீரியமாய்த் தான்போகி
தெண்ட நாயகருமப்போ சேனா பதிகளுந்தான்

கட்டியங்காரன் — கட்டியங்கூறிப் புகழ்வோன். கவிகள் — பாடல்கள். பரிமளம் — மிகுமணம். கின்னரர் — மனித உடலும் குதிரை முகமும் உடையவரும் யாழிசை வல்லவருமாகிய ஒருசார் தேவர். கீதம் — இசை. நட்டுவர் — நாட்டிய மாட்டுவிப்போன். கச்சை — சலங்கை. சுட்டி — நெற்றியில் அணியும் ஒருவகை ஆபரணம். சோதியிட — ஒலிவீச. கட்டழகி — பேரழகுள்ள பெண். கடசல் — அழகு செய்யப்பட்ட, வளையல் — கையில் அணியும் ஒருவகை ஆபரணம். வண்ண மயில் — அழகுள்ள மயில். தும்பி — வண்டுகள். மாமுடி மன்னர்கள் — அரசர்க்கரசர்கள். பார் மகள் — பூமிதேவி. நெளிப்பு — கர்வம் முதலியவற்றால் செய்யும் அங்க சேஷ்டை. அசுவம் — குதிரை. வெகுவெளி — பரந்தவெளி. வீரியம் — வளமை. சேனாதிபதி — படைத்தலைவன்.

Music and Dance

The heralding announcers reciting many poems,
The rhyming poets forming a cordon,
Singers gathering to celebrate with eclat
Assembled kiṉṉarars[31] chanting varied songs,
Waving their hands in the direction of the theatre.
Damsels dancing and dance masters in good number,
Melting and rejoicing, they danced.
Bells worn in their feet jingling,
Their big anklets sounding shrill,
Pearl and stone studded necklaces tossing over their breasts
Jewels in plenty moving,
Banding the forehead, applying mascara to the eyes,
The poṭṭu[32] on the forehead shining bright,
The ornate coral bangle in the hand of the lovely damsel,
Sounding rhythmically in unison,
Danced she like a plumed peacock.

Emperors' poems

Bees and moths happily humming
Crowned monarchs gaily reciting their poems,
Goddess Pārmakaḷ[33] swaying uneasily
Thus he (Varāṅkaṉ), invaḍed.

The official with the horses

The official leading both the horses
In the wide expanse, moving with vigour,
Teṇṭanāyakas[34] and commanders,

31. Kiṉṉaras – Heavenly beings. 32 Poṭṭu – A round mark worn or fixed on the forehead either in black or other colours.
33. Pārmakaḷ – Goddess of Earth. 34. Teṇṭanāyakars – Royal officials.

பரிவார சேனைகளும் பண்புள்ள இராசாக்கள்
சிரேஷ்டிகள் சூழ்ந்திருக்க திறல்வீரன் விழித்திருந்தான்
இராச பரிசினமும் இருபுறமும் சூழ்ந்திருக்க
சேனை பரிகலத்தைத் திறல்வீரன் கையமர்த்தி
அதிகாரி அப்போது அதிகப் புரவிதன்னை

இரண்டு புரவியும் ராசாவராங்கன்முன்னே
கொண்டு வந்துநின்றான் கொற்றவன் முன்னாக
புரவியை தான்பார்த்துப் புகழும் வராங்கனும்தான்
கண்டு மனமகிழ்ந்து காலை யெடுத்துவைப்பான்
அதிக சந்தோசமதாய் அதிகாரியைத் தான்பார்த்து

நீமுன்னே புரவி யேறென்று தான்சொல்லி
அதிகாரி அப்போது அதிக சந்தோசமதாய்
சொன்ன பொழுதே சூதாய் அதிகாரி
நாட்டியப் புரவிபோல நல்ல புரவியையும்
கடிவாளம் தான்பிடித்துக் கனத்த அதிகாரி

அங்கவடி கால்வைத்து அதிகாரி தானேரி

குதிரையின் நடையழகு

இவ்வகை யாலேயிவன் யிகலாய் நடைநடத்தி
[27]சாரிகை தான்விட்டுத் தளர நடைநடத்தி
மார்க்க நடையும் வலுவில் பெருநடையும்
ஓட்ட நடையும் ஒன்றுஉள்ளாமை பெருநடையும்

அச்சு நடையும் அழகும் எழுச்சியும்
நடையும் நடையழகும் நலமான சாரிகையும்
அநேக நடையுண்டாக்கி அதிகாரி கூறுவான்
வராங்க மகாராசனுக்கு வந்துமுன்னே கூறுவான்
இந்த இரண்டு புரவியிலும் [28]இஷ்டமுள்ள தன்புரவி

அந்தப் புரவியென்று அதிகாரி கூறுவான்.

பரிவாரம் — சேனைகள், சிரேட்டி — வைசியன், திறல் — வலிமை, வெற்றி. பரிசனம் — பரிவாரம். சேனை — படை. பரிகலம் — சேனை. புரவி — குதிரை. கொற்றவன் — அரசன். சந்தோசம் — மகிழ்ச்சி. சூது — வஞ்சகம், கடிவாளம் — குதிரையின் வாயில் பூட்டப்படும் இரும்புக் கருவி. அங்கவடி — குதிரை சவாரியின் போது கால் வைத்துக் கொள்வதற்கு குதிரையின் மேல் இடப்படும் கருவி. கணத்தார் — ஊர்க்காரிய நிர்வாகிகள். சாரிகை — குதிரை செல்லும் மார்க்கம். மார்க்கம் — குதிரை நடையின் ஒழுங்கு. வலு — சாமர்த்தியம். பெருநடை — விரைந்த செலவு. அநேகநடை — பலவகையான செலவு. அதிகாரி — விசாரணைக்கர்த்தா.

Royal retinue and noble kings
Vaiciya traders as well surrounding, the victorious king, was wakeful,
Royal retinue flanking on both sides,
The brave king waved his hands to keep order
The official then brought the horses,
Both to the presence of king Varāṅkan̲
And stood he before the king
Delighted on seeing the horses Varāṅkan̲ stepped forward
Turning to the official with immense joy,
'You ride the horse first' he said
The official then greatly rejoiced,
Cunningly leading the dancing as well the docile horse,
Holding the reins, the official local,
Placed his foot on the stirrup and mounted on the horse.

The graceful gait of the horse

Thus he led the horses with grace,
In the horse path to walk loosely
In measured foot steps first and vigorous gallop then,
Quick trotting now and at a wide slow pace like a tortoise next,
The same footsteps, beautiful and rousing,
Steps and gait and the horsepath fine,
Making the horse move in varied gait, the official said,
Stood before Varāṅkan̲ and observed,
'Among these two horses,
This is the better one' said the official.

வராங்கன் குதிரையில் புறப்படுதல்

வராங்க மகாராசனும் அப்போது மனமகிழ்ந்து
அந்தப் புரவியை நானேறிக் காண்பெனென்று
புரவியுட சேவகத்தைப் புகழ்ராசன் பார்க்கவென்று
குதிரைக் கடிவாளம் கோமானும் கைபிடித்து

விபரீத சிட்சையின்மேல் விசயன் குதித்தேறி
அங்கவடி கால்வைத்து அப்போது வராங்கனும்தான்
வாய்க்கயிற்றை அப்போது வலிந்து இழுக்கலுமே
வலித்து பிடிக்கலுமே வான்புரவி அப்போது
காற்றாய்ப் பறந்தது காட்சியுள்ள தன்புரவி

பிடிக்கப் பிடிக்கப் பெரும்புரவி அப்போது

படைகள் பின்தொடர்தல்

ஆகாய மாகவே பறந்தது [29] அப்போது
அம்பலத்தி லுள்ள அதிகமுள்ள சேனையெல்லாம்
பின்தொடர்ந்து ஓடஓட பெரும்புரவி அப்போது

வராங்கன் வழி மாறுதல்

வாய்கயிற்றைத் தானிழுத்து வலித்துப் பிடிக்கலுமே

சேனை பரிகலமும் திரளும் பலர்கிடந்த
நாடு நகருமந்த நலம்பெரிய சீமைவிட்டு
ஆகாய மாகவே பறந்தது அப்புரவி

வராங்கனைக் காணாது அரசனிடம் கூறுதல்

தொடர்ந்த பரிசனமும் துயரமுடன் காணாமல்
புரவியைக் காணாமல் பொறுக்க முடியாமல்

புரவி — குதிரை. சேவகம் — ஊழியம். கடிவாளம் — குதிரையின் வாயில் மாட்டப்படும் இரும்புக் கருவி. கோமான் — அரசன். விபரீதம் — மாறுபாடு, சிட்சை — பயிற்சி. விசயன் — வராங்கனாகிய விசயன். அங்கவடி — குதிரை சவாரியின் போது கால் வைத்துக்கொள்வதற்கு இடப்படும் கருவி. வாய்க் கயிறு — குதிரையின் வாயில் பூட்டப்படும் கடிவாளம். வலிந்து — பலவந்தமாக. வான் — ஆகாயம். காட்சி — கண்ணுறல். அம்பலம் — ஊர்ச்சபை. சேனை — படைகள். பரிகலம் — படைகள். திரள் — கூட்டம். சீமை — நாடு. தொடர்ந்த — பின்சென்ற. பரிசனம் — பரிவாரம், படை. துயரமுடன் — கவலையுடன்.

Varāṅkaṉ starting on the horse

King Varāṅkaṉ happily then,
'I shall ride on this horse and see' said he,
For the famed king to test the mettle of the horse,
Holding its reins in his hand,
The Vicayaṉ like Varāṅkaṉ mounted in a leap on the
Horse uncommonly trained.

Placing his feet on the stirrup, Varāṅkaṉ
Pulled the reins forecefully and the horse
Flew like wind, the enviable attraction of all eyes,
Despite attempts repeated to hold, the big horse then,

The retinue following

Flew as on the skies. At that juncture,
The retinue of the local councils
Running followed, ran fast when the horse huge,

Varāṅkaṉ goes astray

As he pulled the reins strongly,
Leaving the big region, city and country as well,
With all the army, retinue and many others
The horse sped as in a skyward flight.

The missing of Varāṅkaṉ reported to the king

The following retinue missing him sadly
Unable to see the horse, impatient and restless,

வராங்கனையுங் காணாமல் மனங்கலங்கிப் பார்த்தளவில்
துக்க முடனே துயரமுடன் தான்திரும்பி
சேனைப் பரிசனமும் திரளும் பலர்திரும்பி
அரசனண்டை ஓடி அறிக்கையிட்டுத் தான்சொல்ல
அரசன் அதுகேட்டு அதிக துயரமுடன்

வராங்கனைத் தானிழந்தோம் மதிமயங்கி நலிந்தே
ஆகாயமாகவே பறந்தது அப்புரவி
கயிறு இழுக்கவே கதறிப் பறந்தது
ஆதித்திய கிரணம் அறியாத காட்டில்
கடுகியே நூறு காதவழி நிமிடத்தில்

அந்தப் புரவி அடவியிலே கொண்டுசென்று
செடியும் செண்டுகளும் சிதறிய முள்ளுகளும்
ஆபரண மெல்லாம் அதிகமாய் தான்செய்ய
ஆடை யுடனே ஆபரணம் [30]அற்றுவிழ
செடியும் செண்டுகளும் சேர்ந்த அடவியிலே

ஓடிப் பறந்தது உத்தமனார் தன்புரவி.

வராங்கனும் குதிரையும் கிணற்றில் விழுதல்

அக்காட்டில் வீற்றிருக்கும் அதிகமொரு துரவில்
துரு படர்ந்த துரவிலே அப்புரவி
பாழும் கிணற்றிலே பதித்த பெருந்துரவில்
ஓடி விசையாய் உத்தமனார் தன்புரவி

வராங்கனைக் கொண்டுசென்று மதிமயங்கி விழுந்தது.

குதிரை இறந்து வராங்கன் தப்பித்தல்

அந்தத் துரவில் அதிகமுள்ள காட்டில்
அசுவம் மடிந்தது அதில் வராங்கனும்தான்
துரவில் அதிகமாய்த் துருபடர்ந் திருக்க
[31]துருகளைப் பற்றியவன் துருசாய் அவனேறி

மனங்கலங்கி — மனம் வேதனைப்பட்டு. துக்கம் — துன்பம். துயரம் — மனத்துக்கம். சேனை — படைகள். திரள் — கூட்டம். அண்டை — பக்கத்தில். அறிக்கை — எழுத்து மூலமான விளம்பரம். நலிதல் — மெலிதல். ஆகாயம் — வான். கதறுதல் — உரக்க அழுதல். ஆதித்யன் — சூரியன். கிரணம் — ஒளிக்கற்றை. கடுகி — விரைவாக. காதம் — 1 காதம் என்பது 7½ நாழிகையில் ஒருவர் நடக்கும் தூரம். அடவி — காடு. ஆபரணம் — அணிகலன். அற்றுவிழ — அறுந்துவிழ. உத்தமன் — நற்குணமுடையவன். செண்டு — பூச்செடிகள். துரவு — பாசனத்திற்கு உதவும் பெருங்கிணறு. துரு — மரம். விசை — வேகம். உத்தமனார் — நற்குணமுடையவர். புரவி — குதிரை. மதிமயங்கி — அறிவு மயங்கி. அசுவம் — குதிரை. மடிந்தது — இறந்தது. துருசாய் — விரைவாய்.

Lost sight of Varāṅkaṉ and frantically searched
Returned in great number with grief and sorrow grave,
Rushed to the king and reported in writing.

On hearing the matter, the king in great sorrow
Weakened and dazed, the loss of Varāṅkaṉ, he realized,
Meanwhile the horse flew as though skyborne,
Neighing loud darted as the reins were pulled
In the dense jungle dark, which rarely allows sunbeam,
Whizzing past a thousand miles in a mere minute,
The horse passed the forest thus,
All over plants and scattered thorns,
Jewels and garments falling on the way,
In the forest of varied plants,
Thus ran the horse as in a flight, the horse of the person noble

Varāṅkaṉ and the horse fall in a well

In the forest, a big well there was,
A wide turavu[35] indeed, lined with trees and the horse,
In the wretched well, a big one unused,
Ran fast, the horse of the noble one,
Fell into the well in a daze, along with Varāṅkaṉ.

The horse dies but Varāṅkaṉ escapes

In the big well of that dense jungle
The horse died but Varāṅkaṉ great,
As trees plenty were spread over the well,
Holding the trees climbed he quick,

35. Turavu — A big well used for irrigation.

நாலு திசையுமப்போ நலமாகத் தான்பார்த்து
வராங்க மகாராசன் விருட்சத்தின் கீழிருந்து
மனசில் துயரமதாய் மகாராசன் தானிருந்து
ஏதேது சிந்தித்தான் யியலான பேரரசன்

வழி தெரியாது திகைத்தல்

அந்த நகரும் அரசு பரிசனமும்
இந்த வனத்தில்நான் ஒருவனாய்ச் சூழ்ந்திருக்க
சிறந்து வகைகளும் தேன்மொழியா ளுடனுமே
ஆனை பரிகலமும் அதிகமுள்ள சேனைகளும்
இத்தனையும் வந்ததோ இக்காட்டுக் குள்ளாக
நானே ஒருவனாய் நற்துரவில் விழுந்தேனென்று
ஆர்வந்து தானுதவி அன்பாய் யெடுத்துவிட்டார்
ஆரிருந்து என்னை அதிகமுள்ள சீவனுக்கு
புண்ணிய பாவமெல்லாம் பொருந்தி யனுபவிக்கும்
தன்னாலே யெண்ணி தானே [32]மனந்தளர்ந்து
மெல்ல யெழுந்திருந்து மேன்மையுள்ள காட்டிலே
வழிதேடித் தான்திரிந்தான் மன்னவனும் அப்போது

வராங்கனை வேங்கைப்புலி தொடர்தல்

தேடித் திரிகையிலே தேசத்து அரசன்மேல்
வேங்கைப் புலியொன்று மீண்டுந் தொடர்ந்துவர
கண்டு வராங்கனும் கால்கள் நிலம் பாவாமல்

மரத்தில் ஏறித் தப்பித்தல்

அங்கேயொரு விருட்சத்தில் அதிவேகமாய்ச் சென்றேறி
ஏதேது அப்புலியும் ஏறி யிருந்தவரை
அகப்பட வில்லையென்று அவரையே பார்த்தது

துயரம் — கவலை. பரிசனம் — பரிவாரம். வனம் — காடு. பரிகலம் — சேனை, சேனை — யானை, குதிரை, தேர், காலாள் என்ற நால்வகை படை. துரவு — பாசனத்திற்கு உதவும் பெருங்கிணறு. சீவன் — உயிர்ப் பிராணி. தேசம் — நாடு. பாவாமல் — நிலை கொள்ளாமல். விருட்சம் — மரம்.

Looked around keenly on all four sides,
Standing under a tree Varāṅkaṉ sad at heart,
Brooded over things several, the rightful king great.

Not knowing the way – Feeling amiss and confused

'The city and the royal retinue,
Surrounding my single self in this jungle,
In a fine variety sweet voiced damsels
Elephants, retinue and armies in abundance
All entered into this forest,
But I alone fell into the well,
Who has come to my help and kindly taken me out?
Of what avail is any person to a living being,
The result of one's own good and bad deeds, one has to experience accordingly,'

Thus he reflected and felt depressed,
Rose slowly in that forest fine,
Wandered the king seeking the way proper.

A tiger chases Varāṅkaṉ

While in such pursuit, behind the king of the country
Followed a tiger in continuous chase,
Seeing the tiger, Varāṅkaṉ his feet unsteady on ground,

Varāṅkaṉ climbs a tree and escapes

Climbed very fast up a tree there,
The tiger looked at him,
He who had not been caught by the tiger.

வேங்கை கோபம் கொள்ளுதல்

அந்த மரத்தின்கீழ் அதிகவெகு கோபமுடன்
ஆங்கவனைக் கொல்வேனென்று அதிகமாய்ப் பள்ளிகொண்டு
அப்போது ஆதித்யன் அஸ்தமனமானான்

வராங்கன் சினதர்மரை தியானித்தல்

வராங்க மகாராசா மனதில் துயரமுடன்
நித்திரை வேளையிலே நிலைமையுள்ள இராத்திரியில்
நித்திரை பண்ணையிலே நேராய் விழாவண்ணம்
மரத்தில் படர்ந்திருக்கும் [33]ஒருகொடியைத் தான்பிடித்து
அப்போது ராத்திரியில் அதிக துயரமுடன்

பின்னையும் தன்மனதை பொறுக்கவே தான்தேற்றி
சுகதுக்கம் இரண்டுக்கும் சொல்லரிய சீவனுக்கு
சீவ னொருவனுக்கு சினரையும் தியானித்தான்
அனுபவிக்க வேணுமென்று அதிகமாய்த் தானினைந்து
[34]ஏகத்துவம் பாவித்து ஏகமனதாய் இருந்து

இராக்காலம் தள்ளி இராசா வராங்கனும்

விடியும் வரை புலி காத்திருத்தல்

ஆதித்யனும் அப்போ அதிக [35]உதயமானார்
மரத்தின் மேலிருந்து [36]மதபுலியைத் தான்[37]பார்த்தார்
இன்னமது போகவில்லை (என்று) மனங்கலங்கி
மனதில் துயரமதாய் மரத்தின்மேல் [38]தானிருந்து

வராங்கன் பெண் யானை போல் குரல் கொடுத்தல்

அப்பொழுது அந்த அடவியுள்ள காட்டிலே
[39]வந்ததொரு மத்தகசம் வரக்கண்டு தானுமங்கே
ஆனையைக் கண்டுமப்போ அன்பாய் வராங்கனும்
[40]பெண்ணானைத் தன்குரலாய் பெருக்கவே தான்கொடுத்தார்

பள்ளி கொள்ளுதல் — தங்கியிருத்தல். ஆதித்யன் — சூரியன். அஸ்தமனம் — மறைதல். துயரமுடன் — கவலையுடன், நித்திரை — தூக்கம், பொறுக்க — தாங்க. சீவன் — உயிர்ப்பிராணி. சினன் — அருகன். ஏகத்துவம் — ஒன்றாயிருக்குந் தன்மை. ஏகமனம் — மனம் ஒன்றாயிருக்கும் தன்மை. இராக்காலம் — இரவுக்காலம். தள்ளி — போக்கி. ஆதித்யன் — சூரியன். உதயம் — தோன்றுதல். மதபுலி — வலிமை கொண்ட புலி. அடவி — அடர்ந்தகாடு. மத்தகசம் — மதயானை. பெருக்கம் — அதிகமாக.

The tiger becomes furious

Right under the tree in great fury,
'Sure shall I kill him' determined the tiger and rested,
Set then the sun at such a juncture,

Varāṅkaṉ praying to Jiṉatarmar

King Varāṅkaṉ quite sad at heart,
In the hour of sleep at the night proper,
To avoid a fall while at sleep,
Held he fast to a creeper entwining the tree,
Quite forlorn during that night,
Then he consoled himself urging his mind to bear,
Both joy and sorrow that befall a living being
Prayed he to Arukaṉ for a being simple,
'Suffer I must' thought he deeply,
Singleness he adopted in singleminded concentration,
Passed the night thus, king Varāṅkaṉ.

The tiger waits till dawn

Rose the sun then grandly
From the tree he saw the tiger ferocious,
Feeling nervous that the tiger had not left still,
Sad at heart remained he on the tree.

Varāṅkaṉ trumpeting like a female elephant

Then in that jungle dense,
Came a rogue elephant on seeing which,
Varāṅkaṉ quite nicely,
Like a female elephant loudly did he trumpet,

யானை கோபம் கொள்ளுதல்

குரல் கொடுத்தபோதே கோபமுடன் கேட்டுவர

மெத்த மனமகிழ்ந்து வீரியமாய் யானைவந்து
[40]பெண்யானை காணாமல் [41]பெருத்த துயரத்தால்
குரலோசை யேதென்று கோபமுடன் தான்பார்க்க
மரத்தின்மேல் பார்த்தது வராங்கமகா ராசனை
கண்டபோதே யப்போ கனத்தவெகு கோபமுடன்

வராங்கன்மேல் பாய்ந்தது வீறான மத்தகசம்

யானை புலியைக் கொல்லுதல்

அகப்படாம லிப்போ ஆங்கார கோபமுடன்
மரத்தின் [42]கீழ்நின்ற மத்தகசம் அப்போது
புலியும் பெரும்பசியால் பெருத்தமத யானையின்மேல்
நிற்கையிலே வேங்கை நேராகப் பாய்ந்தது

மத்தகத்தில் பாயலுமே மனசில் வெகுகோபமுடன்
பாய்ந்த புலியைப் பற்றியொரு கால்பிடித்து
காலைப் பிடித்துக் கதிக்கவே தானிழுத்து
இருபாகம் பண்ணி யெதிர்நிலத்தில் தானறைந்து
அப்புலியைக் கொன்றது அதிகமுடன் பேரானை

விருட்சத்தை விட்டு விருப்பமுடன் நீங்கியபின்

மனம் சோர்ந்த வராங்கன்

நீங்கிய போதே நேராய் வராங்கனும்
மரத்தை விட்டுத் தானிறங்க மனசில்துயரமதாய்
காட்டுக்குள் போகையிலே கனத்த பசியாகி
மெத்தவே தாகமதாய் வீரி யிளைப்பாகி

அக்காட்டுக் குள்ளே அதிகமொரு திசையில்

வீரியமாய் — வலிமையாய். பெருத்த துயரம் — அதிக துன்பம். கனத்த — அதிகமான, வெகுகோபம் — அதிகசினம். வேங்கை — புலி. மத்தகம் — யானையின் கும்பத்தலம். கதிக்க — நேராக. விருட்சம் — மரம். கனத்த — அளவுக்கதிகமான. வீரியிளப்பாகி — அதிக சோர்வாகி.

The elephant wild with rage

Hearing that with wild fury,
Came the elephant with gaiety and vigour,
Greatly grieved as unable to see the female one,
Looked up at Varāṅkaṉ on the tree
With anger in great excess on seeing him,
The enraged elephant charged at Varāṅkaṉ.

The elephant kills the tiger

Maddened with rage as Varāṅkaṉ eluded;
Stood under the tree the elephant then,
The tiger hungry on the big wild elephant,
Pounced straight on the pachyderm standing,
On its broad forehead pounced when very angrily,
Grabbing the tiger that charged, by one of its legs,
Pulling the grabbed leg straight,
Ripping into two parts, and stamping on the ground before,
The huge elephant killed the tiger thus,
And left the tree of its own accord.

The depressed Varāṅkaṉ

As the elephant left, Varāṅkaṉ immediately,
Got down, worried in mind, from the tree
Deep into the forest moved with hunger acute,
And very thirsty too, feeling quite exhausted,
In the jungle in a direction wide.

பொய்கையைக் காணுதல்

திசைநோக்கிப் போகையிலே சேர்ந்ததொரு பொய்கையுண்டு
காட்டுக்குள் பொய்கையிலே கண்டு மனமகிழ்ந்து
பொய்கைக்கு உள்ளே புகழ்வீரன் போயிறங்கி
பொய்கைக்கு நன்மை புகழ்ராசன் தான்பார்த்து

சீலமும் நிறைந்துமிகச் செந்தாமரை படர்ந்து
[43]புட்பங்கள் பூத்துமிந்த பொய்கை நிறைந்திருப்ப

அருக்தேவரை வழிபடல்

வராங்க மகாராசன் வண்மையுடன் தான்பார்த்து
கண்டு மனமகிழ்ந்து காட்சியுள்ள பொ(ய்)கைதனில்
மெத்தவே தானிறங்கி மேவித்தன் கால்கழுவி

காலோடு கையும் கனிவாயும் கொப்பளித்து
சர்வாங்க சுத்திபண்ணி சந்தியாவந் தனம்முதலாய்
சபதபமும் தான்பண்ணி செந்தா மரைபறித்து
அருகரைத் தானினைந்து அடிவணங்கித் தானின்று
[44]அருகருட பாதம் அன்பாய் வணங்கியபின்

வராங்கன் முதலையிடம் அகப்படுதல்

பொய்கைக்கு உள்ளே புகழ்வீரன் போயிறங்கி
தாகம் தகிக்கும் தண்ணீர் குடிக்கவென்று
செந்தாமரை யிலையில் சேர்ந்த ஜலம்வடித்து
அப்பொழுதே தானிறங்கி அன்பாய்க் குடிக்கையிலே
பெரியதொரு முதலை பேர்பெரிய பொய்க்கையிலே

வராங்கனைக் கண்டு மனமகிழ்ந்து பார்த்தது
இரையகப் பட்டதென்று யிளைப்பாக ஓடிவந்து
காலைப் பிடித்ததுக் கனத்த தொருமுதலை
வராங்க மகாராசனும் மனதில் துயரமதாய்
ஏதேது சிந்தித்தான் இயலான பேரரசன்

பொய்கை — இயற்கையிலுண்டான நீர்நிலை. சீலம் — சீந்தில்கொடி. செந்தாமரை — தாமரையில் ஒருவகை. புட்பங்கள் — பூக்கள். உண்மை — வாய்மை, ஈகை. மெத்த — மிகவும். மேவி — பொருந்தி சர்வாங்கம் — எல்லா அவயவங்களும். சுத்தி — மனமொழி மெய்களில் மாசின்மை. சந்தியா வந் தனம் — காலை, உச்சி, மாலைகளில் வேத மந்திரங்களால் செய்யும் வழிபாடு. சபதபம் — சமண சமய ஒழுக்கங்கள். அருகர் — சைன மதக் கடவுள். தகித்தல் — உஷ்ணஞ் செய்தல், ஜலம் — தண்ணீர், இரை — உணவு, இளைப்பாக — தாழ்வாக.

He sees a Poykai[36]

Walking in such direction, saw he a Poykai

Gladdened he was on seeing a Poykai in the forest.
Stepped he into the Poykai, the famed warrior,
Looked at the Poykai with loving care,
Covered with Cintil creeper and lotus red,
Flowers in full bloom, spread over the Poykai.

Worships Arukatēvar

King Vāraṅkaṉ's eyes were filled,
With the delightful sight of that Poykai
Stepped he down slowly and washed his feet,
Feet as well as hands, gargled his mouth sweet,
Cleaned all his limbs, performed then
Prayers and rituals proper starting with cantiyāvantaṉam[37]
Thinking of Arukar, stood he worshipping His feet,
After worshipping the feet of Arukar ardently.

Varāṅkaṉ caught by a crocodile

Into the Poykai stepped the warrior renowned,
To drink water, and quench his thirst,
Water collected there was in a red lotus leaf,
Which he drained and while drinking,
A crocodile big in the Poykai huge,
Saw Varāṅkan and moved happily.
'A prey trapped' felt the crocodile and rushed panting
Grabbed his feet, the crocodile huge,
Varāṅkaṉ the king, with mental agony
Brooded over severely, the rightful king great.

36 Poykai – A natural pond. 37. Cantiyāvantaṉam – Prayer performed chanting mantras, thrice everyday.

வராங்கன் அருகதேவரை வணங்குதல்

அக்கிணற்றில் விழுந்தேன் அப்புலிவாயில் பிடித்தேன்
இக்குளத்தில் வந்தேன் முதலைவாயில் பட்டேன்
என்று நினைந்து ஆபத்துக் காக்கவென்று
அருகர் துணையில்லாமல் வேறொருவ ரில்லையென்று
அரணாவ தெல்லாம்வர[45] நேமிநாதர் பாதம்

சரணார விந்தம் சுவாமி துணையென்று
நினைந்து நமஸ்காரம் நேராகப் பண்ணியபின்

தருமதேவதை வராங்கனைக் காப்பாற்றுதல்

அம்மை தருமதேவதைக்கு ஆசனம் காண்பித்து
காண்பித்த போதே கனத்த மகாயெட்சியும்
யேதுக்கு ஆசனம் யிப்போகம் யேத்ததென்று

அவதி கியானத்தால் அம்பிகையும் அப்போது
சத்தம மாதலால் தானே மனமகிழ்ந்து
உத்தம புருசனுக்கு உபசர்க்கம் வந்ததென்று
சத்தமம் இரண்டுமவள் தன்மனதில் தானினைத்து
ஆபத்து தீர்க்கவே அதிகமுடன் நெருங்கியவள்

ஆசனத்தைத் தான்விட்டு அன்பாகத் தானெருங்கி
காக்கவே வேணுமென்று கடுகியே அவள்வந்து
அக்குளத்தில் தான்வந்து அதிகமுடன் முதலை
வாயை விடுவித்தாள் மகிழ்ச்சியுடன் அப்போது

வராங்கன் துன்பம் நீங்கி மகிழுதல்

விடுவித்த போதே விசாரங்கள் தான்நீங்கி

கரையேறி அப்போது கனக்க மனமகிழ்ந்து
அதுவுமென் புண்ணியப் பயனாகத் தானினைந்து
வராங்க மகாராசனும் வழிபார்த்து நிற்கையிலே
நெறியை யவர்பார்த்து நேராகப் போகையிலே

அருகர் — சமண சமயக் கடவுள். அரண் — காவல். சரணார விந்தம் — தாமரை போன்ற பாதங்கள். நேமிநாதர் — அருகக் கடவுள். நமஸ்காரம் — கீழே விழுந்து வணங்குதல். தரும தேவதை — கிருத யுகத்தில் நான்கு கால்களையும் திரேதாயுகத்தில் மூன்று கால்களையும், துவாபரயுகத்தில் இரண்டு கால்களையும், கலியுகத்தில் ஒரு காலையும் பூமியில் ஊன்றி நிற்பதாகக் கருதப்படும் அறக்கடவுள். ஆசனம் — பீட முதலிய தவிசு; இருக்கை. யெட்சி — தேவதை. இப்போகம் — இதே நிலையில் ஏத்ததென்று — போதுமென்று. அவதிகியானம் — ஞானதிருஷ்டி. அம்பிகை — தருமதேவதை. சத்தமம் — யாவரிலும் சிறந்தவன். உத்தமபுருசன் — நற்குணமுடையவன். உபசர்க்கம் — துன்பம். ஆசனம் — இருக்கை. கடுகி — விரைந்து. விசாரங்கள் — துன்பங்கள். நெறி — வழி.

Varāṅkaṉ worships Arukatēvar

'Fell into that well, got near the jaws of the tiger
Now came to this tank and caught by the crocodile,'
Thought Varāṅkaṉ; 'to save in danger
Nobody else is there except Arukar's help,
Nēminātar's feet is the protective fort entire,
I take refuge in His Lotus feet, so help me God!'
Prayed he thus and prostrated straight.

Tarumatēvatai saves Varāṅkaṉ

Showed the seat to the Tarumatēvatai,
On being shown it the divine angel great said
'Why the seat, this position will suffice'
By divine foresight, the goddess then,
Felt happy as he was nobler than all others
Realised that the good man had come to grief
Rating him doubly good in her mind
To relieve him of danger, came she close
Left her seat and kindly came near,
To save him sure, arrived she quick,
Came to that tank and released him
From the jaws of the crocodile, happily then,

Varāṅkaṉ relieved of distress feels happy

On being released Varāṅkaṉ left the tank,
Came ashore rejoicing greatly,
'It is the result of my earlier good deeds;' thought he
And stood there locating the direction proper,
While he walked straight thither.

மானிடப் பெண்ணாக அம்பிகை தோன்றுதல்

புண்ணிய யட்சிவந்து யிவன்புருஷார்த்தம் பார்க்கவென்று

பரிட்சையைப் பார்க்கவென்று பகவதியும் அம்பிகையும்
எப்படித் தோன்றினாள் யியலான ரூபமதாய்
வந்தாள் அழகாய் வரிசையுள்ள பேரழகாய்

அம்பிகையின் தோற்றப் பொலிவு

உருவு திருவழகும் உவமையுடன் போகாது
கொங்கை திருத்தி [46]குழல்கோதி ஒப்பமிட்டு

ஆறங்கத் தாழ்வடமும் அழகுமணி திகழும்
பாடகக் காலில் பெரும்சிலம்பு சோதியிட
இட்ட வளையல் யிசைந்துமிக [47]ஓசையிட
முத்து ரத்தினமாலைகளும் முலைமார்பில் தானசைய
ஆபரண மெல்லாம் அழகாகச் சோதியிட

நெற்றிக்கிச் சுட்டிகட்டி நீள்விழிக்கி மையெழுதி
இட்ட திலகம் யியலாகச் சோதியிட
வாலிபப் பிராயமதாய்ப் பன்னிரெண்டுக் குள்ளாக
யௌவன ரூபமாய் யெகலான பேரழகாய்
திருவழகு பொற்பணியும் சிந்தையீடப் போகாது

அன்ன நடையும்அவ ளழகான சிற்றிடையும்
மயில்போல் இருக்கிறதும் வர்ணமொழி வார்த்தைகளும்
குயில்போல் கொஞ்சுவதும் கோவைப்பழச் செவ்வாயும்
வெகுவான ரூபமதாய் விசயன்முன்னே வந்துநின்று
கூறுவா ளம்பிகையும் [48]குளிர்மரத்தின் கிளிபோலே

யட்சி — தேவதை. புருஷார்த்துவம் — ஆண்மை. பரிட்சை — ்சாதனை. பகவதி, அம்பிகை — தரும தேவதைகள். ரூபம் — அழகு. குழல் — கூந்தல். கோதி ஒப்பமிட்டு — கூந்தலை வாரி முடித்து. ஆறங்கத் தாழ்வடம் — ஆறு வரிசையில் அமைந்த கழுத்தணி. பாடகம் — காலணி. பரும் சிலம்பு — பெரிய சிலம்பு. சோதியிட — ஒளிவிட. வாலிபப் பிராயம் — இளவயது. யௌவனம் — அழகு, இளமை. பொற்பணி — பொன்னால் ஆன அணிகலன். சிந்தை — மனம். வர்ணமொழி — இனிய சொற்கள். விசயன் — வராங்கன். குளிர் — தங்குகை.

The angel appears in a woman's guise

The angel virtuous came there to test his mettle masculine,
To examine him arrived Pakavati and Ampikai[38]
Appeared she in a figure fine and human,
Came the beautiful one, in ravishing good looks,

The grandeur of Ampikai's appearance

Incomparable was the beauty of her form graceful,
Her breasts adorned, long hair combed and tied

Six-rowed chain low on the neck, beautiful stone-studded
Pāṭakam[39] on her feet and with a big anklet shining bright,
Bangles sported sounding in unison,
Necklaces of pearls and gems moving on her chest,
Jewels all beautifully luminous,
Banding the forehead and applying mascara to the eyes.
The tilak on forehead shining bright,
Quite young in years, under twelve
Youthful figure and great good looks.
Her beauty and ornaments gold beyond comprehension
Swan's gait and her graceful waist slim,
As a peacock is she and speaks sweetly,
Cooing like a Cuckoo, her lips red like kōvai fruits,
In such a form graceful did she stand before Varāṅkaṉ
Spoke she thus like a parrot resting on the tree.

38. Pakavati and Ampikai — different names of the goddess. 39. Pāṭakam — anklet.

வராங்கனைத் தருமதேவதை சோதித்தல்

பூமி பாலகனென்று புகழ்பெரிய இராசனுக்கு
கன்னியாய் நான்பிறந்து கல்யாணம் பண்ணுகைக்கு
மற்றொரு சத்திரியன் வந்தான் வலமாக
கல்யாணம் பண்ணிக் காட்சியுடன் போகையிலே
நடுவழி வேட்டுவர்கள் நலமாய் வளைத்தார்கள்

சேனைப் படைகளைத் திரளையாய்[49] முறித்தடித்து
ஓடி ஒளிப்பாரு முகந்து [50]படுப்பாரும்
இப்படிப் பட்ட யெதிரியம் மக்களிடத்தே
நானும் ஒருவசத்தால் நலமாய் [51]நான்வந்தேன்
வழிகாணா தோடி வனத்தில் திரிகையிலே

புண்ணியத்தால் உன்னைப் புகழ்ந்து கண்டேனிப்போது
கொண்டுபோய் ரட்சிப்பாய் கொற்ற புவியரசே
என்று பலவுஞ்சொல்லி யதக்கமுட னிருப்பார்

வராங்கன் மறுமொழி கூறல்

வராங்க மகாராசன் வண்மையாய்த் தான்கேட்டு
ஏதேது சொல்லி யெதிராக முன்னின்று

குலப்பெண்ணே தந்தைதாய் கூறுமுன்னே கொள்ளுவேன்
விலைப்பெண்ணே மற்றவர்போல் மேவா திருப்பதென்ன
இப்படிச் சொல்லி யிரக்கமில்லா தான்போக
உடன்பட லில்லாத உறுதியுள்ள பேரரசன்

பெண் தெய்வம் வராங்கனை அடைவதாக நடித்தல்

பின்னுமந்த தேவஸ்திரீ திறமாகக் கூறுவாள்
ஒருவரும் இல்லாமல் உன்மேல் மையல்கொண்டேன்
விட்டுப் பிரியேன்னான் விரகமுற்றேன் உன்மேலே
உன்னைப் பிரிந்தாலும் ஒருவரும் [52]கதியுமில்லை
மரண கதியொழிய மற்ற[53]கதி வேறில்லை
காமப் பரவசத்தால் கனத்த மையலாகி

சத்திரியன் — அரசன், வேட்டுவர்கள் — வழிப்பறி செய்வோர்கள். திரள் — கூட்டம். வனம் — ஊர் சூழ்சோலை, காடு. இரட்சித்தல் — காப்பாற்றுதல். கொற்றவன் — அரசன். குலப்பெண் — நற்குடியில் பிறந்தவள்: விலைப்பெண் — வேசை, விபச்சாரி. மேவல் — ஆசை. இரக்கம் — தயை, மன வருத்தம். தேவஸ்திரீ — தருமதேவதை, மையல் — காமமயக்கம், விரகம் — காதலர்க்குப் பிரிவால் உண்டாகும் வேதனை. கதி — புகழிடம். பரவசம் — மிகு களிப்பு. கனத்த — மிகுதியாக.

Varāṅkaṉ tested by Tarumatēvatai

To Pūmipālakaṉ a great king of renown
As a daughter I was born and to marry me,
Came forward one kshatriya[40]willing

Wedded we were and while wending in a procession,
Surrounded we were by dacoits on our way,
Defeated our army entire and shattered,
Some fled and hid themselves, others did lie low.
Amidst such foes and folk,
Some how I escaped and arrived safe indeed,
Wandering in the jungle unable to find my way proper,
Luckily did I meet you, worthy of praise
Take me and save, Oh, king of the earth
Thus and so forth said she and waited modestly.

Varāṅkaṉ's reply

Varāṅkaṉ the king, hearing attentively,
Standing before her and speaking in a range wide,
'Only a virtuous girl of good parentage shall I marry'
Oh! bitch, I am not like others to desire you,'
Thus spoke he curtly like one with no mercy,
Not agreeing to her request, the resolute monarch.

The angel pretends a hold on Varāṅkaṉ

Persisted still the divine woman strongly,
'Fallen in love with you alone and on nobody else,
I won't leave you, I suffer from pangs of love on you,
None to support me if you leave me,
Die I must with nothing else as alternative,
In lust overwhelming and love deep,

40. Kshatriya — a king of the warrior race.

தேக அவத்தையினால் சென்மம் விடுவேனென்று
பிராண பிரயோகங்கள் பிரபலமாய்த் தான்காட்ட
அப்போ வராங்கனும் அங்கேது வார்த்தைசொல்வான்.

வராங்கனின் மறுப்புரைகள்

நீர்சேரா விட்டால்இப்போ [54]என்பிராணன் யிருக்குமென்று
உடன்படாதே நடந்தார் உறுதியுள்ள பேரரசன்

விரதம் அழிதவர்க்கு விருதாவில் சேதமுண்டு
புருசா காரமப்போ புண்ணியம் ஈனமாய்
சம்மிய தரிசனமும் சாதியுள்ள தன்குலமும்
நாலு கதியும் நல்ல சரித்திரமும்
எல்லாம் கெடுமென்று எதிர்த்துமுகம் பாராமல்

சொல்லி யெடுத்துரைத்து துருசாய் யவர்நடந்தார்

தரும தேவதை காட்சி கொடுத்தல்

காட்டுயட்சி தேவதையும் கனக்க மனமகிழ்ந்து
தன்திவ்விய ரூபத்தை தரித்து வடிவெடுத்து
வராங்க மகாராசன் முன்னேவந்து தான்சொல்வாள்

தரும தேவதை வராங்கனிடம் சொல்லுவது

மகாபுருசர் உந்தனுக்கு மன்மத னெந்தனுக்கு

தெய்வமும் தன்குருவும் சேர்ந்ததொரு தேவதையும்
எல்லாமொன் றறியாதே யெடுத்து உபசர்க்கம்
நீக்கவே வந்தேன்னான் நின்னுடைய தன்மனதை
மனது திடம்பார்க்க வந்தெனது ரூபமதாய்
இருகுண சரித்திரத்தை விளங்கபரி சிப்போமென்று

உன்மனதைச் சோதிக்க உண்மையாய் னான்வந்தேன்
வந்துசொன்ன அபராதம் மனதிலே பொறுத்தருள்வீர்
என்று சொல்லியட்சி யின்பமுடன் தான்போக
அந்தமகா யட்சியும் அத்திராசிய மானபிறகு
வேங்க மகாராசன் மகிழ்ச்சியுடன் தான்நடந்தார்

தேக அவத்தை — விரகதாபம். சென்மம் விடுவேன் — உயிர் விடுவேன். பிராணன் — உயிர். பிரயோகம் — செலுத்துகை. பிரபலமாய் — பலர் அறியும்படி. உடன்படாது — இசையாது. விருதா — வீணாய். சேதம் — நட்டம். புருஷாகாரம் — ஆண்மை. ஈனம் — இழிவு, இழுக்கு. சம்மிய தரிசனமும் — அருக தரிசனம், சமணத் துறவி தரிசனம். நாலுகதி — நரககதி, விலங்குகதி, மக்கள்கதி, தேவகதி. துருசாய் — விரைவாய், யட்சி — தரும தேவதை. கனக்க — மிகுதியாக. ரூபம் — ஒளியாகிய புலன்; அழகு. மகாபுருஷன் — உத்தமபுருசன். மன்மதன் — காமன். அபராதம் — குற்றம். அத்திராசியம் — மறைதல்.

My body in pangs lustful, shall I end my life,'
Spoke she thus and the migration of life did she demonstrate publicly
Then Varāṅkaṉ uttered thereby.

Varāṅkaṉ's reply

'Only if you do not couple with me, shall I live'
Thus disagreeing walked away the resolute king great,
'To those who breached vows, damage unnecessary there will be
Mettle masculine and result of good deeds will weaken,
Glimpses of Arukar and saints, one's own dynasty high,
The four successive stages of birth, and a good account in history,
All these will be ruined,' said he without looking at her,
Having admonished stepped he away quite quickly.

Tarumatēvatai appears before him

The angel wild and divine felt so happy,
Her own fine form and shape did she take and appear
Before Varāṅkaṉ turned up thus and said.

Tarumatēvatai speaks to Varāṅkaṉ

'You deem thyself an ideal man, to me Maṉmataṉ[41] thou art
God and mentor coupled in an angel
All these you do not know and to relieve you of suffering,
Came I thither to test your mettle,
To probe your mind, that shape did I take
To examine both sides of your life history clear,
Truly did I come only to test your mind
Pardon me with all thy heart for this misdemeanour mine;'
Observed the angel great and vanished,
Walked now the tiger-like king in utter delight.

41. Maṉmataṉ — Handsome god of love.

வேடர்கள் வராங்கனைக் காணுதல்

சுதக்யான் அப்பொழுதே தோன்றிய காட்டிலே
சாகமூல பழங்களைத் தாமவரும் பட்சித்து
கிருஷ்ணயான் அப்பொழுது சேர்ந்த அடவியிலே
நீர்கண்ட யிடத்திலே நிகர்கிருஷ்ண தானாறி
ஸ்ரீமான் அப்பொழுது சேர்ந்த அடவியிலே

சொல்லா நின்றகாலத்தில் திரளாய் மகாவேடர்
விறல்வேடர் கூடி வீராய் வருகையிலே
காடும் செடிகளும் கனக்கவே தான்திரிந்து
காடு மலைகளெங்கும் கனத்த மிருகங்கள்
தேடி வருகையிலே சேருமகா விந்தத்தில்

வராங்க மகாராசன் மகிழ்ச்சியுடன் தான்நடந்தார்

வேடர் தலைவனிடம் வராங்கனைக் கூட்டிச் செல்லுதல்

கண்ட பொழுதே கண்கள்தனை யுணர்ந்தே
நவநிதி கண்டோன் தரித்திரன்போல் சந்தோசம்
நாமாகத் தேடிவர நற்பொருளைக் கண்டோமென்று
அரசனுக்குக் காட்டி அதிக விடுக்கையிலே

வெகுமானம் வாங்குவோம் என்று மனமகிழ்ந்து
வராங்க மகாராசனை வன்மையுடன் கொண்டுசெல்ல.
ஏதேது சிந்தித்தான் இருதயத்தில் பேரரசன்
முன்செய்த தீவினைகள் விட்டும் அநுபவிப்ப
வேண்டுமென்று யெண்ணி யெண்ணித் துயரமதாய்

கட்டிக்கொண்டு வந்தாப்போல் கனக்கமுடன் வினையை
பின்புவந்து அநுபவிக்கப் பிசக்கில்லை தானினைந்து
அப்போது வேடர் அன்(பு)டனே கொண்டுசென்று
வேட்டரசன் தானிருக்கும் வீறுமிடங் குறுகி
வராங்க மகாராசனை வேட்டரசன் [55](முன்)விட்டார்

சுதக்கன் — ஒரு இராவண வீரன். சாகம் — காய். மூலம் — கிழங்கு. பட்சித்து — உண்டு. அடவி — காடு. சீமான் — வராங்கன். திரள் — கூட்டம். விறல் — கோபத்தோடு எதிர்த்துச் செல்லுதல். வீராய் — சிறிது சிறிதாக. கனக்க — மிகுதியாக. மகாவிந்தம் — பெரியமலை. நவநிதி — பதுமம், மாபதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், நந்தம், நீலம் கர்வம் ஆகிய ஒன்பது வகைப்பட்ட குபேரநிதி. தரித்திரன் — வறியவன். விடுகை — சொல்லுதல். வெகுமானம் — பெருமதிப்பு; வெகு மதி. வன்மை — கோபம். இருதயம் — உள்ளம். தீவினைகள் — முன்செய்த பாவங்கள். வீறு மிடம் — பெருமை பொருந்திய இடம். குறுகி — அமர்ந்து.

The hunters meeting Varāṅkaṉ

In the forest where the Cutakkaṉ[42] appeared,
Eating vegetables, tubers and fruits,
In the jungle where Krishṇayāṉ[43] reached
Rested wherever he saw water, the Krishṇa like one
In the woods where Varāṅkaṉ moved then,
The hunters tough in a gang,
Angry hunters moving in groups small,
Roaming amidst the woods and plants plenty,
Jungle, mountains and beasts wild in good number,
While moving in search, a huge mountain reached
Varāṅkaṉ thus walked happily.

Leading Varāṅkaṉ to the chief of hunters

On seeing him the hunters realised what they have seen,
Feeling like a poor man who has seen the fabled Navaniti[44]
'A treasure have we found on our own' thought they gladly,
'To the king we shall present him with proper speech,
And receive a reward' felt they happily,
Led Varāṅkaṉ roughly by force
Reflected he severely at heart, the king great,
'Suffer one should for sins committed in births early,

Feeling remorseful at such a thought,
'The result of one's action is like luggage packed and brought,
One just cannot help it,' he mused
Then the hunters led him gently,
Reached the proud venue of their king,
Brought king Varāṅkaṉ before the hunters' chief.

42. Cutakkaṉ — Rāvana warrior. 43. Krishṇayāṉ — Warrior like lord Krishna. 44. Navaniti — nine kinds of fabulous wealth.

வராங்கனைப் பிடாரிக்குப் பலியிடுமாறு தலைவன் கூறுதல்

வேட்டரசன் பார்த்து மெத்த மகிழ்ச்சியுடன்
மெத்த மனமகிழ்ந்து வீரியமாய்க் கூறுவான்
உ(ரு)ப்பில் குறைவில்லை உருவினில் தாழ்வில்லை
சதுர்த்தசி நாளைக்குச் சாதன பிடாரிக்கு
பலிகுடுப் போமென்று பெருக்க மனமகிழ்ந்து

காவலிலே வைத்துக் கனக்க மனமகிழ்ந்து
காத்துவந்து ஒப்புங்கள் கருதியவன் சொல்ல
வேட்டரசன் சொல்ல வேடர் மனமகிழ்ந்து

வராங்கனைச் சிறைவைத்தல்

அப்படியே யாகுமென்று அன்புடனே கொண்டுசென்று
எலும்புகள் தூண்நிறுத்தி யிரைபசுந்தோல் மேல்மூடி

துர்க்கந்தமாய்ப் புழுக்கள் சொரியப் பெரும்துக்கமாய்
இப்படி யாக யிருக்கின்ற வேளையிலே
வராங்க மகாராசனை மதிமயக்கி போட்டடைத்தார்
காவல்பேர் சுற்றும் கனக்கவே தாமிருந்தார்

சிறையில் வதைபடும் வராங்கன் அருகரைத் தியானித்தல்

வராங்க மகாராசன் மதிமயங்கி துக்கமாய்

புழுக்கள் சொரிய [56]பொன்னூன்திரு மேனியெல்லாம்
துர்க்கந்தமாக துலங்கும் திருமேனி யெல்லாம்
நாற்ற மெடுத்து நரகமுறைப் பதுபோல்
அப்பவே துக்கமாய் அங்கேது சிந்திப்பான்
சுகதுக்கம் இரண்டுக்கும் சொல்லிய ஆத்மனுக்கும்

வீரியம் — வலிமை. சதுர்த்தசி — பதினான்கர்ந்திதி. சாதனபிடாரி — சப்தமாதர்களுள் ஒருவளான காளி. பெருக்க — மிகுதியாக. கனக்க — மிகுதியாக, ஒப்புங்கள் — ஒப்படையுங்கள். கருதுதல் — எண்ணுதல். வேட்டரசன் — வேடர் தலைவன், வேடர் — வேட்டைத் தொழில் செய்பவர். நிறுத்தி — படைத்தல். துர்க்கந்தம் — கெட்ட நாற்றம். சொரிய — உதிர. துக்கம் — துன்பம், மேனி — உடம்பு. துலங்கும் — தொங்கி அசையும். சுகதுக்கம் — இன்பதுன்பம், ஆத்மன் — ஆத்மாவை உடைய மனிதன்.

The hunters' chief orders the sacrifice of Varāṅkaṉ

Seeing Varāṅkaṉ the hunter king was ecstatic,
Gladly and strongly did he utter,
'Not handicapped in limb, not flawed in frame or figure
On the day of caturtaci auspicious, to Cātaṉapiṭāri[45]
Let us sacrifice him' said he so happily,
'Place him in custody with great rejoice,
Guard him carefully and handover' said he thoughtfully.
Hearing the king, the hunters quite joyously.

Varāṅkaṉ imprisoned

Agreed to obey and led Varāṅkaṉ
Supported by a column of bones and covered with cowhide,
In a cell infested with worms smelling foul,
Varāṅkaṉ made unconscious and imprisoned there,
In dire distress surrounded by guards in a horde.

The suffering Varāṅkaṉ prays to Arukar

Noble Varāṅkaṉ in a daze and grief-stricken
Showering worms polluting his body golden,
Causing a body odour foul all over,
Stinking so bad as though hellish,
Felt he sad and thought then,
'For joy and sorrow both to a man with soul,

45. Cātanapiṭāri — Goddess Kali, one of the seven divine women.

ஆத்மா ஒருவனென்று ஆரும் சகாயமில்லை
ஆரும் சகாயமில்லை அநுபவிப்பார் யாருமில்லை
ஆத்மா ஒருவனென்று அதிசயமாய்ப் பாவித்து
ஏகத்தவம் பாவித்து யேகமனதாய் யிருந்தார்

வேடராசன் மகனை அரவம் தீண்டுதல்

அப்பொழுது சென்று அதிகமொரு வேளையிலே
வேட்டரசன் மகன் வேந்தன் புதல்வனை
வேட்டைக்குப் போன விடத்தில் விசம்தீண்டி
[57]நர்சர்ப்பம் தீண்டி நலமுறையாய்த் தான்போக
செத்தவனைப் போலே சுமந்துசில வேடர்வந்து
மெத்த அலறி வேட்டரசன் முன்னேவைத்தார்

வராங்கன் குணமாக்குவதாகக் கூறுதல்

அப்போது வேட்டரசன் அதிக துயரமுடன்
மெத்த அலறி வேட்டரசன் கூறுவான்
விசம்தீர்க்க வந்தவர் வேட்டரசன் தன்குலத்தார்
அப்போ வராங்கனும் அந்தமொழி தான்கேட்டு
நான்விசம் தீர்ப்பேனென்று நலமுடனே தான்சொல்ல

அப்போது வேடர் அவர்வார்த்தை தான்கேட்டு
சிறையை விடுவித்தார் சிலைவேடர் தான்கூட

வேடராசன் மகன் உயிர்பெறுதல்

விடுவித்த போதே விசயன் வராங்கனும்
தடாகத்துள் தானிறங்கி ஸ்நானபானம் பண்ணி
சாத்திரப் படிக்கி சகலசுப விதியினால்

செத்துக் கிடந்தவனைச் சேர அவன்வந்து
ஓம் நமோ ஹ்லீம் ஹரீமென்று நம்பியவர் தீண்டலுமே
நின்று விசம்நீக்கி நித்திரைபோல் தான்தெளிந்து
எழுந்திருக்கக் கண்டு யியலான வேட்டரசன்

ஆத்மா — உயிர், சகாயம் — துணை. பாவித்து — தியானித்து. ஏகத்தவம் — ஒரே மனதாய் தியானித்தல். யேகமனதாய் — ஒரே மனதாய், வேட்டரசர் — வேடர்களின் அரசர். வேந்தன் — அரசன், புதல்வன் — மகன். நார்ச்சற்பம் — நாகப்பாம்பு, துயரமுடன் — துன்பத்துடன். அலறீ — திரண்ட ஓசை. சிலைவேடர் — வில்லை உடைய வேடர். தட்டாகம் — குளம். ஸ்நானபானம் — குளித்து மந்திரம் ஓதி நீர் அருந்துதல். சாத்திரம் — வேதாந்தம், தர்க்கம் முதலிய நூல். விதி — தீர்ப்பு. நித்திரை — தூக்கம். தெளிந்து — தெளிவுபெற்று.

No human soul can come to help
No succour and nobody else to share the experience,
The human soul is alone,' reflected he with amazement
Adopted he concentration and singleness.

A snake bites the son of the hunters' chief

In such a situation tense,
The son of the hunter chief, the king's progeny,
While hunting, bitten was he by a snake venomous,
Bitten by a cobra after which incident,
Swooned he like one dead and carried by hunters some,
They screamed aloud and placed before their king.

Varāṅkaṉ offers to cure the king's son

Then the king of hunters in anguish great,
Wailing loudly the king did say
Even as the king's own racial kin arrived to find a cure for poison,
Then Varāṅkaṉ on listening to what they have spoken,
'Antidote to the poison, shall I provide' said he kindly,
The nunters hearing the words of Varāṅkaṉ
From custody released him, the hunters wielding bows.

The son of the hunter chief saved

On being set free the victorious Varāṅkaṉ
Stepped into a pond, bathed and drank the water uttering incantations
According to scriptures and edicts for welfare universal,
Neared the man who lay collapsed,
'Ōm Namō Klīm, Hrīm;' he chanted and as he touched,
Relieved of venom did the chief's son rise as from slumber
On seeing him thus rise, the king of the hunters.

வராங்கனுக்கு குடம் பொன்கொடுத்தல்

கண்டு மணமகிழ்ந்து கனக்கபரி பூரணமாய்
விசம்மீட்டு நின்ற வேந்தன் வராங்கனுக்கு
குடம்பொன் கொடுப்பதென்று கூறுவான் வேட்டரசன்

பரிசைத் தவிர்த்து வழிதுணைக்கு ஆட்கேட்டல்

வராங்க மகாராசன் வேண்டா மதுவென்றான்
அப்போது வேட்டரசன் அதிக பிரியமுடன்
பின்என்ன வேணுமென்று பிரபலமாய்க் கூறுவான்
அப்போ(து) வராங்கனும் அன்பாய்க் கூறுவான்
நாட்டுக்கு இப்போது நலமாகவே வந்து
நெறியறிவா னொருவன் நேராகக் கூட்டுமென்று
அப்போது வேட்டரசன் அழைத்ததொரு வேடனை
விசம்மீட்டு வந்த வேந்தன் வராங்கனுக்கு
நெறிகாட்டி வாவென்று நேராகக் கூறுவான்
நல்லதென்று வேடனும் நலமாய் வராங்கனும்
இருவரும் அப்போது யின்பமுடன் தான்போக

வேடன் வராங்கனுக்கு வழி கூறுதல்

சிறிதிடம் போனபின்பு சென்று வராங்கனும்
தன்நாட்டு திசைநோக்கி தானே அவர்நடந்து
லலித புரத்துக்கு லருவாய் வழி[58]கேட்டு
வேடன் [59]வழிகாட்டி வீரியமாய்க் கூறுவான்

வேடன் விடை பெறுதல்

இருக்கு மிடத்துக்கு யியலாக நான்செல்ல
போகவிடை தாருமென்றான் புலைவேடன் அப்போது
வேடனை அப்போது வேந்தன் வராங்கனும்
போக அனுப்பிவிட்டு புகழ்வீரன் அப்போது

கனக்க— மிகுதியாக. பரிபூரணம்—நிறைவு. பிரபலம்—புகழ். நெறி—வழி. வேட்டரசன்—வேடர்களின் தலைவன். நெறி—வழி. சிறுதிடம்—கொஞ்சதூரம். இலகுவாய்—விளக்கமாக. வீரியம்—வலிமை. புலைவேடர்—மாமிசம் சாப்பிடும் வேடர்.

Varāṅkaṉ rewarded with a pot of gold

Joyous at heart, 'Quite perfectly
Has he removed poison, the king Varāṅkaṉ,
Let him be given a pot of gold' proclaimed the hunter king.

Varāṅkaṉ declines the reward and asks for a guide

Varāṅkaṉ the king declined the reward,

Kindly the hunters' chief queried 'What else do you require?'
Replied Varāṅkaṉ then politely,
'To go to my country safely,
Provide me a guide who knows the way proper'
Summoning a hunter, the chief then said,
'Go along with Varāṅkaṉ who has ridden poison,
Show him the way and then return,
Agreed the hunter and with Varāṅkaṉ amiable
Set out both in happy company.

The huner guiding Varāṅkaṉ

After walking a while Varāṅkaṉ
In the direction of his country, walked
For the way short to Lalitapuram did he enquire,
The hunter showed, the way promptly indeed.

The hunter bids farewell to Varāṅkaṉ

'For me to return to my place duly,
Give me leave' requested the meat-eating hunter,
King Varāṅkaṉ the famed warrior
He did permit the hunter to return.

வராஙகன் தன் நாட்டை நோக்கிச் செல்லுதல்

வேங்க மகாராசனும் வாரான் தனிவழியே
தனிவழியே போகையிலே தக்க புகழ்வீரன்
அப்போது ஆதித்யனும் அஸ்தமன மானான்

வராங்கன் வணிகர்களை பார்த்தல்

அவ்விடத்திலே யுறங்கி[60] அதிகமுள்ள வேளையிலே
விடியுற நேரத்திலே வேந்தன் [61]வழித்தெரிந்து
மார்க்கமாய் போகயிலே வராங்க மகாராசனும்
அப்பால் லலிதபுரம் அதிகமுள்ள வர்த்தகர்கள்
சாத்துக்கள் விட்டுச் சதிராய் யவரிருந்தார்
சாத்துக்கு காவல் பேர்சூழ அவர்வந்து
எச்சரிக்கை யாக யியலா(க) இருக்கையிலே
வேந்தன் வராங்கனும் விடியுற நேரத்திலே

வராங்கனை கள்வர் என்று பிடித்தல்

தனிவழியே செல்ல சாத்துக்கள் தான்கண்டு
மெத்த மனமகிழ்ந்து வீரிய சந்தோசமதாய்
அதிக பிரியமுடன் அன்பாய் மனமகிழ்ந்து
சாத்துவார் அண்டையிலே தனியே யவர்செல்ல
சாத்துவர்கள் காவலர்கள் தனித்தனியாய் ஓடிவந்து
வேந்தன் வராங்கனண்டை வீரியமாய் வந்துநின்று
களவுக்கு வந்தானென்று கனத்தவெகு கோபமுடன்
வளைத்து பிடித்துமிவர் வராங்கமகா ராசனைத்தான்

தலைவனிடம் கொண்டு செல்லுதல்

மடல் விரியக்கட்டி மனமகிழ்ந்து கொண்டுசென்று
சாகர விருத்தியண்டே சாத்துவர்கள் அவர்முன்னே
கொண்டு போய்விட்டார்கள் கோமான் வராங்கனை

வேங்க மகாராசன் — வராங்க மகாராசன். ஆதித்யன் — சூரியன். அஸ்தமனம் — மறைதல். மார்க்கம் — வழி. வர்த்தகர்கள் — வியாபாரிகள். சாத்து — வாணிகக் கூட்டம். சதிரம் — சதுரம். வீரியம் — அதிகம் அண்டை — பக்கத்தில். களவு — திருட்டு. கனத்த — அதிகமான. மடல் — பனை முதலியவற்றின் ஓடு. சாகரவிருத்தி — வணிகர்களின் தலைவர்.

Varāṅkaṉ wends his way towards his own country

Walked alone, Varāṅkaṉ the king,
While the king was walking lonely,
The sun set then.

Varāṅkaṉ meets the merchants

Rested he there and slept a good while
Woke up the king at daybreak,
Locating the way proper, walked Varāṅkaṉ
While walking thus, traders in good number from Lalitapuram,
The group of merchants forming a square,
With guards for security surrounding them
While they remained cautiously in order,
King Varāṅkaṉ at that dawn,

Varāṅkaṉ mistaken for a dacoit

Walking lonely did he meet the traders group,
Feeling quite happy and jubilant,
Kindly and happily he approached,
Came he close and alone towards the Cāttuvārs[46]
Traders and guards rushed separately
Near king Varāṅkaṉ came and stood stoutly

Hither has he come to steal thought they irefully,
Surrounded and caught Varāṅkaṉ noble.

Varāṅkaṉ taken to the chief of traders.

Tied him with palm frond stretched and led him vigorously
To their chief the traders brought
Varāṅkaṉ the king to face the chief.

---

46. Cāttuvārs — traders.

தலைவன் வராங்கனை விடுவித்தல்

சாகர விருத்தியும் தடைவிட்டுப் போகாநின்று
வராங்க மகாராசனை மனமகிழ்ந்து தான்கேட்டு

அழகும் யிளமையும் ஆண்மையுள்ள மன்னனென்று
உருவும் திருவழகும் உயர்ந்ததொரு பேரழகும்
திருவழகைக் கண்டுமவர் செல்வன் வராங்கனைத்தான்
(இ)ராசா வடிவுகளை லட்சணங்கள் தான்பார்த்து
வராங்கனைப் பார்த்துமப்போ வணிகன் மனமகிழ்ந்து

கட்டை அவிழ்த்துவிட்டார் கனமான பேர்வணிகர்

தலைவன் வராங்கனிடம் வினவுதல்

கேவல புருசனல்ல கெசசிம்ம மேநினைந்து
சாகர விருத்தியும் தன்அருகில் கொண்டுவந்து
நீரெங்கே யிருந்து நிகராய் வருகின்றீர்

தலைவனிடம் வராங்கன் தன் நிலையைக் கூறுதல்

வேந்தன் வராங்கன் வீறுடனே தான்சொல்வான்

தேசாந் தரியென்று சீருடனே தான்கூறி
போக லலிதபுரம் போகிறேன் நானுமிப்போ
நெறிதிகைத்து வந்தேன்நான் நேராக யிப்பொழுது
சாத்துக்களை நான்கண்டு தானே மனமகிழ்ந்து
துணையகப் பட்டதென்று துயர்நீங்கி நான்வந்தேன்

வந்ததைக் கண்டுமிப்போ வளைந்திருக்கும் காவலர்கள்
கன்னமிட வந்தானென்று காவலர்கள் ஓடிவந்து
வளைத்துப் பிடித்துயென்னை வலிமையுடன் கொண்டுவந்தார்
என்று வராங்கனும் யியலாகத் தானுரைக்க

லட்சணங்கள் — அரசன் எப்படி இருக்க வேண்டும் என்ற விதிமுறைகள். கேவலபுருசனல்ல — கேவலமான மனிதரல்ல. கெசம் — யானை. சிம்மம் — சிங்கம். கெசசிம்மம் — யானையும் சிங்கமும் சேர்ந்த உருவமான யாளி. வீறுதல் — மேம்படுதல். வெற்றி. தேசாந்தரி — அயல் நாட்டான் சீருடன் — சிறப்புடன். நெறி — வழி, சாத்துக்கள் — வாணிகக் கூட்டம், வியாபாரிகள். துயர் — துன்பம். வளைந்திருக்கும் — சுற்றி வட்டமிட்டிருக்கும். கன்னமிடுதல் — கொள்ளையடித்தல்.

The chief of traders releases Varāṅkaṉ

The chief of traders without any hitch,
Enquired Varāṅkaṉ noble ever so, nicely,
Noted him to be a king handsome, young and virile,
Figure so fine and good looks par excellence,
Seeing such form graceful in Varāṅkaṉ
Looking at the royal person and the features thereof
Untied Varāṅkaṉ, willingly the chief.

The chief enquires Varāṅkaṉ

Not a lowly man, but a hybrid of elephant and lion,
Thought the chief and brought Varāṅkaṉ near,
'Where do you come from?' queried the chief.

Varāṅkaṉ informs the chief of his plight

Replied king Varāṅkaṉ bravely thus
'A foreign traveller am I' said he gently,
'Bound to Lalitapuram my destination present,
Missed my way and gone astray here and now
Seeing the traders have I rejoiced much,
'Found good company and relieved of distress' thought I
But the guards chased me and surrounded,
Mistaking me for a burglar and brought here'
Thus spoke Varāṅkaṉ on his plight real.

வராங்கனின் மதிநுட்பத்தை போற்றுதல்

சாகர விருத்தியென்னும் தனவைசியன் தான்கேட்டு
சாமானிய புருசனல்லான் தக்கா னொருவனென்று
எல்லா முரைத்துமிப்போ யின்பமுடன் கொண்டிருந்தார்
ஆங்கவர் புத்திகளும் அதிகமுள்ள வீரியமும்
சத்தியமும் தயவும் சாத்துவர்கள் தான்கண்டு
அய்யன் வசனங்கள் அன்பாகத் தான்சொல்லி
கொண்டாடி தாங்கள் தோமான் வராங்கனை
இப்படி யாக யிருக்குமந்த வேளையிலே

வியாபாரிகளின் பொருள்களை வேடர்கள் கவர்தல்

அக்காட்டில் விழித்திருக்கும் அதிகமுள்ள வீரியர்கள்
வேட ரிரண்டுபேர்கள் விளங்கிவரும் கானகத்தில்
காளமகா காளனென்று கனத்தவர்கள் வேட்டரசன்
[62]வெகுநேர ராத்திரியில் வட்டுதனை சுத்திக்கொள்வார்
வேடர் படையெழுந்து மேல்விழுந்து தான்வரவே
சாத்து படையெல்லாம் தானே முறிந்தோட
வேட்டரசர் தாங்கள்வந்து வீரியமாய் சூழ்ந்துகொண்டார்
சாத்துக்கள் எல்லாம் சரியாக சூரர்கொள்ள

வராங்கன் வேடர்கள் மேல் போர் புரிய ஆயத்தமாதல்

வேந்தன் வராங்கனும் வீரியனும் தான்பார்த்து
கையில்வா ளில்லையென்று கனத்த துயரமதாய்
சத்திய மகாராசன் சாத்துவர்கள் தான்கூற
சாத்துவர்கள் அப்போது தயங்கியவர் வாள்[63]கொடுக்க
வந்த வராங்கனைத்தான் மெத்த புகழ்ந்துகொண்டு
(இ)ரட்சித்துக் கொள்ளுமென்றான் ராசமுன்னே வர்த்தகர்கள்

சாதரவிருத்தி — வாணிகக் கூட்டத்தாரின் தலைவன். தனவைசியன் — தனவைசியர், பூவைசியர், கோவைசியர் என்ற முப்பிரிவிலுள்ள வணிக சாதியான். சாமானிய புருசனல்லன் — சாதாரண சக்தியுள்ள மனிதனல்லன், தன் சாதியில் மட்டமானவன் அல்லன். தக்கார் — மேன்மக்கள், புத்தி — அறிவு, வீரியம் — வீரம். வீரியர்கள் — வலிமையானவர்கள், முரட்டு குணமுள்ளவர்கள். கானகம் — காடு. கனத்தவர்கள் — வலிமையுள்ள பருத்த தேகத்தை உடையவர்கள். வேட்டரசன் — வேடர்களின் தலைவன். வட்டு — சிறுதுணி. கனத்துயரம் — பெருங்கவலை. சாத்துக்கள் — வியாபாரிகள். இரட்சித்தல் — காப்பாற்றுதல், வர்த்தகர்கள் — வியாபாரிகள், வணிகர்கள்.

Varāṅkaṉ's resourcefulness praised

Listening said the traders' chief, merchant prosperous
'No ordinary mortal, this man, quite a high born one,
His mental resources and bravery great,
Truth and mercy all the traders noted
Spoke kindly, words of respect due to a leader,
Praised Varāṅkaṉ noble in terms proper,
In such a situation,

Traders' belongings robbed by hunters

In that jungle, wakeful were some strong men,
A pair of hunters prominent in that forest,
Stout Kāḷaṉ stocky quite and the chief of hunters too
Late at night sporting a piece of cloth scant,
Pounced on the traders, the hunder gang charged,
All the traders groups fleeing scattered,
Tightly the hunters surrounded however,
Traders all remained panic-stricken.

Varāṅkaṉ prepares to fight against the hunters

Varāṅkaṉ the brave seeing the situation,
Feeling very sad that he has no sword handy,
Telling the traders so, the great man of truth,
Traders reluctant giving him a sword
Liberally they praised Varāṅkaṉ and
Prayed him to protect, the traders in the king's presence.

வராங்கன் வேடர்கள் மேல் போர்தொடுத்தல்

கேட்டு வராங்கராசன் கீர்த்தியுடன் வாள்பிடித்து
சுற்றுமுற்றும் சூழ்ந்துகொண்டார் [64]சூரரந்த வேடர்கள்
அம்பு மாரியாகவே அதிரவே தான்பொழிய
வேந்தன் வராங்கராசன் வேடர் விடுங்கணையைத்

தன்னிலங்கு வாளாலே சதிரா(ய்) விலக்கிநின்று
வாள்பிடித்த வேடர்க்கு வந்தமிது தான்போலே
வாட்கள் வளைத்து வள்ளொளிபோல் தான்சூழ
சிங்கம்போல் தான்சீறிச் சிதறியவன் வாளாலே

வேடர்கள் படை சிதறி ஓடுதல்

கண்டு மவர்கள் கனக்க மிகநடுங்கி

கானகத்து வேட்டுவர்கள் கஷ்ட்டத்தில் பட்டாப்போல்
கண்டவர்கள் எல்லோரும் கண்டு மிகஓடி
காற்றாய்ப் பறந்தார்கள் கானகத்து வேடரெல்லாம்

காளனை வதை செய்தல்

கானகத்தில் வாழுமந்த காளனெனும் பெருவேடன்
காளனெனும் வேடன் கதிர்வாள் மழைபொழிய

அப்போ(து) வராங்கனும் அதிகவெகு கோபமதாய்
வேடன் விடுங்கணையை விலக்கியந்த வாளாலே
வாளால் விலக்கியவர் வதைசெய்தான் காளனையும்

வேடராசன் வராங்கனைக் கொல்ல சபதம் செய்தல்

காளனை வதைசெய்து கனக்க மனமகிழ்ந்து
சிங்க நாதங்கள்மிக [65]சென்றுதான் தொனிப்படவே
[66]கேட்டுமந்த வேட்டரசன் கிடுகிடென்று பல்கடித்து

கீர்த்தியுடன் — புகழுடன். விலக்கு — வேண்டாத ஒன்றை ஒதுக்குகை. கணை — அம்பு. மாரி — மழை. கதிர்த்தல் — வளமை பெறுதல். வள்ளொளி — வெண்மையான ஒளி. கனக்க — அதிகமாக. கானகம் — காடு. காளன் — வேடர் தலைவர்களில் ஒருவன். கதிர்வாள் — ஒளிபொருந்திய வாள். கணை — அம்பு. விலக்கி — ஒதுக்கி. வதை — கொலை. கனக்க — அதிகமாக. சிங்கநாதம் — போரில் வீரர் செய்யும் கர்ச்சனை. தொனி — ஒலி.

Varāṅkaṉ launches his attack on the hunters

Hearing their plea king Varāṅkaṉ did wield the sword dexterously,
The surrounding hunters on all sides,
Did they shower arrows thunderous,
King Varāṅkaṉ amidst the missiles of hunters
Tackled them cleverly, cleared with his sword,
Like a target to the hunters sporting swords,
Was he cordoned by swords as if by a circle of light,
Charged he like a lion ferocious scattering with his sword.

The hunters' gang flees helter skelter

Seeing Varāṅkaṉ thus, did they tremble much
The hunters of the jungle as in trouble deep,
Fled so fast, all those who saw him
Darted like wind, the hunters of that forest.

Kāḷaṉ killed

Kāḷaṉ the hunter great a resident of the jungle,
Kāḷaṉ the hunter, his shiny sword showering blows,
With great ire, Varāṅkaṉ then,
Brushing aside the hunter's arrows with his sword,
With his sword did he kill Kāḷaṉ.

The chief of hunters swears to kill Varāṅkaṉ

Killed he Kāḷaṉ and felt so happy,
Roaring like lions, sound so loud
Hearing which the hunters' chief gnashed his teeth,

பெரிய மகாகாளன் பெருக்க வெகுகோபமுடன்
என்னுயி ரோடொத்த யியலான தம்பியைத்தான்
காளனைக் கொன்றவனை கடுகியே வாளாலே
வாளுக்கிறை யிடுவேன்(என்று) வந்தான் மகாகாளன்
வந்தே(ன்) வந்தேனென்று வராங்கனை சீறினான்

வராங்கன் வேடராசனைக் கொல்லுதல்

மகாகாளனைக் கொன்றுநீ கடுகிநீ போவாயோ
போவாயோ நீயங்கே போகவிடேன் நானென்றான்
என்னுயிர்க் குற்றவனாய் உன்னுயிரை வாங்கவந்தேன்
வந்தமகா காளனும் வராங்க மகாராசன்மேல்
அம்பு மாரிகள்[67]போல் அதுவெல்லாம் தட்டிவிட்டு
சிங்கம்போல் சீறினான் சிதறிய வாளாலே
மகா காளனையிப்போ வாளுக்கு யிரையிட்டு

வேடர்கள் அஞ்சி ஓடுதல்

மற்றுமுள்ள வேடர்களை மண்ணில் விழத்தானடித்து
வேடர்கள் எல்லோரும் வெ(கு)ண்டு மிகஓடி
கானகத்தே ஓடிக் கடுஞ்செடியில் போய்மறைந்தார்

வெற்றிவாகை சூடிய வராங்கன்

காட்டகத்து வேடர் கடிந்தோடிப் போனபின்பு
வேந்தன் வராங்கனும் வீரியத்தினால் விளங்கி
கதிர்வாளை யப்போது கடுகி உறையிலிட்டு
[68]வேங்க மகாராசன் காட்சியுடன் தான்வந்தார்

சாகரவிருத்தியும் மற்றவர்களும்

சாகரவிருத்தியென்னு தனைவசியன் ஓடிவந்து
[69]வேங்க மகாராசனை வரிசையுடன் தான்தழுவி
சந்தோசம் சொல்லினார் சதிருடனே தான்புகழ்ந்தார்
[70]நன்று துயரமும் நடு(க்க)முந் தானீங்கி
[71]அணியழக காரையும் அன்புடன் னெதிர்ப்பட்டு

கடுகி — விரைந்து. உற்றவன் — சுற்றத்தான். வெகுண்டு — கோபங்கொண்டு. கானகம் — காடு. கடிந்தோடி — விரைந்து ஓடி. வீரியம் — வலிமை, வீரம். கதிர்வாள் — ஒளிபொருந்திய வாள். கடுகி — விரைந்து. சாதரவிருத்தி — வாணிகக் கூட்டத்தாரின் தலைவன். வைசியன் — வணிக சாதியான். வரிசையுடன் தான்தழுவி — பல்வேறு சீர் வரிசைகளுடன் சென்று கட்டித் தழுவி. சதிர் — பெருமை, துயரம் — துன்பம்.

Kāḷaṉ[47] huge and massive, greatly enraged,
'My brother dear as my life,
He who killed that Kāḷaṉ quickly shall I,
Put him to my sword' said the huge Kāḷaṉ
'Come have I, I have come' snarled he at Varāṅkaṉ.

Varāṅkaṉ kills the hunters' chief

'Can you run away after killing Kāḷaṉ the great,
Can you leave? I won't allow you to go,
Come have I hither to take your life,'
The hunter great on Varāṅkaṉ noble
Shower of arrows did he shoot;
Snarling like lion Varāṅkaṉ brandished his sword,
And made Kāḷaṉ huge a victim of his sword.

Other hunters flee in panic

Knocked the other hunters to fall down on ground,
The angry hunters fleeing fast,
Ran in the forest and in vegetation thick vanished.

Varāṅkaṉ with the laurel of victory

On the hunters of the jungle running away in great hurry,
King Varāṅkaṉ in bravery excelling,
Sheathed quick his sword bright,
Arrived the valorous king showily indeed.

Cākaraviruti[48] and others

Cākaraviruti the chief of traders, a trader rich, ran thither
Brought he gifts many and hugged Varāṅkan the king,
His happiness he conveyed, praised him high

'Distress and trepidation removed quite well,
Women-folk be-jewelled kindly show up,

47. Kālaṉ — a hunters' chief. 48. Cākaraviruti — the traders' chief.

பொன்னும் பொருளும் பொறுத்த யென்சீவனும்
உத்தம புருசத்தின் ஒன்னாலே நான்பெத்தேனென்று
நீயெனக்குத் தானே நிதானமாய் சிரேஷ்புத்திரன்
புத்திரனும் நீயென்று மெத்த மனமகிழ்ந்து

வராங்கனைப் புகழ்ந்து செட்டிப் பட்டம் கட்டுதல்

சாகர விருத்தியும் தன்னால் மனமகிழ்ந்து
வேந்தன் வராங்கனை வீரியமாய்க் கொண்டுசென்று
வைசியர்கள் எல்லோரும் வரிசையுடன் தான்போகி
சாத்துக்கள் அண்டையிலே சாகர விருத்தியும்
வேங்க மகாராசனும் மகிழ்ச்சியுடன் தான்போகி
தன்மனுசர் நொந்தாரை தர்மமாய் ரட்சித்து
சேர்ந்தாரைச் சங்கரித்து சேர்ந்ததொரு மத்தானான்
சாத்துக்கள் தானெடுத்துத் தக்கவகை தான்போக
சாத்துக்கள் லலிதபுரம் சம்பிர(ம)முடன் சேர்ந்தார்கள்
வேந்தன் வராங்கனை வீரியமாய்க் கொண்டுசென்று
வைசியர்கள் எல்லோரும் விசையுடன் தான்போகி
வேங்க மகாராசனும் மகிமையது நோக்கி
எம்மையெல்லாம் ரட்சியு மென்றுசொல்லி வர்த்தகர்கள்
செட்டிப் பட்டம்கட்டினார் செல்வன் வராங்கனுக்கு
பெரிய செட்டிப்பட்டம் பிரபலமாய் கட்டினார்
வராங்க [72]ராசமகன் மகிழ்ச்சியுடன் தானிருந்தார்

தர்மசேனன் மகனைத்தேட தூதுவரை அனுப்புதல்

உத்தம பட்டணத்தில் உயர்ந்த நகர்தனிலே
தர்மசேன மகாராசன் தன்புத்திரன் வராங்கனை
காணாததால் மெத்த கனத்த துயரமதாய்
ஏதேது சொல்லியவர் யெடுத்துரைத்தா னிப்போது
புரந்தரனோ விஞ்சையனோ பொய்க்குதிரை யாய்வந்து

சீவன் — சீவான்மா. உத்தமபுருசன் — தேகலட்சணமுடையவன். புத்திரன் — மாணாக்கன். வீரியம் — வீரம். வைசியர்கள் — நால்வகை வருணத்துள் தனவைசியர், பூவைசியர், கோவைசியர் என்ற முப்பிரிவுள்ள வணிக சாதியான். சாகரவிருத்தி — வாணிகக் கூட்டத்தாரின் தலைவன். சாத்துக்கள் — வாணிகக் கூட்டத் தார்; வியாபாரிகள். நொந்தார் — பகைவர். இரட்சித்து — காப்பாற்றுதல். சங்கரித்தல் — அழித்தல். சம்பிரமம் — களிப்பு. செட்டி — வியாபாரிகளின் பட்டப்பெயர்; வைசியன். புத்திரன் — இந்திரன். விஞ்சையன் — பதினென்கணத்துள் ஒருசாரார். உபாயம் — சூழ்ச்சி. புரவி — குதிரை.

Gold and wealth and my life,
Got them back because of you, man so virtuous
Thou art indeed my noble son,
Son you are', said he happily.

Varāṅkaṉ felicitated and conferred with the title of ceṭṭi

The traders' chief in joy spontaneous,
Led Varāṅkaṉ heroically,
Accompanied by traders all with gifts,
Near the merchants, the traders' chief
And the king Varāṅkaṉ in happy company
Walked Varāṅkaṉ gladly indeed
'Destroyed he the foes of the traders,
Did he protect justly the merchants and kin
Enabled the Cāttuvars to pursue their way proper'
That king Varāṅkaṉ did they lead with pride,
And reached Lalitapuram in splendour great,
The traders all with gifts hurried
Aware of the honour was king Varāṅkaṉ,
'Protect us all' pleaded the traders,
Conferred on Varāṅkaṉ, the traders,
Conferred on Varāṅkaṉ the title of ceṭṭi
'Periya ceṭṭi' was he entitled with fame,
Ever so happy, was Varāṅkaṉ, the king's son.

Tarumacēṉaṉ sends messengers to search for his son

Meanwhile at Uttamapuram the city exalted,
Tarumacēṉaṉ the king unable to see Varāṅkaṉ his son
Feeling quite sad on missing him,
Spoke he many things and said then
'Has Purantaraṉ[49] or Vincaiyaṉ[50] in disguise as a horse false,

49. Purantaraṉ — Intiran, the chief of Tevars. 50 Vincaiyaṉ — A member of one of the eighteen divine sects.

உத்தம ரென்மகனை உபாயமாய் கொண்டுசென்றார்
என்று மதிமயங்கி யேங்கிய துயரமதாய்
ஆள்பேரையு மப்போ அழைத்து மிகக்கூறுவார்
வேங்கனை கொண்டுசென்று வழிபோன தன்புரவி
பொல்லாத தன்புரவி போனவழி பாருமென்றார்

தூதுவர்கள் வழியில் ஆபரணங்களைப் பார்த்தல்

அப்போது ஆள்பேரும் அந்த திசைநோக்கி
புரவி போனதிசைக்குப் போனார்கள் தூதுவரும்
சிறுதிடம் போனபின்பு செல்வன் வராங்கனிட
ஆபரண மெல்லாம் அதிகமுள்ளில் [73]அற்றுவிழ
விழுந்து கிடந்தது வராங்கனுட ஆபரணம்

குளத்தில் இறந்துகிடக்கும் குதிரையைத் தூதுவர்கள் காணுதல்

[74]கிடக்கவே தூதுவரும் கனத்த துயரமதாய்
ஆபரணம் கண்டு அந்நெறியே தான்சென்று
அவ்விடமே போகையிலே அதிக [75]பழந்துரவில்
மரண மடைந்திருக்க மன்னன் புரவிதன்னை
கண்ணால் தாங்கள்கண்டு கருதி மனந்தளர்ந்து
மெத்த மனங்கலங்கி மீண்டுவந்த தூதுவரும்

தூதுவர்கள் ராசாவிடம் செய்தியைக் கூறுதல்

தர்மசேன ராசனுக்கு தாங்கள் வந்துகூறுவார்
வேந்தன் வராங்கனை வீரியமா யப்புரவி
அதிசயமா [76]யிருந்த அடவிலே கொண்டுசென்று
அக்காட்டில் விழித்திருக்கும் அதிகமொரு துரவில்
கோமான் வராங்கன் குதிரையுடன் தான்கூட
மரணமாய் கண்டேனென்று மகாராசனுக் குரைத்தார்

தேவியர்கள், மக்கள், ராசா முதலானோர் துயரமடைதல்

கேட்டு மகாராசன் கிலேசமிக உண்டாகி
மெத்த துயரமுடன் மேனி பொறுக்காமல்
மாண்டா னெனக்கேட்டு மன்னவனும் தேவியரும்

நெறி — வழி, பழந்துரவு — பாழடைந்த பெருங்கிணறு. வீரியம் — வளமை. அடவி — பெருங்காடு. கிலேசம் — துயரம்; சஞ்சலம். பொறுக்காமல் — தாங்க முடியாமல். மாண்டான் — இறந்தான்.

Whisked away my son virtuous in a conspiracy vile!'
Thought he in a daze and in longing grief,
Summoned his retinue and said he firmly,
'The horse that has gone away with the king,
The course of that wicked horse, trace and find', said he.

The messengers find jewels scattered on the way

Then set out in that direction, the entire retinue,
Following the path taken by the horse, the messengers moved
Passing a distance short, found there
Varāṅkaṉ's jewels, snapped and lying on thorns,
Lay there the jewels of Varāṅkaṉ.

The messengers see the horse lying dead

The jewels thus lying the messengers much grieved,
Seeing the jewels, and following that direction,
Going that way beheld in a well disused,
The king's horse quite dead
Seeing with their own eyes and depressed.
Deeply anguished did the messengers return.

The messengers apprise the king of the sad news

And told Tarumacēṉaṉ the king, the messengers thus,
Violently has the horse carried Varāṅkaṉ away,
Taken him through the jungle strange,
And in a well gaping in that forest,
King Varāṅkaṉ along with the horse
Found dead' said the messengers to the king..

The queen, citizens and the king are grieved

Hearing the news, the king so shocked,
Quite in grief, his body unable to bear it,
The news of his death learning which the king and queens,

நகரப் பரிசனமும் நன்மையுள்ள [77]சேவகமும்
எல்லோரும் தாமலறி யிருக்குமந்த வேளையிலே

வராங்கனின் மனைவி ராசாவின் பாதத்தில் விழுதல்

வராங்கனிட [78]தேவிமார் வந்துவெகுத் துயரமாய்
தர்மசேன ராசனுடைய பாதத்தில் தான்விழுந்தார்
தீட்சை கொடுக்கவென்று திகைத்து மனநொந்து
எல்லாத் துயரமதாய் யேங்கி மிகயெழுந்தார்

ராசாவும் தேவியர்களும் வர்த்தமா முனியை வணங்குதல்

தர்மசேன மகாராசன் தனக்குப் பொறுக்காமல்
மெத்தத் துயரமதாய்ப் பிரியமாய் தானலற
வராங்கனிட தேவியரை மகாராசன் வரவழைத்து
தர்மசேன ராசனும் தனது மனங்கலங்கி
வர்த்த மாமுனியை வந்து நமஸ்கரித்து
வராங்கனிட தேவியர்கள் வர்த்த மாமுனியை
நமஸ் கரித்துமவர் நலமாகக் கூறுவார்

மகாமுனியின் நற்செய்தி

வராங்கனிட சரித்திரமும் வகையுடனே தான்கூற
தீட்சை வராங்கனிட தேவியர்க்குச் [79]செய்யுமென்றார்
கேட்கிறார்கள் என்றுமிகக் கிலேசமத்துக் கூறுவார்
அப்போ முனிவரனும் அதிசயமாகக் கூறுவார்
நல்ல நிமித்தங்கள் நலமுடனே காட்டுதென்று
வராங்க மகாராசனை மகிழ்ச்சியுடன் காணலாம்
சுகமே யிருக்கிறார் சொல்ல மகாமுனியும்

விரதம் கடைபிடித்தல்

தர்மசேன மகாராசன் தழைக்க மனமகிழ்ந்து
சாகாரம் அனாகாரம் தருமம் மிகக்கேட்டு
மநுக்களுக் கேற்ற மகிழ்ச்சியுடன் விரதங்கள்
எல்லாங் கைக்கொண்டு மியலாகத் தான்வந்து
பிரம்மாக்களை எல்லாம் வரவழைத்துக் கொண்டுசென்று

பரிசனம் — பரிவாரம். தீட்சை — விரதம். பொறுக்காமல் — பொறுக்க முடியாமல், தாங்கமுடியாமல். துயரம் — சஞ்சலம். நமஸ்கரித்தல் — கீழே விழுந்து வணங்குதல். கிலேசம் — துக்கம். நிமித்தங்கள் — சகுனங்கள், சாகர்ரம் — துயில் ஒழிகை, அநாகாரம் — உணவின்மை; வடிவின்மை. தருமம் — நற்செயல். மநு — மனிதர்களைப் படைக்கும் 14 ஆதி அரசர்கள். விரதங்கள் — புண்ணியம் ஏழனுள் ஒன்றான தவம்.

The people of the city and servants loyal
Wailed all of them and in such a juncture.

Varāṅkaṉ's spouses fall at the feet of the king

Arrived Varāṅkaṉ's spouses, ever so gloomy,
Fell they at the feet of Tarumacēṉaṉ the king;
Dazed with mental agony did they come for the tītcai[51]
With sorrow great did they rise.

The king and queens pay obeisance to Varttamāmuṉi

Tarumacēṉaṉ the king unable to bear
Wailed he loud with grief and affection

Did the King bring Varāṅkaṉ's spouses
Tarumacēṉaṉ his mind perturbed,
Before Varttamāmuṉi did he prostrate,
Varāṅkaṉ's wives too prostrating likewise,
Before Varttamāmuṉi and said gently.

Varttamāmuṉi assures good news

Varāṅkaṉ's story did they narrate in sequence proper,
Tītcai did they request for Varāṅkaṉ's spouses,
On their praying thus uttered he without sorrow,
'Omens auspicious augur well,
Varāṅkaṉ the king will be seen alive and safe;
In perfect health is he', said the saint great.

Observance of the vows

Tarumacēṉaṉ the king in happiness flourishing,
Sleeplessness, starvation and good deeds such did he learn
Happily the vows meant for public good,
Did he adopt them all and properly,
Brought Brahmas holy all of them

51. Tītcai — initiation of a rigorous vow.

தர்மசேன ராசன் தன்மனையில் வந்துசென்று
தான சீலங்களுடன் தழைக்க முபவாசமும்
எல்லா நடத்தியப்போ யினிதுசெல்லும் காலத்தில்

இந்திரசேனன் படையெடுப்பை தூதுவர்கள் தேவசேனனிடம் கூறுதல்

நன்னகரம் ராசியத்தில் நலமாய் லலிதபுரம்
அன்னகரில் மன்னனும் அதிகதேவ சேனனென்பான்

தூரத்தில் போன தூதுவர்கள் ஓடிவந்து
ஏதே துரைத்தார்கள் யின்பமுட னப்போது
கெசசனத் துங்கனென்று கேட்டு அதுவேண்டி
படையெடுத்து யிந்திரசேனன் பராக்கிரமாய் அப்போது
வருகிறா ரென்றுமவன் [80]வனதூதர் தான்சொல்ல

எதிரியை வென்றவனுக்கு நாடும், மகளும்

தேவசேன மகாராசனுக்குச் சேர்ந்த துயரமதாய்
அவனோடு யுத்தஞ்செய்ய ஆகாது நம்மாலே
நம்மிட ராசியத்தில் நலமாகச் செயித்தவர்க்கு
என்மகளையு னான்கொடுத்து மாநில ராசியத்தில்
அர்த்த ராசியமும் அவருக்கே நான்கொடுப்பேன்

பட்டண வீதியில் பேரீமுரசு தானடித்தார்

வராங்கன் இந்திரசேனன் மேல் படையெடுத்தல்

அப்போ வராங்கனும் அதுசப்தம் தான்கேட்டு
முரசறைந்த பேர்களை முயற்சியுடன் கையமர்த்தி
ஆனையுடன் தேர்புரவி அதிக பிரபலமாய்
காலாளும் வில்லாளும் கனத்த புரவிகளும்

[81]எல்லாரும் சூழுமந்த வேந்தன் வராங்கனும்
இப்பரிசினார் சென்று யியல்சாமர் பூமிக்கு
இந்திர சேனனோடு யெதிர்த்து வராங்கனும்

தானசீலம் — கொடை குணம். உபவாசம் — உண்ணாவிரதம். தூதுவர்கள் — தூதர்கள். கெசசனத் துங்கன் — யானைபலம் ஒத்த மக்கள் தலைவன். பராக்கிரமம் — வீரம், வல்லமை. வனதூதர் — காட்டில் இருந்து பணிசெய்கின்ற தூதுவர்கள். துயரம் — வருத்தம். யுத்தம் — போர். ராசியம் — நாடு. அர்த்த — பாதி. பேரிகை + முரசு — பேரிமுர்சு. பிரபலம் — வல்லமை. காலாள் — வீரார்கள். வில்லாள் — வில்படை. கனத்த — அதிகமான. பரிசினார் — தன்மை உடையவர். சமர்பூமி — போர் நடக்கும் இடம்.

Tarumacēṉaṉ the king at his residence royal,
In disposition charitable and fasting for welfare,
As he thus observed all the vows nicely.

Messengers inform Tēvacēṉaṉ of Intiracēṉaṉ's invasion.

In the Kingdom of Naṉṉakaram was the city of Lalitapuram,
In that city was the ruler Tēvacēṉaṉ the king
Emissaries gone far returned running,
Spoke they severally and clearly then,
'On hearing the valour elephantine of the people's leader,
Intiracēṉaṉ has launched his invasion brave
On his way is he thus' said the forest based messengers.

Kingdom and daughter offered to defeat the enemy

Tēvacēṉaṉ the king in distress great,
'We cannot fight against him
Whoever in our kingdom emerges victorious
Shall I reward with dear daughter mine,
And half of my kingdom too do I offer'
Thus did he announce by drumming in the streets of the city.

Varāṅkaṉ launches an attack against Intiracēṉaṉ

Varāṅkaṉ on hearing that message loud,
Summoned drummers to announce his efforts in that regard,
Elephants, chariots and horses in good number,
Infantry, archers and horses stout,
All gathered around Varāṅkaṉ, who
In readiness such, the battle field reached,
Varāṅkaṉ thus opposing Intiracēṉaṉ.

பலவகைப் படைகளும் போரிடுதல்

எதிர்த்து யிருவரும் எதிரிகளும் தானுமாய்
[82]ஆனையும் யானைகளும் அதிர யெதிர்பாய
தேருடன் தேரும் திரளா [83]யெதிர்பாய
பரியும் பரியங்கே பகைத்து தடுமாற
படையும் படையுமிக பார்மீதிலே யலைந்து
பாயக் கணைகள் மெத்தப் பருவியவாள் பட்டுருவி
விட்ட கணைகளப்போது விபரீதமாய் தான்பாய
[84]தேரேரி வருவார்கள் திரள்வீர ரெல்லோரும்

போரின் அவலக் காட்சிகள்

பாய கணைகள்மெத்தப் பருநிலத்தில் தானுருள
சிரசுகள் தானிழந்து செல்வரச ரெல்லோரும்
தலைக ளுருளவும் தனியே உடல்புறழ
கால்க ளொடிந்தாரும் [85]தயங்கியே நிற்பாரும்
கண்க ளிற்றுவிழக் கைகள் நடுங்கிவர
தோள்க ளொடிந்தாரும் துக்கப் படுவாரும்
சிலைகள் முறிந்தாரும் திக்கெங்கும் பார்ப்பாரும்
[86]செங்குருதி போலே சேரப் பெருகிவர
[87]கூகைகளும் கழுகுகளும் பெருக்கவே கூத்தாட
பறவைக ளாடிவரும் பறந்து கலந்தாட

இந்திரசேனன் படை தோற்றோடுதல்

இந்திர சேனனப்போது யெதிர்த்த மகாசேனை
எதிராக நில்லாமல் யெல்லாம் பறந்தோட
சிந்து சிந்தாகவே திகைத்து அதுவோட
இந்திர சேனைப்படையும் யெங்கும் திகைத்தோட

வராங்கன் வெற்றிவாகை சூடுதல்

வேந்தன் வராங்கன் மிகவும் மனமகிழ்ந்து
வேந்தனும் அப்போது வீரத்துவம் விளங்க
[88]விசயன் வராங்கனும் வீரியப் பெருங்கடல்போல்
மெத்த மகிழ்ச்சியுடன் வீரியது முழங்க

பரி — குதிரை. கணைகள் — அம்புகள். பருவியவாள் — பெரிய வாள். பரு நிலத்தில் — பெரிய பூமியில். சிலை — வில், கூகை — கோட்டான். இந்திரசேனன் — தேவ சேன மகாராசன் மேல் படையெடுப்பவன். தேவசேனன் — வராங்கனின் மாமன். சிந்து — சிதறுபடுதல். வீரியம் — வலிமை; வீரம்.

Various fighting units clash

One against the other both, foes and selves,
Clashed the elephants in thunderous uproar
Chariots in great number in collision head on,
Horses hostile struggling in the charge,
Armed men on both sides roaming all over,
Arrows piercing the swords big,
The deflected arrows hitting at random strange,
The chariot-borne men, soliders all.

Tragic scenes of the battle

Arrows whizzed past and pinned the battle ground huge,
Beheaded fell, kings all
Heads rolling and trunks tossing,
Men with fractured legs and those standing dazed,
Eyes gouged out and hands trembling,
Men with shoulders snapped and those in despair,
Some with their bows broken and some looking around in all directions,
Crimson blood flowing like flood,
Owls and vultures in great number dancing,
Birds mingling as if in a group dance.

Intiracēṉaṉ's army gets defeated and flees

Intiracēṉaṉ by a huge army confronted,
Without opposing fled all his men,
Scattered ran they perplexed,
The army of Intiracēṉaṉ in disbelief ran.

Varāṅkaṉ crowned with the laurel of victory

